படைப்பு
ஊற்று-5 | நதி-1 | மே-2022 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

## அம்மையார் ஹைறுான்பீவி நினைவு
## சிறுகதைப் பரிசுப்போட்டி முடிவுகள் 2022



நடுவர் :
எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அவர்கள்
(சாகித்ய அகாதமி விருதாளர்)



படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-5 | நதி-1 | மே 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர் :
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**ஸ்டெல்லா தமிழரசி**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**

முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**

ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575



நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.


## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **அம்மையார் ஹைநூன்பீவி நினைவு ‘சிறுகதைப் பரிசுப்போட்டி’ முடிவுகள் 2022** -பக். 05
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை** – மு.முருகேஷ் -பக். 29
- **தலைக்குள் நீளும் கிரீடத்தின் முட்கள்** – கவிஜி -பக். 35
- **மனநிலைக் குறிப்புகள்** – ஆதிரன் -பக். 38
- **இயற்கையின் தூதுவர்கள்** – கோ.லீலா -பக். 47
- **‘தேவைக்குத்தான் பசியாற்றமுடியும்.. பேராசைக்கல்ல’** – விஜயராணி மீனாட்சி -பக். 50
- **தேநீர் சாலை** – கரிகாலன் -பக். 52
- **டால்ஸ்டாயைக் கண்டறிந்தேன்** – தரணி லெட்சுமணன் -பக். 54
- **‘இரண்டு கவிதைகள் எழுதிவிட்டால் உடனே திரைப்படப் பாடலாசிரியராக ஆகிவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள்..’** – படைப்பாளர் வேல ராமமூர்த்தியுடனான நேர்காணல் -பக். 59

## சிறுகதைகள்


- **மேய்ப்பன்**
  – ப்ரீத்தி வசந்த் -பக். 06
- **அபுக்கா**
  – முகமது பாட்சா -பக். 14
- **சாட்சி**
  – கலையரசி ஜி -பக். 19
- **அந்நிய மண்ணில்**
  – ஹமீது தம்பி -பக். 56


## கவிதைகள்


- **தமிழ்மணவாளன்** -பக். 27
- **க. அய்யப்பன்** -பக். 27
- **ஜெயாபுதீன்** -பக். 28
- **மகேஷ் சிபி** -பக். 28
- **சௌவி** -பக். 28
- **ஷெண்பா** -பக். 28
- **ரிஸ்கா முக்தார்** -பக். 45
- **மு.முகமது ஃபாருக்** -பக். 46
- **வீரமணி** -பக். 46
- **சாண்டில்யன் விவேகானந்தன்** -பக். 46
- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 20**
  – ஜின்னா அஸ்மி -பக். 63

## தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' நாற்பத்தொன்பதாம் இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது. தங்களது பேராதரவுடன் தகவு இதழ் ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்துவைக்கிறது. ஆதரவளிக்கும் அனைவருக்கும் நன்றிகள்.

அம்மையார் ஹைநூன்பீவி நினைவு சிறுகதைப் பரிசுப்போட்டியின் முடிவுகள் இவ்இதழில் வெளியாகியுள்ளன. எழுத்தாளர் நாஞ்சில் நாடன் பரிசுக்குரிய சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்துத் தந்துள்ளார்.

ப்ரீத்தி வசந்த் எழுதியுள்ள மேய்ப்பன் சிறுகதை முதல் பரிசு பெற்றிருக்கிறது. யாருமற்றுப் போனதால் தீர்த்துவிடத் துடிக்கும் வாழ்வில் நுழையும் தாத்தா.. தன் பணியையும் உடன் விட்டுச் சென்றுவிடுகிறார். சராசரி மனங்களினால் ஏற்க முடியாத அப்பணியை ஜனா இயல்பாக ஏற்கிறான். அவன் இயல்பாக இல்லை என்பதை உணர்த்தும் இறுதிக் கட்டம் அதிர்ச்சியைப் பரிசளிக்கிறது. வித்தியாசமான பணிச்சூழல், அது உணர்த்தும் பணி நுட்பங்கள், குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கான சமூக நிலை என்றே பயணித்த சிறுகதை இறுதிக்கட்டத்தில் தனிமனிதனின் உளச் சிக்கலில் வந்து முடிகிறது. இந்த மாறுபட்ட பயணம்தான் முதல் பரிசுக்குரியதாக இந்தக் கதையைத் தேர்ந்தெடுக்கக் காரணமாயிருந்திருக்கும்.

முகமது பாட்சா எழுதிய அபுக்கா சிறுகதை இரண்டாம் பரிசு பெற்றிருக்கிறது. அபுக்கா என்ற மனிதனின் ஒரு குறிப்பிட்ட வாழ்காலத்தைப் பதிவு செய்வதாகத்தான் கதை தொடங்குகிறது. ஆனால் அவனுக்குள் புதைந்துள்ள ஏதோ ஒரு காலத்தைக் கண்டெடுப்பதாகக் கதை முடிகிறது. இயல்பான மனிதர்களைவிட ஆழமான அன்புப் பிணைப்பினால் அவனால் கட்டுண்டுவிட முடிகிறது. தோற்றத்தினால் ஒதுங்கிய மக்களை அன்பினால் நெருங்கவைக்க முடிகிறது. ஆனால் அவன் இயல்பான மனிதனல்லன். அந்த இயல்பின்மைதான் அன்புக்காகக் கொலைகூட செய்யவைத்து விடுகிறது. ஒரு தனி மனிதனின் கதை சமூகத்தின் ஒரு அழுக்கான பக்கத்தினை அடையாளப்படுத்தி முடிகிறது.

கலையரசி ஜி எழுதிய சாட்சி சிறுகதை மூன்றாம் பரிசு பெற்றிருக்கிறது. சாதி மையமான இச்சமூகத்தில் ஆணவக் கொலை குறித்த பெரும் அச்சம் எங்கும் நிலவிவருகிறது. கல்வி சாதியின் கொடூரத் தாக்குதல்களைத் தடுக்கும் கருவியாகப் பயன்பட்டாலும், நகரமயமாக்குதலில் சாதியின் அடையாளங்கள் சிறிது மறைந்தாலும் ஆணவக் கொலைகள் நிகழும் சமூகத்தில்தான் நாம் வாழ்ந்துவருகிறோம். கண்முன்னே காதலனின் கொலைகண்ட பெண் கொலை செய்த அப்பாவை மன்னிப்பாளா.. தண்டனை வாங்கித் தருவாளா.. இதுதான் கரு. இடையில் பகடையாய்ப் பயன்படுத்தப்படும் அம்மாவும் சுயநலமாய்ப் பேசும்போது சமூகத்தின் பொதுக்கருத்தாக்கங்கள் மீதான நம்பிக்கையின்மை பலப்படுகிறது.

பரிசு பெற்ற இம்மூன்று சிறுகதைகள் இவ்இதழில் வெளியாகியுள்ளன. தற்காலச் சமூகத்தின் கொடூர முகங்களின் தரிசனங்களை மிக எளிய முறையில் வெளிப்படுத்தியுள்ள சிறுகதைகள்.

இம்மாதத் தகவின் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர்.

# அம்மையார் ஹைநூன்பீவி நினைவு
# சிறுகதைப் பரிசுப்போட்டி-முடிவுகள் 2022

படைப்புக் குழுமம் சிறுகதை இலக்கிய வகைமைக்குப் பங்களிக்கும் வகையில் 'சிறுகதைப் பரிசுப்போட்டி'யினைத் தொடர்ந்து நடத்திவருகிறது. படைப்புக் குழுமத்தின் முக்கிய அங்கத்தினரான சகா என்ற சலீம்கான் தன் தாயார் நினைவாக இந்தச் சிறுகதைப் போட்டிக்கான பரிசுத் தொகையினை வழங்குகிறார்.

சாகித்ய அகாதமி விருது பெற்ற, தமிழின் தனிச்சிறப்பு மிக்க எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அவர்கள் நடுவராகப் பங்கேற்றுப் பரிசுக்குரிய சிறுகதைகளைத் தெரிவு செய்துள்ளார். முதல் மூன்று பரிசு பெற்ற சிறுகதைகள் சான்றிதழ்களுடன் இவ்விதழில் வெளியாகின்றன. சிறப்புப் பரிசு பெற்ற சிறுகதைகள் அடுத்த இதழிலிருந்து வெளியாகும்.

## பரிசு விவரம்

| | |
|---|---|
| மொத்தப் பரிசு | : 40,000 ரூபாய் |
| முதல் பரிசு | : 20,000 ரூபாய் |
| இரண்டாம் பரிசு | : 10,000 ரூபாய் |
| மூன்றாம் பரிசு | : 5000 ரூபாய் |
| சிறப்புப் பரிசு | : 5 நபர்கள் - தலா 1000 ரூபாய் |

படைப்பு விழாவன்று பரிசுத் தொகையும்
சான்றிதழும் நேரில் வழங்கப்படும்.

## பரிசு பெற்ற சிறுகதைகள்

**முதல் பரிசு : மேய்ப்பன்**
(எழுத்தாளர் : ப்ரீத்தி வசந்த்)

**இரண்டாம் பரிசு : அபுக்கா**
(எழுத்தாளர் : முகமது பாட்சா)

**மூன்றாம் பரிசு : சாட்சி**
(எழுத்தாளர் : கலையரசி ஜி)

## சிறப்புப் பரிசுகள்

மகேஸ்வரி @ மரியம் (எழுத்தாளர் : குடந்தை அனிதா)
குருத்து அகம் விரித்து (எழுத்தாளர் : நெய்வேலி பாரதிகுமார்)
காலத்தச்சன் (எழுத்தாளர் : அன்பு மணிவேல்)
காக்கா பொன் (எழுத்தாளர் : ந.சிவநேசன்)
பாளை (எழுத்தாளர் : அருள் வடிவேல்)



முதல் பரிசு
பெற்ற சிறுகதை

ப்ரீத்தி வசந்த்




# மேய்ப்பன்

இன்று சீக்கிரத்திலேயே விழிப்பு வந்துவிட்டது. ஜன்னல் வழியாக மீனு வாசல் தூர்த்துவிடும் சத்தம் கேட்டதும் தினமும் இது போல சீழ்ப்பட்ட மனதையும் யாராவது வாரித் தூர்த்துவிட்டால் எத்தனை தோதாக இருக்கும்.. என ஒரு கணம் நீண்ட யோசனையில் ஆழ்ந்தவனின் கவனத்தை செல்போன் அழைப்பு கலைத்தது.

‘சொல்லுங்க சார்...!’

மறுமுனையில் தேவராஜன் ஏதோ சொல்ல, ‘சரி சார் வரேன்!’ என்று செல்போனை அணைத்துவிட்டு அவசர அவசரமாக வேலைக்குக் கிளம்பினான்.

‘மீனு.. சாப்பிட்டுப் படுத்துத் தூங்கு.. சார் அவசரமா கூப்பிடறார்.. நான் எப்போ வருவேன்னு தெரியாது.. பத்திரமா

இருக்கண்ணும்!', என்று வேலைக்குப் புறப்பட்டுச் சென்றான்.

வெள்ளை டைல்ஸ் எது வெள்ளைச் சுவர் எது என்றே தெரியாத நிறத்தில் மாறியிருந்த அறையில் மங்கலான விளக்கு ஒளியின் வெளிச்சத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தான் ஜனா. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் 'என்ன ஜனார்த்தனா, ஆச்சா..?' என்று சற்றுத் தள்ளி அமைந்திருக்கும் பக்கத்து அறையிலிருந்து சத்தமாகக் குரல் கொடுத்தார் தேவராஜன்.

'இருங்க சார்.. சும்மா ஆச்சா ஆச்சான்னு கேட்டுக்கிட்டு! இங்க என்ன கமகமன்னு சமையலா பண்ணிக்கிட்டு இருக்கேன்!'

'சரி சரி ரொம்ப பிகு பண்ணிக்காத ஜனா.. வெளில ஆளுங்க கூடிட்டாங்கடா.. எல்லாம் நமக்காகத்தான் வெயிட்டிங்..!'

'ஹம்ம்கூம் அவனவனுக்கு அவனவன் பிரச்சனை!!' என்று முனங்கியபடி அவன் எதிரே இருந்த பிரேதத்தை அனாயாசமாகப் புரட்டிக் கழுவித் துடைத்துக்கொண்டிருந்தான்.

'சாவுற வரைக்கும் அவசரம் அவசரம்ன்னா செத்ததுக்கு அப்புறமும் அவசரப்படுத்துறானுங்க.. கட்டைல போறவனுங்க..' என்றார் ஜனாவுக்கு உதவியாக அருகில் நின்றிருந்த ரகுசாமி. ஜனா வேலை கற்றுக்கொண்டது ரகுசாமியிடமிருந்துதான். இப்போது அவருக்கு வயசாகிவிட்டதால் அவர் தலைமையில் எல்லாமே ஜனாதான்.

'கட்டைல இல்ல தாத்தா இப்போவெல்லாம் கரண்டுல போறானுங்க!' என்று மெலிதாகச் சிரித்த ஜனாவைப் பார்த்து, 'சும்மா சொல்லக்கூடாது.. நல்லா தேறிட்டடா மவனே.. நாளைக்கு எனக்கும் நீயே பாத்துப் பண்ணிடு.. என்ன!' என்றார்.

'த்த.. காலைலயே என் வாயில வந்து விழாத தாத்தா.. உனக்கெல்லாம் ஒன்னியும் ஆவாது.. மூஞ்சைப் பாரு.. ந்தா இன்னொரு பக்கெட் தண்ணி மோண்டு தா!' என்று பிரேதத்தை இன்னொரு முறை தன் பக்கமாகத் திருப்பினான் ஜனா.

'யார்றா இவன்?! ஒன்னியும் ஆவாம இருக்க நான் என்ன சுவத்துல அடிச்ச ஆணியா! நேரம் வந்தா எல்லாப் பயலும் ஒருநாள் போயிதான் ஆவணும்!' சொல்லிக்கொண்டே பக்கத்து அறையிலிருந்து தண்ணீர் கொண்டு வர ஆடி அசைந்து சென்ற அவரது மெலிந்த தேகத்தைப் பார்த்ததும் பீறிட்டு வந்த அழுகையை அடக்கிக்கொண்டு ஓடினான் ஜனா.

வாழ்வின் சூட்சுமங்களில் ஒன்றான இறப்பைத் தினம் விதம் விதமாகப் பார்த்துப் பார்த்து அயர்ந்துபோன மனதுதான் என்றாலும் தன் கண் முன்னே தள்ளாடிச் செல்லும் ரகுசாமியின் தளர்ந்த முதுமையைப் பார்த்ததும் தாங்கமாட்டாமல் அழுகை வந்தது. உலகில் உள்ள அனைத்துக் கெட்ட வார்த்தைகளையும் சொல்லிப் பிரபஞ்சத்தைப் பழிக்க வேண்டும் போல இருந்தது.

'யோவ்.. தாத்தா.. இரு இரு.. நீ போற தினுசே சரியில்ல.. எங்கனா விழுந்து தொலைச்சிராத.. வேலைக்கு வராதன்னா கேக்குறியா.. இரு இரு.. நானே தண்ணிய எடுத்துன்னு வரேன்.. போ.. நீ ஓரமா உக்காரு..!' என்று அதட்டினான்.

'எனக்கென்னடா மவனே..?!'

'உனக்கு ஒண்ணுமில்ல சாமி.. உக்காரு. போ!' என்று தண்ணீர் எடுக்க அடுத்த அறைக்குச் சென்றான்.

வாழ்வின் எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்ட ஒரு சபிக்கப்பட்ட நடுநிசி நாள் ஒன்றில் கதியற்று நிலைக்குத்தித் தண்டவாளத்தில் நின்றிருந்தவனை முதுகில் தட்டி, 'சாவணும்ன்னு முடிவு பண்ணிட்ட.. சரி.. ஆனா பசியோட ஏன் சாவுற... என் வூட்டுக்கு வந்து ஒரு வாய் சோறு சாப்டுட்டு சாவு! வா!' என்று வீட்டிற்கு அழைத்துச் சென்றவர் ரகுசாமி. அன்று முச்சூடும் தாங்கமாட்டாமல் அழுதான் ஜனா.

‘நல்லா அழுவு.. அழுது தீர்த்துரு.. அப்புறம் இந்தச் சோத்த சாப்புடு.. வாழணும்ன்னு சொரணை வந்தா நீ பொழச்ச!’ என்று ஒரு தட்டு முழுக்கச் சோற்றை நிரப்பி அவன் முன் நீட்டினார். வேகமாய் அதை வாங்கி ஒரு வாய் எடுத்து உண்டவன் மீண்டும் அழ ஆரம்பித்தான். தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

‘நான் உன்னாண்ட ஏன் அழுவுற எதுக்கு அழுவுற.. ஒன்னியும் கேட்கமாட்டேன்.. என்னா பையா.. அழுது தீர்த்துட்டுச் சாப்பிடு.. படுத்துத் தூங்கு.. காலைல நான் வேலைக்குக் கிளம்பிப் பூடுவேன்.. சரியா?! ஆஹ்.. மறந்துட்டேன் பாரு.. ஒன்னே ஒன்னு.. நான் வேலைக்குப் போனதுக்கு அப்புறம் நீ பாட்டுக்கு எதனா யோசிச்சிக்கினு தனியா இருக்கச்சொல்லோ மனசு மாறி என் வூட்லயே தொங்கிடகிங்கிடப் போற.. இது என் வூட்டுக்காரிக்கு நான் ஆசையா கட்டுன வூடு.. வவுத்துல புள்ளைங்க கிள்ளைங்க ஒன்னியும் துளிக்கல.. ஒருநாள் அவளும் செத்து சாமியாகிட்டா.. நானும் அழுது ஓஞ்சு சாஞ்சு சர்தான் போ.. ஓடுற வரைக்கும் ஓடுது கட்டைன்னு வுட்டுட்டேன்.. அதனால உன் மனசு கினசு மாறுச்சுனா வூட்ட பூட்டிட்டு சாவிய.. தோ.. அந்த மரக்கட்டைமேல வெச்சுட்டுப் பூடு.. தண்டவாளம் இங்க இருந்து நாலு தெரு தள்ளி.. நாம இப்போ வந்த வழிலேயேதான் கீது.. இல்ல அது பிடிக்கலைன்னா ஒரு ஆத்துப்பாலம்க்கீது.. கொஞ்ச தூரம் நடக்கணும்.. என்ன..?!’ என்று படுக்கச் சென்றார் ரகுசாமி.

அவர் போனதும் மீண்டும் அழத்தொடங்கினான் ஜனா. சொல்ல எத்தனையோ கதைகள் இருந்தாலும் அமைதியாகக் கருத்து நீண்டு மீண்டும் எழும் இரவைப் போல, அடிவயிற்றின் ஆழத்திலிருந்து எதையோ சொல்ல வருவது போல வேகமாகப் புறப்பட்டு வீறிட்டு அழுகையாகக் கிளம்பும் ஆத்மத்தின் ஈனஸ்வரத்தைப் போல அர்த்தமானது வேறெதுவும் இல்லை என்று தோன்றியது அவனுக்கு. அன்றிரவு முழுக்க வேண்டிய மட்டும் அழுதவன், காலையில் ரகுசாமி எழுவதற்கு முன்னரே எழுந்து அமர்ந்திருந்தான்.

அவனைப் பார்த்ததும் ‘அட.. பொழைச்சிக்கின போல்து..!’ என்றார் ரகுசாமி.

‘நீ எங்க போற?’ என்று கேட்டவனை ஏற இறங்கப் பார்த்தார்.

‘அய்ய.. என்னாண்டையே கேள்வி கேக்குது பாருடா இது.. காலைல எங்க போவாங்க..? வேலைக்குத்தான் போவாங்க..!’

‘நானும் வரேன்..!’ சட்டமாகச் சொன்னான்.

சிரித்தார் ரகுசாமி.

‘டேய் மவனே..!’ அன்றுதான் அவர் ஜனாவை மவனே என்று அழைக்க ஆரம்பித்தது.

‘யார்றா நீ..?! குழந்தைப்புள்ள.. அங்கெல்லாம் நீ வரக்கூடாது..!’

‘நான் வருவேன்..!’ மீண்டும் சட்டமாகச் சொன்னான்.

‘அடிச்சேன்னா பாரு..’ என்று கையை ஓங்கினவர், ‘உன்ன எல்லாம் தண்டவாளத்துலயே வுட்ருக்கணும்.. தள்ளு..’ என்று அவனை ஒதுக்கிவிட்டுப் புறப்படப்பார்த்தவரின் காலைக் கட்டிக்கொண்டு அழுதான் ஜனா.

‘முடியாது நானும் வரேன்.. என்னையும் கூட்டிக்கினு போ. எனக்கு யாருமில்ல.. எல்லாரும் போய்ட்டாங்க. கண்ண மூடினா பயமா இருக்கு.. தனியா வுட்டுப் போவாத.. பயமா இருக்கு.. நீ எங்க போனாலும் நானும் வரேன்.. அப்படி என்ன சுடுகாட்டுக்கா போவப்போற.. அங்கயும் வருவேன்!’

அன்றிலிருந்து இன்றுவரை அவருக்கு எல்லாமே இவனும் இவருக்கு எல்லாமே அவனுமாக, அதற்கடுத்து வந்த கொஞ்ச காலத்தில் இவர்களுக்கென்றே ஜனாவின் ஆசை மனைவியாக மீனுவும் இவர்களோடு சேர்ந்துகொண்டாள்.

‘ஜனா ஆச்சா..’

தேவராஜனின் குரல் மறுபடி கேட்டது. இம்முறை கொஞ்சம் எரிச்சலாகத்தான் கேட்டது.

‘இந்தாளு வேற!’ என்று முனங்கியவன், ‘இருங்க சார் ஆகிரும்..’ என்று கத்தினான்.

‘ஏன் தாத்தா ஒருத்தன் பொறக்கணும்..? நொந்து நூலாகி நாயாய் அலைஞ்சி திரிஞ்சி லோல்பட்டு ஒருநாள் போய்ச் சேரணும்.. அவன் போய்ச் சேர்ந்ததப் பாத்து இன்னொருத்தன் மாருலயும் வயித்துலயும் அடிச்சிக்கிட்டு அழுவணும்... அழுது முடிச்சிட்டு மறுபடியும் அவனும் அதே மாதிரியே எதையோ தேடி அலையணும்... ஓடணும்.. இதெல்லாம் எவன் டிசைன் பண்ணது..?!’ என்றவாறு புலம்பியவன் கொஞ்சம் சுதாரித்துக்கொண்டு முகத்தைத் துடைத்துவிட்டு, பிரேதத்திடம் திரும்பி, ‘ஐய்ய.. உன்னப் பார்த்து அழுவறேன்னு நினைச்சியா.. என் தாத்தாவாண்ட பேசிக்கினு இருக்கேன்.. ஆனா உன்ன பாத்தாலும் எனக்கு ஒரு மாறிதான் ஆவுது..! நீ யாரோ? எவரோ? எவன் பெத்ததோ? எவன் கண்டான்..! கட்சீல பாரு இதான் உனக்கு நிலைமை..! இதெல்லாம் சொன்னா எவனுக்குப் புரியுது..? பணம் பணம்ன்னு அலையுறானுங்க! நீயும் அப்படிதான இருந்திருப்ப! உன்ன பாத்தாலே தெரியுதே!’ என்றான்.

‘அடேய்.. செத்ததைப் பழிக்கக்கூடாதுடா! பாவம் பிடிச்சுக்கும்! எங்க அம்மா சொல்லும்.. வேலையப் பாத்துச் சீக்கிரம் முடிச்சு விடுடா மவனே!’ என்றார் தாத்தா.

‘ம்ம்.. இதுக்கு மேலயும் பாவம் வந்து பிடிக்குது..!’ என்று முணுமுணுத்தான்.

‘ஆமா ஏன்டா இதுக்கு இத்தினி பக்கெட் தண்ணீ..? என்னெல்லாம் இப்படி படுத்தாதடா மவனே.. எனக்கு இத்தினி ஜில்லப்பு சேராது.. சும்மா ஒரு ஊத்து ஊத்தி அனுப்பிச்சு விட்டுடணும் புரியுதா..?’

‘உனக்கு நேரம் சரியில்ல.. சும்மா போயிரு தாத்தா..!’ என்று கத்தினான் ஜனா.


‘யோவ்.. அங்க என்னய்யா நைநைன்னு சத்தம்..’ என்று வெளியிலிருந்து கடுகடுத்தார் தேவராஜன்.

‘சின்ன பையன் சார்.. நான் கண்டி பேச்சு கொடுக்கலன்னா மிரண்டுடுவான் சார். இதெல்லாம் தொழில் சித்து..!’ என்று கமுக்கமாக ரகுசாமி சொல்ல, அவர் வாயை ‘ஷூ’ என்று சைகையில் அடைத்தவன், ‘அது ஒண்ணுமில்ல சார்.. தாத்தா சொல்லிக்கொடுத்தாப்புல செய்றேன்.. ’ என்றான் ஜனா.

‘த்த.. உங்க பாடத்தை எல்லாம் அப்புறம் வெச்சுக்கோங்க.. பத்து நிமிஷத்துக்கு ஒரு தரம் போன போட்டு அந்த இன்ஸ்பெக்டர் சாவடிக்கிறான். இதுல நீ வேற கழுத்தறுத்துக்கிட்டு.. சீக்கிரம் முடிய்யா!’ என்று அதட்டினார் தேவராஜன்.

‘சார்.. இந்தாள வெளிய கூட்டுப் போங்க சார்!’ என்று தாத்தாவைக் காண்பித்துக் கூவினான் ஜனா.

‘இப்போ உள்ளே வந்தேன்னா பாரு.. டேய்



ஜனா உன்னையும் ஒரு ஸ்ட்ரெச்சர்ல ஏத்தி பார்ஸல் பண்ணிடுவேன்!' என்று பெருங்குரல் எடுத்தார் தேவராஜன்.

'எங்கே வந்துதான் பாருங்களேன்.. இந்த நாத்தத்துக்குள்ள எப்படி வருவீங்க?' என்ற ஜனாவின் முகத்தில் மீண்டும் அப்படியொரு சிரிப்புக் களை. தாத்தாவும் அடக்கமாட்டாமல் சிரித்தார்.

'டேய் செத்ததுக்கு முன்னாடி சிரிக்கக்கூடாதுன்னு...'

'என்ன உங்க அம்மா சொல்லுச்சா?' என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்த ஜனாவிற்குப் பிரேதமும் கூடவே சிரிப்பது போலவே இருந்தது.

'என்ன நீயும் சிரிக்கிறியா?! சிரி சிரி.. இன்னையோட நீ பட்ட கஷ்ட நஷ்டம் சுக துக்கம் எல்லாம் ஓவர்! ஜாலியா போயிட்டு வா..!' என்றவன் பட்டெனத் தன் வாயை அடித்துக்கொண்டு, 'ஹம்ஹூம் திரும்ப வராத.. வராத.. இங்க மட்டும் வந்துறாத.. பூச்சி பல்லியாக் கூட பொறந்துக்கோ! மனுஷனா மட்டும் பொறந்துடாத.. கிளம்பு.. ராஜாவாட்டும் இருக்கப்பாரு..!' என்றவன் ஒரு பத்து நொடி பெருமூச்சு விட்டுக் கண்களை மூடி, 'சார் முடிஞ்சிடிச்சு சார்!' என்று கூவினான்.

'ம்ம் அப்படியே நல்ல நேரம் பாத்து அழைச்சுட்டு வரீங்களா அய்யா? ..த்த ரூமுக்குள்ள வந்து போட்றா.. டாக்டர் வந்துட்டான் பாரு!', என்றார் தேவராஜன்.

'தாத்தா.. வரவர சாரு சவுண்டு ஏறிக்கினே போவுதே..!' என்று கழுவிச் சுத்தம் செய்து தயார் செய்யப்பட்ட பிரேதத்தைத் தூக்கமாட்டாமல் தூக்கி ஸ்ட்ரெச்சரில் ஏற்றி வைத்துத் தள்ளிக்கொண்டு வெளியே வந்தான் ஜனா.

'அவரால அதான் முடியும்..! அதைச் செய்யறார்! உன்னால எது முடியுமோ அத நீ செய்டா மவனே..! உன் வேலைய அவன் பாக்க முடியாது.. அவன் வேலைய நீ பாக்க முடியாது..!'

'ம்.. இந்த வாய் மட்டும் இல்லைன்னு வை, உன்னெல்லாம் நாய் தூக்கின்னு பூடும்!'

'போடா.. மவனே..!'

'சரி, தாத்தா நீ நாளைல இருந்து மீனுவுக்குத் துணையா வூட்லயே இரு..!'

'ஏன்.. பயமா இருக்கா?!'

'அதெல்லாம் இல்ல.. மீனு தனியாதான இருக்கு.. புள்ளத்தாச்சி வேற.. நீ இருந்தா பேச்சுத் துணையா இருக்கும்ல?!'

'டேய் மவனே.. எனக்கு ஒன்னியும் ஆவாது.. அவளைவிட உனக்குத்தான் பேச்சுத் துணை தேவை..!'

'ஒன்னியும் ஆவாத இருக்க நீ என்ன சுவத்துல அடிச்ச ஆணியா?!' பலமாகச் சிரித்தார் தாத்தா.

ஒருவழியாகப் பரிசோதனைக்காகச் சுத்தம் செய்து தயார் செய்யப்பட்ட பிரேதத்தோடு வந்து சேர்ந்தவனைப் பார்த்து, 'யப்பா.. எவ்ளோ நேரம்டா இதுக்கு?!' என்றார் தேவராஜன்.

'சார் அப்போ நாளில இருந்து நீங்களே சுளுவா செஞ்சுடறீங்களா?!'

அருகில் கமுக்கமாகச் சிரித்தார் ரகுசாமி.


'என்னடா நக்கலா.?!'

'பின்ன என்னா சார்.. கூடவே இருந்துக்கினு நீங்களே இப்படி பேசலாமா.. உள்ள என்ன நாத்தம் நாறுது.. ஜெனெரேட்டர் சரி பண்ண ஆள் கூட்டியாரீங்கன்னு சொன்னீங்களே என்னாச்சு.. நேத்து மட்டும் மூணு தடவ கரண்டு போய்ப் போய் வருது சார்..!'

'தோடா சாரு.. எனக்கு ஆர்டர் போடறாரு.. அதெல்லாம் அப்புறம் பாக்கலாம்..!'

'என்ன சார்...!' என்று பரிதாபக் குரலில் இழுத்தான் ஜனா.

'என்னை என்னடா பண்ண சொல்ற..?! செத்தவனப் பெத்தவன் இன்ஸ்பெக்டர கடிக்கிறான்.. இன்ஸ்பெக்டர் டாக்டர கடிக்கிறான்.. டாக்டர் என்ன கடிக்கிறான்.. நான்



ஓவியங்கள் : அமு.ரஜினிகாந்த்

உன்ன கடிக்கிறேன்.. இதுக்கே நேரம் போவுது.. தாவு தீருது..!'

'ம்ம்.. இதையே சொல்லுங்க எப்போ பார்த்தாலும்..!' என்று முணுமுணுத்து நகர்ந்தவனைப் பார்த்து, 'டேய் ஜனா.. ரொம்ப சலிச்சுக்காதடா..! தோ.. அந்த மேஜை மேல நோட்டுக்கு அடியில கொஞ்சம் காசு இருக்கு பாரு.. எடுத்துக்கிட்டுக் கிளம்பு.. ஏதாவதுன்னா கூப்பிடுறேன்!' என்றார்.

காசை எடுத்துக்கொண்டு வெளியே வந்தவனிடம் 'ஏன்டா மவனே! அந்தாளுகிட்ட ஏன் வீணா வாயை வுட்ற?' என்று கேட்டார் தாத்தா.

'பின்ன என்ன பின்ன..?! நிக்குற எனக்குத்தானே தெரியும்.. சும்மா பேசிக்கினு..!'

'சரி வுடு.. மீனுவுக்கு எதினா வாங்கினு போலாம் வா!'

'ம்ம். இப்படியே எனக்கும் அவளுக்குன்னே என்னன்னு யோசிச்சிக்கினு இரு.. உனக்குன்னு எப்போதான் வாங்குவ..?!' என்று தாத்தாவோடு பேசிக்கொண்டே வீட்டை நோக்கி நடந்தான் ஜனா.

'போடா மவனே..! சின்னஞ்சிறுசுங்க எதுனா வாங்கித் துண்ணுவீங்களா?! அத வுட்டுட்டு என்னான்டா கடிக்கிறான்..!'

‘அதெல்லாம் முடியாது.. இன்னிக்கி நீ எதுனா உனக்குப் பிடிச்சது சொல்லு.. நான் வாங்கியாறேன்!’

‘டேய் உன்னோட ரோதனைடா மவனே.. சரி அந்த லால் கடைல போய் காராபூந்தியும் பால்ஸ்வீட் எதுனா வாங்கினு வா. நான் முன்னால நடந்துபோய்க்கினு இருக்கேன்.. மீனு வேற தனியா இருக்கும் !’

‘பார்றா.. பல்லு போன வயசுல பால் ஸ்வீட்டா..?!’

‘போடா மவனே!’

‘ஆமா தாத்தா.. நீ எத்தினி வருஷமா இந்த வேல பாக்குற?!’

‘யாருக்குத் தெரியும்..! இதென்ன கலெக்டர் உத்யோகமா கணக்கு வெச்சுக்க..?!

‘அது சரி..!’

‘ஆனா ஒன்னு..! யாராலயும் பண்ண முடியாததை நாம செய்யறோமேன்னு ஒரு திருப்தி.. ரோட்டுல தேமேன்னு அடிபட்டுக் கிடக்கிற அணில் கணக்கா மனுஷங்கள கொத்துக் கொத்தாக் கிடத்திப் பாத்துருக்கேன்.. குழந்தைங்க.. வயசுப் புள்ளைங்க.. வயசானவங்க.. நல்லவன் கெட்டவன்.. ஏழை பணக்காரன்.. பேர் தெரிஞ்சவன் தெரியாதவன்.. துள்ளத் துடிக்க முண்டமும் பிண்டமுமா எல்லாரையும் பாத்துருக்கேன்.. எனக்கு எல்லாரும் ஒன்னு... கடசீல எல்லாரும் ஒன்னுதான்டா மவனே.. யாரோ எவனோ எல்லாருக்கும் செய்ய வேண்டியதெல்லாம் செஞ்சு அனுப்பறோம் பாரு.. அதுல ஒரு திருப்தி.. ஆனா எனக்கு ஒரே ஒரு வருத்தமடா மவனே..!’

‘என்ன தாத்தா?!’

‘என் அப்பனும் இதே பொழப்பு பாத்தவங்கதான்.. சின்ன வயசுல இருந்தே இந்த வாடையும் விவரமும் பழக்கப்பட்டதுதான்.. ஆனா பாவம் நீ யாரோ எவரோ! யார் வீட்டுக் கன்னுக்குட்டியோ? அன்னைக்கு மட்டும் உன்ன நான் தெருவுல இருந்து கூப்பிட்டு வரலைனா நீ இந்த வேலைக்கு வந்திருக்க மாட்ட.. வேற எங்கனா எதுவாவோ பொழச்சிக்கினு இருந்துருப்ப.. உன்ன இதுல இழுத்து வுட்டுட்டோமோன்னுதான் எனக்கு வருத்தமாயிருக்கு!’

‘வயசாயிருச்சுன்னு பாக்க மாட்டேன்.. வாயிலேயே போட்ருவேன் பாத்துக்க..! யோவ் தாத்தா.. நீ மட்டும் அன்னைக்கு என்னை உன் வீட்டுக்குக் கூட்டியாரலனா எங்கனா தலையை வெச்சு செத்துத் தொலைஞ்சிருப்பேன்.. லூசு மாதிரி எதையாவது உளறிக்கிட்டு இருக்காத..’

‘அத வுடு.. உனக்கு எதுவாவது ஆவணும்ன்னு ஆசை இருக்காடா மவனே.. ?!’

‘ஏன்.. கேக்குற..?! சொன்னா பால்வாடி இஸ்கூல்ல சேர்த்துப் படிக்க வைக்கப் போறியா..?!’

‘சும்மா சொல்லுடா..!’

‘சாவுறதுக்கு முன்னாடி வரைக்கும் என் அம்மா சொல்லிக்கினே இருக்கும்.. அதுக்கு நான் டாக்டர் ஆவணும்ன்னுதான் ஆசை..!’

‘அய்ய!’ என்று முகம் சுளித்தார் தாத்தா.

‘சீ சீ.. நம்ம தினமும் பாக்குற மாதிரி அறுத்துப்பாக்குற டாக்டர் இல்ல.. இந்த டீவிலலாம் வருவாங்களே நல்ல டாக்டரு.. ‘ஐயா குலசாமி எப்படியாவது காப்பாத்திடுங்கயா’ன்னு எல்லாரும் கையெடுத்துக் கும்பிடும்போது.. ‘எல்லாம் ஆண்டவன் செயல்!’ அப்படின்னு கண்ணாடியை ஸ்டைலா கழட்டிக்கிட்டே சொல்லிட்டு ஒரு வெள்ளை ஸ்க்ரீன் துணி போட்ட ரூமுக்குள்ள போவாரே.. அந்த மாதிரி வெள்ளக்கோட்டு.. கருப்பு பிரேம் கண்ணாடி போட்ட டாக்டரு..! ஆனா என் அப்பன் இருக்கான் பாரு.. அவன் சொல்லுவான்.. நான் ஆடு மாடு மேய்க்கத்தான் லாயக்குன்னு.. ஒரு விதத்துல அவன் சொன்னதுதான் நடந்துருக்கு..!’

‘அதெப்படிடா மவனே..?’

‘பின்ன.. எங்கெங்கேயோ அலைஞ்சு திரிஞ்சு காணாப் பொணமாகாம இந்த செத்துப்போன மனுஷ ஆடுங்கள சுத்தப்படுத்திப் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குச் சுளுவோ அதுங்களுக்கே தெரியாம பாத்துப் பாதுகாத்துப் பதனமா வழியனுப்பி வைக்கறேனே! நான் ஆடு மேய்க்கிறவன்தானே..!’ என்றான் ஜனா.

பலமாகச் சிரித்தார் தாத்தா.

‘யோவ்.. என்னய்யா இப்படி சிரிக்கற..?! பொட்டுன்னு போயிரப்போற. பயமா இருக்குய்யா..!’

இன்னும் பலமாகச் சிரித்தார் தாத்தா.

‘உன்னோட ஒரே எழவுயா.. இந்தா.. கடை வந்திருச்சு பாரு.. நான் கடைல வாங்கின்னு வரேன்.. நீ வீட்டுக்குப் பாத்துப்போ!’ என்றவன் லால்கடைப் பக்கம் நோக்கி விரைந்து நடக்க ஆரம்பித்தான்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தின்பண்டங்களோடு வீடு வந்து சேர்ந்தவன், அவற்றை வீட்டுப்படி மேல் வைத்துவிட்டு ‘மீனு மீனு!’ என்று குரல் கொடுத்தவாறே அசதியாக வீட்டுத்திண்ணையில் வந்து அமர்ந்தான். அவன் குரலுக்குப் பதிலேதும் வரவில்லை.

‘தூங்கிட்டியா.. மீனு. தோ நிலப்படிக்கிட்டே தாத்தாவுக்கும் உனக்கும் பிடிச்சதை வாங்கியாந்து வெச்சுருக்கேன்.. பாரு.. எடுத்துச் சாப்பிடு..’

‘என்ன பதிலே பேசமாட்டேங்குது.. லக்ஷ்மியக்கா லக்ஷ்மியக்கா!’ என்று பக்கத்துக்கூரையை நோக்கிக் கூப்பிட அந்தத் திசையிலிருந்து எதிர்பட்டார் லக்ஷ்மி அக்கா.

அவரிடம், ‘மீனு எங்கக்கா? குரல் குடுத்தா பதில் பேசவே மாட்டேங்குது.. சரி.. தூங்குது போல.. நீங்க நிலப்படி மேல இருக்கிற பொட்டலத்தை எடுத்து அதுக்கும் தாத்தாவுக்கும் கொடுங்க..! நான் கொஞ்ச நேரம் இப்படியே படுத்துக்கறேன்..!’ என்று திண்ணையில் சாய்ந்தான்.

நிலப்படி மேல் இருந்த பொட்டலங்களை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்த லக்ஷ்மி அக்கா விசும்பியபடியே தெற்கு மூலையில் தரையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு படங்களுக்கு மத்தியில் பொட்டலங்களைப் பிரித்து வைத்தார். ஒரு படத்தில் நிறைமாதச் சீமந்தப் பெண்ணாக மீனுவும் இன்னொரு படத்தில் வெள்ளை மீசை முறுக்கேறியபடி ரகுசாமி தாத்தாவும் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

‘வெச்சுட்டேன் ஜனா!’ என்று வெளியே வந்த லக்ஷ்மி அக்கா, ‘நயிட்டுக்கு உனக்குத் துணையா மதி வந்து படுத்துப்பான் ஜனா.. என்ன..! அவன் வரவரைக்கும் கூட வாசல்ல படுத்துக்காத.. பனிக்காத்து உடம்புக்கு ஆவாது.. சரியா..?’ எனச் சொல்லிச் சென்றார்.

அன்றிரவு குறட்டை விட்டுத் தூங்கினவனுக்கு மறுநாள் காலை சீக்கிரத்திலேயே விழிப்பு வந்துவிட்டது. ஜன்னல் வழியாக மீனு வாசல் தூர்த்துவிடும் சத்தம் கேட்டதும் தினமும் இது போல சீழ்ப்பட்ட மனதையும் யாராவது வாரித் தூர்த்துவிட்டால் எத்தனை தோதாக இருக்கும்? என்று தோன்றியது.

ஒரு கணம் நீண்ட யோசனையில் ஆழ்ந்தவன், பிறகு சுதாரித்து வழக்கம் போல வேலைக்குக் கிளம்பிக்கொண்டிருக்க, செல்போனில் தேவராஜன் அழைத்தார்.

‘ச்சோ ச்சோ’ என்று உச்சுக்கொட்டி போனைப் பேசி அணைத்தவன், கிளம்பி வாசலுக்கு வெளியே வந்தான்.

‘மீனு மீனு.. ஏதோ கல்யாண கோஷ்டியாம். பாவம் 16 பேரு.. நான் போய் முடிச்சிக்கினு வரேன்.. நீ படுத்துத் தூங்கு.. என்ன..?! நான் வர லேட்டாகும்.. இந்தத் தாத்தா எங்க போனாரு.. வயசான காலத்துல இவரு வேற எங்கயாவது போயிடறாரு..! தாத்தா தாத்தா’ என்று வழிநெடுகக் கண்களால் தேடிக்கொண்டே அரசு மருத்துவமனை பிணவறை நோக்கிச் சென்ற ■

இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை

முகமது பாட்சா


படைப்பு
சமூகத்தின் இணைப்பு

படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைறுநூன்பீவி
நினைவு சிறுகதை பரிசுப் போட்டியில்
இரண்டாம் பரிசு பெற்ற
படைப்பாளி முகமது பாட்சா
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

எழுத்தாளர் நாஞ்சில் நாடன்
(நடுவர்)

# அபுக்கா



நான் சின்ன பையனாக இருக்கும்போதுதான் அபுக்காவை முதல் முறையாகப் பார்த்தேன். அப்போதெல்லாம் எல்லா வீடுகளுமே திண்ணை வைத்துக் கட்டப்பட்டிருக்கும். வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாற இடம் கொடுப்பதை மகா தர்மம் என்று ஒவ்வொருவரும் கருதிய காலமது.

திண்ணையில் அவர்கள் உறங்குவதற்குத் தோதாகத் திண்டும் வைத்துக் கட்டியிருப்பார்கள். வாசலின் ஒரு பக்கம் பெரிய திண்ணையும், ஒரு பக்கம் ஒடுக்குத் திண்ணையும் இருக்கும். ஒடுக்குத் திண்ணையில், மணலைச் சிறிதளவில் கொட்டி, ஈரத்துணியால் முறுக்கிச் செய்த பிரிமனையில் ஒரு பானையை வைத்து நீரை ஊற்றி வைத்திருப்பார்கள். அந்த ஈர மணலில் சிறிது தானிய விதைகளையும் தூவி வைப்பார்கள். அது முளைவிட்டு வந்திருப்பதைப் பார்ப்பதற்கே

அவ்வளவு அழகாக இருக்கும்.

சில நேரங்களில் திருடர்களும்கூட திண்ணைகளில் தங்கி இளைப்பாறிச் செல்வார்கள். ஆனாலும், அவர்கள் தங்கும் திண்ணை வீட்டுக்காரர்கள் அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட மாட்டார்கள். ஏனென்றால் அந்த வீட்டில் அவர்கள் களவு செய்யமாட்டார்களாம். இந்த நேர்மைத் தன்மையை இப்போதெல்லாம் யாரிடமாவது பார்க்க முடியுமா என்று தெரியவில்லை.

ஒருநாள் அபுக்காவும் அப்படித்தான் எங்கள் வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தான். அவனை இதுவரை நாங்கள் யாருமே எங்கள் ஊரில் பார்த்ததில்லை. நல்ல உயரமாக இருந்தான். சட்டை மிகவும் அழுக்காகக் கிழிந்து தொங்கிக்கொண்டிருந்தது. நீண்ட தூரத்தில் இருந்து வரும் வழிப்போக்கர்களை நமக்குத் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அவனைப் பார்ப்பதற்கு எங்களுக்குச் சற்று கூடுதல் பயமாகவே இருந்தது.

பின் கட்டு வழியாக வந்த பக்கத்து வீட்டு ஆமினா மாமி... “யாரு ரஹிம்மா இது! முன் வாசல் வழியா வர்ரவே பயமாக் கிடக்கு... பார்க்கப் பைத்தியம் போலக் கிடக்கான். புள்ளைகளை வெளியே வுட்டுடாதே புள்ளே! புடிச்சிக்கிட்டுப் போயிடப்போறான்!” என்று பீதியைக் கிளப்ப அம்மா பயந்தேபோனாள். அதன் வெளிப்பாடு அவள் என்னையும் தம்பியையும் இறுக்கிப் பிணைத்ததிலேயே புரிந்தது.

அத்தா வெளி வேலையை முடித்துவிட்டு வந்து, முன் வாசல் கதவைத் தட்ட அம்மா சன்னலைத் திறந்து பார்த்தாள். “அவுங்கதான் வந்திருக்காங்க..” என்றவுடன் கொஞ்சம் படபடப்பு குறைந்தது.

அப்போதெல்லாம் காலிங் பெல் என்பது கதவில் வேலைப்பாடுடன் மாட்டியிருக்கும் பித்தளை வளையம்தான். அதைத் தட்டினால் கொல்லை வரை சப்தம் கேட்கும். அத்தா தட்டிய சப்தத்தில் அபுக்காவும்கூட விழித்துக்கொண்டான். அவன் பேந்தப்பேந்த விழித்தது அத்தாவுக்கே அச்சத்தை ஏற்படுத்தினாலும், வெளியில் காட்டிக்கொள்ளாமல், “டேய் யாருடா நீ?” என்று அதட்டலாகக் கேட்டார்.

“நான் அபுக்கா! அபுக்கா.. ஹி! ஹி!” என்று சிரித்தான். அதில் வெகுளித்தனம் மட்டும்தான் இருந்தது.

“சாப்பிட்டியா?” என்று அத்தா கொஞ்சம் கனிவாகக் கேட்க “பசிக்குது! பசிக்குது!” என்றவன் அதற்கும் பசியின் வேதனையுடன்தான் சிரித்தான்.

அம்மாவிடம் இருந்து சாப்பாட்டைத் தையல் இலையில் வைத்து வாங்கிவந்த அத்தா அதை அவனருகில் வைத்துவிட்டு, “நல்லாச் சாப்பிடு! பசிச்சா கேட்டு வாங்கிக்க!” என்று சொல்ல ‘சரி சரியென்று’ தலையை வேகவேகமாக ஆட்டியவன் அள்ளியள்ளி எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தான்.

அபுக்காவின் அறிமுகம் இப்படித்தான் எங்களுடன் ஆரம்பித்தது என்றாலும், அவன் எங்களையும் எங்கள் வீட்டையும் விட்டு நகர்வதாகத் தெரியவில்லை. அத்தாவும் அவன் பரிதாபத்தைப் பார்த்து அவனுக்காகத் தனது பழைய சட்டை, லுங்கிகளைக் கொடுக்க... ஒழுங்காகத் துவைத்துத் தினமும் கட்ட ஆரம்பித்தான். அபுக்கா இப்போது உண்மையிலேயே அழகாக இருந்தான்.

அத்தாவை அத்தா என்றும், அம்மாவை அம்மா என்றும் சொல்லி அழைக்கும் அபுக்கா பக்கத்து வீட்டு ஆமினா மாமியையும் அடுத்த வீட்டு ஜெரினா மாமியையும் மட்டும் ஆமீனா லாத்தா, ஜெரினா லாத்தா என்றுதான் கூப்பிடுவான். முதலில் அவனைக் கண்டு பயந்தவர்கள் எல்லாம், அவன் எங்கே போனான்? ஆளையே காணமே! என்று தேட ஆரம்பிக்கும் அளவிற்கு எல்லோரிடமும் நெருக்கமாகிவிட்டான்.

அவன் அடிக்கடி சிரிப்பதால், ஆமீனா மாமிதான் அவனை வெறி அபுக்கா என்று

கிண்டலாகக் கூப்பிடத் தொடங்கினாள். அதுவே பின் நாட்களில் அவன் பெயராக மாறிப்போய்விட்டது. அவனும் அதைத் தனக்குக் கிடைத்த பட்டமாகவே கருதிக்கொண்டான். அவனும் வேறு ஆட்கள் யாராவது அவன் பெயரைக் கேட்டால், ‘வெறி அபுக்கா’ என்று சொல்லிவிட்டுச் சிரிப்பான்.

நாங்கள் எல்லோருமே அவனுக்கு உறவுகளில் ஒருவராகவே மாறிவிட்டோம். அவனும் எல்லோருடைய வீட்டு வேலைகளையும் இழுத்துப்போட்டுச் செய்ய ஆரம்பித்தான். அதுக்காக அவன் பெறும் வெகுமதியான சம்பளம் என்பதே “வெறி அபுக்கா, வந்து சாப்பிட்டிட்டுப் போ” என்பது மட்டும்தான்.

யார், “புள்ளைகளைப் பத்திரமாகப் பார்த்துக்க புள்ளே!” என்று பயம் காட்டினாரோ.. அந்த ஆமீனா மாமிதான் தன் பெண் நூர் நிஷாவை அவன்கூட பாதுகாப்பாகப் பள்ளிக்கூடம் அனுப்பி வைத்தாள்! அவனும் பத்திரமாகக் கூட்டிக்கொண்டு போய் விட்டுவிட்டு, பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டிற்கு அழைத்து வருவான்.

ஒருவகையில் பார்த்தால் அபுக்கா மன நலன் பிறழ்ந்தவன் போல் தெரிந்தாலும், நிச்சயம் அவனிடம் அதற்கான குணாதிசயங்கள் எதுவும் இருந்ததில்லை. எங்கள் வீட்டுத் திண்ணைதான் அவனின் ஒரே நிரந்தர வாசஸ்தலம். திண்ணையின் ஓரமாக ஒரு அட்டைப் பெட்டியை வைத்து அதில் தன் துணிமணிகளை வைத்துக்கொள்வான். யாரும் இல்லாத நேரத்தில் அவனுக்குள் அவனே எதையோ முணுமுணுத்துப் பேசிக்கொள்வான். அப்போது அவன் கண்களின் ஓரம் கொஞ்சமாக நீர் துளிர்க்கும். சில நேரம் யாருமில்லாதவிடத்தில் யாரிடமோ அவனே சிரித்துப் பேசிக்கொண்டிருப்பான். அவன் கதை எங்களைப் பொருத்தவரை இன்று வரை விடை தெரியாத ஒரு விடுகதைதான்.

ஆமீனா மாமி, ஜெரினா மாமி இவர்கள் எங்காவது ஊருக்குப் போய்விட்டால் போதும், யாரும் அவனுக்கு எதுவும் சொல்ல வேண்டாம்... அவனே போய் அன்று மட்டும் அவர்கள் திண்ணையில் படுத்துக்குவான். அவர்கள் வீட்டைப் பாதுகாக்கிறானாம்.

ஒருநாள் நானும் என் தம்பியும் அவனுக்குத் தெரியாமல், அவன் வெளியில் சென்றிருக்கும்போது அவன் பெட்டியை ஆராய்ந்து பார்த்தோம். அதில் அவன் துணிகளுடன் கீழேயிருந்து பொறுக்கி வந்த பழைய விளையாட்டுப் பொம்மைகளும் இருந்தன. அவை அழுக்காக இருந்ததால் நாங்கள் அவற்றை எடுத்துக்கொள்ளவில்லை..

ஒருநாள் ஆமீனா மாமியின் மகள் நூர் நிஷாவிற்குக் கடுமையான காய்ச்சல் வந்துவிட்டது. காய்ச்சல், கடை மாத்திரைகளுக்கெல்லாம் ஒன்றும் கேட்கவில்லை. நூர் நிஷாவிற்கு அப்போது எட்டு வயதுதான். அத்தாவும் அம்மாவும் ஆமீனா மாமியைத் திட்டிவிட்டு அவளைத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள்... கூடவே ஆமீனா மாமி அழுதுகொண்டே ஓடியது இப்போதும் என் கண் முன்னால் ஓடிக்கொண்டிருக்கிறது.

ஆமீனா மாமி தன் வயசாளியான அம்மாவுடனும் மகளுடனும் மட்டுமே வாழ்ந்துவந்தார். அவர் கணவன் இந்திய இராணுவத்தில் இருந்ததாகவும், பாகிஸ்தான் போரில் இறந்துவிட்டதாகவும் பின் நாளில் அம்மா சொல்லித்தான் எனக்குத் தெரியும். அவருக்கான பென்ஷன் பணத்தை வைத்துத்தான் குடும்பத்தை மிகவும் சாமர்த்தியமாக நகர்த்திக்கொண்டிருந்தாள் ஆமினா மாமி.

நூர் நிஷாவை ஐ சி யூவில் வைத்திருந்தார்கள். காய்ச்சல் நின்ற பாடில்லை. ஏதேதோ முணுமுணுத்துக்கொண்டே இருந்தாள். அத்தாவும், அம்மாவும் ஆஸ்பத்திரியை விட்டு நகரவேயில்லை. ஆமீனா மாமி வயசாளி அம்மாவைப் பார்த்துவிட்டு இங்கு வந்து மகளைப் பார்த்துக்கொள்வாள். பிறகு அம்மா, எங்கள்

*வீட்டிற்குச் சென்று சாப்பாடு செய்து அபுக்காவிடம் ஆஸ்பத்திரிக்குச் சாப்பாடு கொடுத்துவிடுவார்...*

*அபுக்கா இப்போதெல்லாம் சரியாகச் சாப்பிடுவதில்லை. அமீனா மாமியிடம், "லாத்தா... நிஷா.. எப்புடி இருக்கு..?" என்றும், அத்தாவிடம், "அத்தா... நிஷா... எப்புடி இருக்கு..?" என்றும் கேட்டுவிட்டுப் பதிலை எதிர்பார்க்காமல் சோகமாகிவிடுவான். அம்மா அவனிடம், "நல்லாயிடும்.. நீ சாப்பிடு அபுக்கா" என்றாலும், "நிஷா வர்ரட்டும்.. நாங்க சாப்பிட்றோம்" என்று சொல்லிவிட்டுச் சிரிப்பான்.*

*நிஷாவின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாகிவிட்டது. டாக்டர் அத்தாவிடமும், ஆமினா மாமியிடமும், "உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்" என்றபோது அபுக்காவும் அங்குதான் இருந்தான்.*

*அத்தா அவனிடம், "அபுக்கா கொஞ்சம் தள்ளி நில்லு" என்று சொன்னவுடன் அவன் தன் காதை மட்டும் அங்கே வைத்துவிட்டுக் கொஞ்சம் தள்ளி நின்றுகொண்டான்.*

*டாக்டர் ஏதேதோ சொல்லச் சொல்ல ஆமினா மாமி அப்படியே மயக்கமாகிச் சரிந்தாள். அத்தாவின் கண்களில் இப்போதுதான் நான் முதன்முறையாகக் கண்ணீரைப் பார்க்கிறேன். அதைத் துடைக்க மறந்தவராக அவர் அப்படியே நிற்க, நான் ஓடிப்போய் அவரை அப்படியே கட்டிப் பிடித்துக்கொண்டு எதுவும் புரியாமல் அழ ஆரம்பித்தேன்.*

*அபுக்கா என் கையைப் பிடித்துக் கொண்டு, "வா, வீட்டுக்குப் போலாம்.. வா, வீட்டுக்குப் போலாம்" என்று இழுக்க, அத்தாவும், "அபுக்காவோடு போடா செல்லம்... நான் வர்ரேன்..." என்று என்னை அனுப்பிவிட்டார்.*

*நாங்கள் ஓடிப் பிடித்து விளையாடிய எங்களின் அழகு நூர் நிஷா மய்யத்தாக போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டு வீட்டிற்குள் நுழைந்தாள். எங்கள் வீடு கொஞ்சம் வசதியான இடமாக இருந்ததால் எங்கள் வீட்டின் முற்றத்தில் கவிதையாகக் கிடத்தப்பட்டாள். ஆமீனா மாமி அழத் திராணியற்று நிஷாவையே வெறித்துக்கொண்டிருந்தாள்.*

*அபுக்கா, மய்யத் எடுப்பதற்காகச் சாத்துக்கழி, ஓலைப்பாய் இவற்றையெல்லாம் வாங்கிச் சேகரித்துக்கொண்டிருந்தான். அபுக்கா கொஞ்சமும் அழவில்லை. ஜெரினா மாமிகூட அம்மாவிடம் சொல்லி வருத்தப்பட்டார்கள். "பார்த்தியா! கொஞ்சமாவது அவன் மனசில ஈரம் இருக்கா! அவன் கண்ணுல தண்ணீ வருதா பார்த்தியா! அவன் உண்மையிலேயே ஒரு வெறி புடிச்ச அபுக்காதான். அந்தப் பொண்ணு இவன் கையைப் புடிச்சிக்கிட்டு எப்படியெல்லாம் நடக்கும்! சிரிச்சிச் சிரிச்சிப் பேசும்!"*





ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

இப்போதெல்லாம் அபுக்கா சரியாக வீட்டிற்கு வருவதில்லை. அப்படியே வந்தாலும் எங்கள் வீட்டில் சாப்பிட மாட்டான். நேராக ஆமீனா மாமி வீட்டிற்குப் போய், “ஆமீனா லாத்தா! பசிக்குது!” என்று சொல்லிவிட்டு எதையாவது வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவான்.

போகும்போதெல்லாம் ஆமினா மாமியிடமும், அம்மாவிடமும் “நிஷா ஜன்னத்தில இருக்குது... நிஷா ஜன்னத்தில இருக்குது... நான் பார்த்தேன்!” என்று சொல்லிவிட்டுச் சோகமாகச் சிரிப்பான்.

நிஷாவின் மரணம் காய்ச்சலால் இல்லையென்றும், வேறு எதோ என்றும் அரசல் புரசலாகப் பேசிக்கொண்டார்கள். கொஞ்ச நாட்களாக, அபுக்கா வருவதேயில்லை.

ஒருதடவை அம்மா ஏதோ டென்ஷனில், “நீ ஒழுங்கா இங்க இருக்கிறதா இருந்தா இரி. இல்லன்னா போய்கிட்டே இரு... இங்கு வர்ராதே!” என்று திட்டிவிட்டார்கள். அதுதான் காரணமாகவும் இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டோம்.

ஒருநாள் எங்கள் ஊரே பரபரப்பாக இருந்தது.

“வெறி அபுக்கா யாரையோ செட்டிக் குளத்தாண்ட வச்சி கொலை செய்ஞ்சிட்டானாம்!” என்று பேசிக்கொண்டே ஓடிக்கொண்டிருந்தார்கள்.

அம்மா, ஆமீனா மாமி, நாங்கள் எல்லோரும் அங்கு ஓடினோம். அத்தாவும் அங்கு வந்து சேர்ந்துகொண்டார்.

போலீஸ் அபுக்காவைச் சுற்றி வளைத்து நின்றுகொண்டிருந்தது. எதுவும் நடக்காதது போல் அபுக்கா சிரித்துக்கொண்டேயிருந்தான்.

எங்களைப் பார்த்ததும் சிரித்தவன்.. “ஆமீனா லாத்தா.. அழாதே... நிஷா ஜன்னத்துக்குப் போயிடிச்சி! அம்மா... நிஷா... ஜன்னத்துக்குப் போயிடிச்சி! அத்தா... நிஷாவும் ஹைருனும் ஜன்னத்துக்குப் போயிட்டாங்க...” என்றான்.

அவன் அருகில் ஒரு பிணம் தலை நசுங்கிக் கிடந்தது.. அந்தப் பிணத்தின் ஆணுறுப்பைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டிருந்தான்.

பார்க்கவே பயங்கரமாகவும் அருவெறுப்பாகவும் இருந்தது... போலீஸ்காரர் அவனைப் பற்றி அத்தாவிடம் விசாரித்துக்கொண்டிருந்தார். அத்தாவைப் பிணத்தின் அருகில் அழைத்துச் சென்று காட்டினார்கள்.

அப்போதுதான் அந்த முகத்தைச் சரியாகப் பார்த்தேன். நிஷாவின் கணக்கு ஆசிரியர்! அத்தாவிடம் மெதுவாகச் சொன்னேன்.. அத்தா, “யாரிடமும் சொல்லாதே!” என்று என் வாயை முழுவதுமாக அடைத்துவிட்டார்.

அபுக்கா மன நலன் சரியில்லாதவன் என்று ஊரே ஒருமித்துச் சொன்னதால் நீதிமன்றம், அவனை மனநல மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டது.

அவனை எப்போதாவது நாங்கள் பார்க்கச் சென்றாலும் அவன் எங்களைப் பார்க்க மறுத்துவிட்டான்... அதற்கான காரணம் என்னவென்றே தெரியவில்லை... அந்தத் தெரியாத காரணங்களில் ஒன்றாகவே இன்றும் நிஷாவோடு ஜன்னத்துக்குச் சென்ற அந்த ஹைரூனும் யாரென்றே தெரியாமல் எங்களுக்குப் புதிராகிவிட்டாள்!

■

மூன்றாம் பரிசு
பெற்ற சிறுகதை

கலையரசி ஜி


படைப்பு

படைப்பு சிறுகதைப் போட்டி

அம்மையார் ஹைறுநூன்பீவி
நினைவு சிறுகதை பரிசுப் போட்டியில்
மூன்றாம் பரிசு பெற்ற
படைப்பாளி கலையரசி ஜி
அவர்களை பாராட்டி மகிழ்கிறோம்

எழுத்தாளர் நாஞ்சில் நாடன்
(நடுவர்)

# சாட்சி



அவன் இறந்து ஓராண்டாகியும், தினமும் அவள் கனவில் வந்துகொண்டிருந்தான்; சில நாட்கள் உயிருடனும், சில நாட்கள் தலையின்றி வெறும் முண்டமாகவும்!

“இன்னிக்கு நீ சொல்லப்போற சாட்சியிலதான், ஒங்கப்பாவோட உசிரு அடங்கியிருக்கு; ஒன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன்; என் தாலி பாக்கியத்தைக் காப்பாத்து” என்று விடிந்ததும் விடியாததுமாகக் காலில் விழாத குறையாகக் கெஞ்சினாள் அம்மா. தாலியைத் தூக்கி மகளிடம் காட்டிவிட்டு, கண்ணில் பயபக்தியுடன் ஒற்றிக்கொண்டாள்.

பாரதிக்கு மிகவும் எரிச்சலாக இருந்தது. பொழுது விடிந்து, பொழுது போனால் அம்மா இதையே சொல்லி இரண்டு வாரங்களாகத் தொணதொணத்துக்கொண்டிருந்தாள்.

“ஆயிரந்தான் இருந்தாலும், அவர் ஒன் அப்பாடி! சரிசரின்னு இங்க தலையாட்டிட்டு, அங்க போய் ஒன்னு கெடக்க ஒன்னு சொல்லி, அவரு உசிருக்கு ஒலை வைச்சிடாதே! ஒனக்காக அப்பா என்னவெல்லாம் செஞ்சிருக்காரு தெரியுமா?” என்று கேட்டுவிட்டு, ஒரு பட்டியலை மனப்பாடம் செய்து, ஒவ்வொருநாளும் வரிசையாக ஒப்பித்துக்கொண்டிருந்தாள்.

போதாக்குறைக்கு அப்பாவுக்காக வாதாடும் வக்கீல் வேறு, நீதிமன்றத்தில் இவள் என்ன பேச வேண்டும் என்பதைக் கிளிப்பிள்ளைக்குச் சொல்வது போல், திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொடுத்தார்.

“எதிர்தரப்பு வக்கீல் என்ன குறுக்குக்கேள்வி கேட்டாலும் ‘எனக்கு எதுவும் தெரியாது; நான் எதுவும் பார்க்கலை; மயக்கமாயி கீழே விழுந்துட்டேன்’னு சொல்லணும். மத்ததை நான் பார்த்துக்கறேன்” என்று வலியுறுத்திச் சொன்னார்.

‘இன்று நீதிமன்றத்தில் என்ன சொல்வது? ‘உண்மையைச் சொன்னால் அப்பாவுக்குத் தூக்கு அல்லது ஆயுள்தண்டனை உறுதி! சொல்லாவிட்டால் மனசாட்சி தன்னைக் கொஞ்சங்கொஞ்சமாகக் குத்திக் கொன்றுவிடும் அல்லது பைத்தியமாக்கிவிடும்!’ என்ற யோசனையின் காரணமாகக் கடந்த இரண்டு நாட்களாகத் தூக்கமே இல்லாமல் புரண்டு கொண்டிருந்தாள் பாரதி.

இந்த ஓராண்டில் அவள் நிம்மதியாகத் தூங்கிய நாட்கள் மிகக்குறைவு. நடு இரவில் பதறித்துடித்து எழுவாள்; உடம்பெல்லாம் வேர்த்துக்கொட்டியிருக்கும். கனவு என்று தெரிந்தவுடன் சிறிது ஆசுவாசப்படுத்திக்கொண்டு, மீண்டும் தூங்க முயல்வாள். ஆனால் தூக்கம் முற்றிலுமாக அவளிடமிருந்து விடைபெற்றிருக்கும். விடியும்வரை ஏதேதோ நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்துவிட்டு, விடிந்தபின் ஆழ்ந்த உறக்கத்திலாழ்வாள்.

இப்போதெல்லாம் இது என்ன மாதம்? என்ன கிழமை? என்ன தேதி? என்று எதுவும் அவளுக்கு நினைவில் இருப்பதில்லை. இரவில் சரியான உறக்கமில்லாததால், பகல் முழுக்க மயக்கம் அவளை ஆட்கொள்ளும். விழித்திருக்கும் நேரத்தில், அம்மாவின் வற்புறுத்தலுக்கிணங்கி, கடமைக்கு ஏதோ ஒன்றை விழுங்கிவைப்பாள். விடிந்ததும் விடியாததுமான அந்தக் கருக்கலில், அவனுடன் பழகத் துவங்கிய நாள் முதல், அவன் இறந்த நாள் வரையுமான நிகழ்வுகள், அவள் நெஞ்சில் அலையலையாக வந்து மோதின.

கல்லூரியில் சேர்ந்த புதிதில், இருவரும் நண்பர்களாகத்தான் பழகிவந்தார்கள். நட்பு காதலாக மாறியபோதுதான், வீட்டில் எதிர்ப்பு கிளம்பியது. அவனுடனே எப்போதும் சுற்றித் திரிவதாகக் கல்லூரியில் அவளுக்குத் தெரிந்தவன் எவனோ வீட்டில் சொல்லிவிட, பிரச்சினை வெடித்தது. அதுவரைக்கும் அவன் இன்ன சாதியென்று கூட, அவளுக்குத் தெரியாது.

ஒருநாள் அவள் அப்பா அவனுடைய சாதிப்பெயரைச் சொல்லிக் கேவலமாகத் திட்டிவிட்டு, “இனிமேல் அவனுடன் உன்னைப் பார்த்தால் கொன்றுவிடுவேன்” என்று மிரட்டினார். அப்போது கூட “கொன்றுவிடுவேன்” என்று அப்பா தன்னைத்தான் மிரட்டுகிறார் என்று நினைத்தாளேயொழிய, அவனைத் தீர்த்துக் கட்டுவார் என்றோ, தன் அப்பாவின் மறுபக்கம் மிகவும் பயங்கரமானது என்றோ அவள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

“வேண்டாம் மா. அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா நம்ம சாதிக்காரங்க முகத்துல நாளைக்கு நாம முழிக்க முடியாது. அவன்கிட்டப் பழகுறத விட்டுடு; ஒனக்கு நம்ம சாதியிலேயே நல்லாப் படிச்சி வேலையில இருக்குற பையனாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிவைக்கிறோம்” என்று அப்பாவுக்கு ஆதரவாக, அம்மாவும் கெஞ்சினாள்.

ஆனால் பாரதிக்குக் கீழ்ச்சாதி, மேல் சாதி என்று மனிதர்களுக்குள் பாகுபாடு காட்டுவதில், துளியும் இஷ்டமில்லை. குழந்தையாய்

இருந்தபோது 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று அறநெறி போதித்து மனதில் பதிய வைத்துவிட்டு, வளர்ந்த பின்னர் வாழ்வில் சாதியைப் புகுத்துவது முறையா? என்று அவள் யோசித்தாள்.

'இருவர் சேர்ந்து வாழ்வதற்கு அன்புதான் அடிப்படை. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி இன்பதுன்பம் இரண்டிலும் சமமாகப் பங்கேற்று வாழ்வதில் இந்தச் சாதி ஏன் குறுக்கே வருகிறது?' என்று அவள் சிந்திக்காத நாளேயில்லை.

அவன் வீட்டுக்கு ஒரே பிள்ளை; அப்பா இல்லை. முதல் தலைமுறையாகக் கல்லூரி வாசலை மிதித்தவன். அவன் இல்லாமல் போனால் அவன் அம்மா ஆதரவற்றவளாகிவிடுவாள். அவள் வாழ்வின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த அவனுக்குத் தன்னுடனான திருமணத்தால் எந்தப் பிரச்சினையும் வந்துவிடக்கூடாது என்ற பயம், பாரதியைக் கொஞ்சம் யோசிக்க வைத்தது.

அவனிடம் தன் பயத்தை வெளியிட்டபோது, "கொஞ்ச நாள் வெளியூர்ல போயி தலைமறைவா இருந்தா, பெத்தவங்களோட கோபம் சரியாயிடும்; நமக்குன்னு ஒரு கொழந்தை வந்துட்டா, பேரப்பிள்ளைக்காக நம்மளை மன்னிச்சிடுவாங்க; அதுக்கப்புறம் நாம அவங்களோட சேர்ந்து வாழலாம்; பெத்தவங்களோட ஆசியும், வாழ்த்தும் நமக்கு அவசியம் தேவை" என்றான். மனிதத்தின் மீது, அவனுக்குத்தான், எவ்வளவு நம்பிக்கை!

அவன் அவ்வளவு நம்பிக்கையுடன் சொன்ன பிறகு, இந்த அறிவியல் நூற்றாண்டில் பிற்போக்காகச் சிந்திக்கும் அப்பாவின் மறுப்பை மீறி அவனையே திருமணம் செய்துகொள்வது என முடிவெடுத்தாள் பாரதி.

அதற்குப் பிறகு இருவரும் நண்பர்களின் உதவியுடன் பதிவு அலுவலகத்தில் திருமணம் செய்துகொண்டு, ஆறு மாதகாலமாக ஊர் ஊராகச் சென்று பல வீடுகளில் தங்கினார்கள். அவனுக்கு நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்தபோது, அவளுக்குப் பெரும் நிம்மதி ஏற்பட்டது. அதுவும் இரண்டு ஆண்டுகள் ஒரு புராஜெக்டுக்காக அவனை அமெரிக்கா அனுப்புவதாக அலுவலகத்தில் சொன்னவுடன் மிகவும் மகிழ்ந்தாள்.

'பெற்றோருக்குப் பயந்து பயந்து சாகாமல், வீடு வீடாக அடைக்கலம் தேடி அலையாமல் நிம்மதியாய் இருக்கலாம்; இரண்டாண்டுகள் அமெரிக்காவில் இருந்துவிட்டு, அதற்குப் பிறகு தமிழ்நாடு வந்தால் அதற்குள் அப்பாவின் கோபம் தீர்த்துவிடும். இப்படிப் பயந்து மறைந்து வாழத் தேவையில்லை' என்று நினைத்தாள் பாரதி.

அம்மாதம் வரவேண்டிய வீட்டுக்குத் தூரம் தள்ளிப் போயிருக்கிறது என்று ஒருநாள் காலை அவனிடம் சொன்ன அடுத்த கணம், ஆயிரம் வாட் விளக்காக அவன் முகம் ஒளிர்ந்த விதம், அவள் நினைவில் ஒரு கணம் வந்து போனது. காலையில் மருந்துக்கடை திறந்ததும், திறக்காததுமாக ஓடிப்போய் அந்தச் சோதனை செய்யும் குச்சியை வாங்கிக்கொண்டு வந்து நின்றான். அதில் சோதித்து 'பாசிட்டிவ்' என்று தெரிந்தவுடன், வாயெல்லாம் பல்லாக எவ்வளவு பூரிப்பு அவன் முகத்தில்! என்று வேதனையுடன் அச்சமயம் நினைத்துப் பார்த்தாள்.

'அந்தக் குழந்தையை என்னவெல்லாம் படிக்க வைக்க வேண்டும்? எப்படியெல்லாம் வளர்க்க வேண்டுமென்று, அவன் கனவு கண்டான்! அவன் குழந்தையைக் கூட பெற்றெடுக்க முடியாத பாவியாயிட்டேனே!' என்று தனக்குள்ளே அழுது புலம்பினாள்.

அமெரிக்காவுக்குச் செல்ல விசா கிடைத்து, இன்னும் ஒரு வாரத்தில் அவன் பயணம் கிளம்ப வேண்டும். இவள் குழந்தை உண்டாகிவிட்டதால், சில மாதங்களுக்கு விமானப் பயணம் கூடாது என்று இருவரும் முடிவு செய்தனர். "அங்கு வீடெல்லாம் பார்த்து ஏற்பாடு செய்து விட்டு ஆறுமாதம் கழித்து வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன்" என்றான் அவன்.



அவளுக்கு அப்பாவிடம்தான் பயமேயொழிய, அம்மாவிடம் பாசம் அதிகம். ஏனோ தான் உண்டாகியிருப்பதை அம்மாவிடம் சொல்ல வேண்டும் என ஆசைப்பட்டாள். "ஒன் மேல என்னதான் கோபம் இருந்தாலும், நீ கொழந்தை உண்டாகியிருக்கேன்னு தெரிஞ்சா, ஒங்கம்மா ஒன்னை மன்னிச்சிடுவாங்க. அதனால் சொல்லு" என்று அவனும் அதை ஆமோதித்தான்.

தான் இருக்கும் இடம் தெரிந்துவிடும் என்று பயந்து ஆறு மாதங்களாக அம்மாவிடம் கூட போன் பேசாமல் இருந்த பாரதி, புதிதாக வாங்கியிருந்த சிம்கார்டு மூலம் அம்மாவைத் தொடர்பு கொண்டாள். புது எண்ணிலிருந்து வந்ததால், அவள் அம்மா முதல் முறை எடுக்கவில்லை. இரண்டாவது தடவை எடுத்தபோது, "யாரு பேசறது?" என்று கேட்டுக்கொண்டேயிருந்தாள்.

ஆறு மாதமாக அம்மாவின் குரலைக் கேட்காமலிருந்த பாரதிக்கு, அந்தக் குரலைக் கேட்டவுடன் எதுவும் பேச முடியாமல் தொண்டை அடைத்து அழுகை வந்துவிட்டது. அம்மா "ஹலோ! ஹலோ!" என்று கத்திவிட்டு போனை வைத்துவிட்டாள். அடுத்த நாள் பாரதி மீண்டும் ஃபோன் செய்து பேசியபோது, அம்மா குமுறிக் குமுறி அழுதாள்.

"எப்படியெல்லாம் ராக்கண்ணு முழிச்சி, பகல் கண்ணு முழிச்சிக் கஷ்டப்பட்டுப் பெத்து வளர்த்திருப்போம்? ஒனக்கு எது நல்லாயிருக்கும்னு ஒவ்வொரு பொருளாப் பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுத்த எங்களுக்கு ஒரு நல்ல புருஷனைத் தேடிக் கொடுக்க முடியாதா? என்னிக்கும் தீராத பழியை நம்ம குடும்பத்துக்கு ஏற்படுத்திக் கொடுத்திட்டியே! நம்ம சாதி சனங்க மூஞ்சில, ஒங்கப்பாவை முழிக்க விடாமப் பண்ணிட்டியே! எங்க தலையில மண்ணை வாரிக் கொட்டிட்டியே" என்று அழுதாள்.

பதில் எதுவும் சொல்லாமல், அம்மா அழுது முடிக்கட்டும் என்று இவள் காத்திருந்தாள்.

“அம்மா இவரும் ரொம்ப நல்லவர் மா. இவர்கூட நான் மூனு வருஷம் பழகியிருக்கேன். தப்பு தண்டாவுக்குப் போக மாட்டாரு. குடி சிகரெட்டுன்னு, எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது. யாரையும் கெடுக்கணும்னு மனசால கூட நெனைக்க மாட்டாரு. நல்லாப் படிப்பாரு. என் மேல பாசமாவும் அன்பாவும் இருக்காரு. இதுக்கு மேல எனக்கு என்ன வேணும்?”

“ஆனா நாம என்ன சாதி? அவன் என்ன சாதி? அதை ரோசிச்சிப் பார்த்தியா?”

அம்மாவின் குரலில் ஆத்திரம் பொங்கி வெடித்தது.

“எனக்கு மேல் சாதி, கீழ்ச்சாதி இதுல எல்லாம் சுத்தமா நம்பிக்கையில்லமா. அதை விடுங்க. நான் இப்ப ஒங்களுக்கு ஃபோன் பண்ணுனது, ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லத்தான்”.

“என்னது?”

“நான் உண்டாகியிருக்கேன் மா. ஒரு மாசம் ஆவுது. வீட்டுலதான் செக் பண்ணிப் பார்த்தோம். இன்னும் டாக்டர்கிட்ட போகல. ஏனோ இந்த விஷயத்தை ஒங்கக் கிட்ட மட்டும், ஒடனே சொல்லணும்னு தோணுச்சி..”

“அப்படியா? ரொம்ப சந்தோஷம்”.

அம்மாவின் குரலில் உண்மையான சந்தோஷம் இல்லாமல் ஒப்புக்காகச் சொன்னது போல் பாரதிக்குத் தோன்றியது. அது தன் திருமணத்தால் உண்டான கோபத்தால் இருக்கலாம்; நாளாக ஆகச் சரியாகிவிடும் என்று நினைத்தாள்.

அதற்குப் பிறகு அவள் அம்மா வாரமொரு தடவை அவளுக்கு ஃபோன் செய்து பேசினாள். அப்பாவுக்குத் தெரியாமல் ரகசியமாகப் பேசுகிறேன் என்று ஒவ்வொரு முறையும் சொன்னாள்.

“எங்க இருக்கே? எங்க தங்கி இருக்கே?” என்ற அம்மாவின் கேள்விக்கு மட்டும் பாரதியின் உள்ளுணர்வு எச்சரித்ததன் காரணமாகப் பதில் சொல்லவில்லை. சமயத்தில் வற்புறுத்திக் கேட்டபோது, ஊரின் பெயரை மாற்றிச் சொன்னாள். அம்மா உண்மையிலேயே அப்பாவுக்குத் தெரியாமல்தான் பேசுகிறாள் என்று பாரதி நாளடைவில் நம்பத் துவங்கினாள்.

ஆனால் அம்மா தன்னிடம் தகவல்களைச் சேகரித்து, ஒன்றுவிடாமல் அப்படியே அப்பாவிடம் ஒப்புவிக்கிறாள் என்ற சந்தேகம் துளியும் அவளுக்கு ஏற்படவில்லை. சிறு சந்தேகம் கூடத் தனக்கு வராமல் வெள்ளந்தியான அம்மாவால் நடிக்க முடியும் என்பதைப் பாரதியால் கற்பனை கூடச் செய்து பார்க்கமுடியவில்லை. அம்மா தொடர்ந்து பேசி, முழுநம்பிக்கையைப் பெற்றுவிட்டதால், அவளிடம் எந்த உண்மையையும் சொல்லலாம் என்று ஒரு கட்டத்தில் பாரதி முடிவுசெய்தாள். உண்மையிலேயே அம்மா தன்னை மன்னித்துவிட்டாள் என்றும், அப்பாவுக்காகத்தான் பயப்படுகிறாள் என்றும் அவள் நம்பிவிட்டாள். எனவே கணவனுக்கு அமெரிக்காவில் வேலை கிடைத்த விபரத்தையும், இன்னும் ஒரு வாரத்தில் பயணம் செல்லவிருப்பதையும், அம்மாவை நம்பிச் சொல்லிவிட்டாள்.

“ஒங்க வூட்டுக்காரரு கிளம்புறதுக்குள்ளே ஒரு தடவை டாக்டர்கிட்ட போய் செக் பண்ணிடுமா. அது ரொம்ப முக்கியம்” என்று சொன்ன அம்மா தனக்குத் தெரிந்த ஒரு மகப்பேறு மருத்துவரையும் சிபாரிசு செய்தாள்.

“அந்த லேடி டாக்டர் ரொம்ப கைராசிக்காரங்க. அவங்ககிட்ட போனா சில டாக்டருங்க மாதிரி ஒடனே ஆப்ரேஷன் பண்ணமாட்டாங்க. கடைசி வரைக்கும் காத்திருந்து, நார்மல் டெலிவரிக்கு முயற்சி பண்ணுவாங்க; ஆனா அங்க கூட்டம் அதிகமாயிருக்கும். நீ முன்கூட்டியே அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிட்டா, அங்கபோய்க் காத்திருக்க வேணாம்” என்றாள்.

“அன்னிக்கு அப்பா ஒங்கிட்ட இப்பிடிச் சொல்லச் சொன்னாருன்னுதான், நானும்

சொன்னேன்; ஆனா ஒங்களை அங்க வரவழைச்சிக் கொலை பண்ணச் சதித்திட்டம் தீட்டுறாருன்னு, அப்ப உண்மையாவே எனக்குத் தெரியாது" என்று எல்லாம் முடிந்த பிறகு, ஒருநாள் அம்மா பாரதியிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டாள்.

'அவன் போய்ச் சேர்ந்தபிறகு, பாவமன்னிப்பு கேட்டு என்ன பயன்? போன உயிர் திரும்பி வருமா?' என்று நினைத்து, வெறுப்பாக இருந்தது பாரதிக்கு.

அம்மா பரிந்துரைத்த மகப்பேறு மருத்துவர் பற்றிக் கணவனிடம் சொன்னபோது, "அப்படீன்னா அவங்ககிட்டேயே காட்டிக்கலாம். நல்ல அனுபவம் உள்ளவங்கக்கிட்ட காட்டிக்கிறதுதான் நமக்கும் நல்லது. அவங்க ஃபோன் நம்பர் பார்த்து அப்பாயிண்ட்மெண்ட் புக் பண்ணு; நான் அமெரிக்கா கிளம்புறதுக்குள்ளே போயிட்டு வந்துடலாம்" என்றான்.

பாரதியும் மருத்துவரைப் பார்க்க முன்பதிவு செய்தாள். ஆனால் அம்மா மீது துளியும் சந்தேகம் வராததால், உண்மையான பெயரையே கொடுத்து முன்பதிவு செய்தாள். அம்மா மீது வைத்த இந்த நம்பிக்கை, தன் கணவனின் உயிரைக் குடிக்கக் காரணமாக இருக்கப் போகிறது என்பதை அப்போது அவள் அறிந்திருக்கவில்லை.

இருசக்கர வாகனத்தில் அந்தக் குறித்த நேரத்தில் கணவனுடன் சென்று மருத்துவரைப் பார்த்தபோது, குழந்தை உண்டாகியிருப்பதை அவரும் உறுதி செய்தார். எல்லாச் சோதனைகளையும் முடித்துவிட்டு, அவர்கள் இருவரும் அந்தத் தெருவின் முனைக்கு வந்தபோதுதான், அந்த விபரீதம் நடந்தது.

ஆளரவமற்ற தெருமுனையில் அரிவாள் கம்புகளுடன் சிலர் நிற்பதைப் பார்த்த அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. உடனே வண்டியை நிறுத்தி அவளை இறங்கச் சொல்லிவிட்டு, "நீ பத்திரமா ஏதாவது ஆட்டோ புடிச்சி வீட்டுக்குப் போ" என்றான், பதற்றத்துடன். வண்டியை விட்டு இறங்கியபோதுதான், அவளுக்கு விஷயம் புரிந்தது.

இருபதடி தூரத்தில் கையில் அரிவாளுடன் அவள் அப்பா முதல் ஆளாக நின்றிருந்தார். அவருக்குப் பின்னால் பயங்கர ஆயுதங்களுடன் சிலர் நின்றிருந்தனர்.

"ஹூகும்.. போகமாட்டேன். அவங்க ஒன்னைக் கொன்னுடுவாங்க" என்று அலறினாள்.

"சொல்றதைக் கேளு பாரதி! இங்க நிக்காதே! ஒடனே வீட்டுக்குப் போ" என்று அவளைத் தனக்குப் பின்பக்கம் பிடித்துத் தள்ளினான்.

அரிவாளைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்த தந்தையின் குறுக்கே ஓடி, கீழே விழுந்து முன்னேறவிடாமல், அவர் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள் பாரதி.

"அப்பா! அப்பா! அவங்களை ஒன்னும் செஞ்சிடாதீங்க! என்னை வேணும்னா கொல்லுங்க!" என்று கண்ணீர்விட்டுக் கதறினாள்.

ஆனால் கொலைவெறியுடன் இருந்த அவள் தந்தையின் காதில், அவள் கத்தியது எதுவும் விழவில்லை. அவளைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு அவனை நெருங்கிய அப்பா... ஐயோ! அடுத்த நிமிடம் அங்கே அவள் கண்ட காட்சி! அவள் அன்புக்கணவன், அவள் கண்முன்னால் தலை வேறு, உடல் வேறாகக் கிடந்தான்! இப்போதும் கூட கண்ணை மூடினால், அந்தக் காட்சி கண்முன் வந்து அவள் உடலை உதறச் செய்கிறது! அடுத்தகணம் அவளுக்குத் தலைசுற்றி மயக்கம் வந்து கீழே விழுந்துவிட்டாள்.

அவளுக்கு நினைவு வந்தபோது, மருத்துவமனைப் படுக்கையில் இருந்தாள். இரத்தக்கசிவு ஏற்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு வந்ததாகவும், கரு கலைந்துவிட்டது என்றும், அங்கிருந்த செவிலியர் மூலம் தெரிந்துகொண்டாள். வேண்டுமென்றே கருவைக் கலைத்துக் கொன்றிருப்பார்கள் என்று அவளுக்குத் தோன்றியது.

'உயிருள்ள ஆளையே ஈவிரக்கமின்றி அரிவாளால் வெட்டிக்கொள்ளும் மாபாதகர்களுக்கு, ஒரு கருவைக் கலைப்பது பெரிய காரியமா என்ன?' என்று நினைத்தாள்.

'பெற்ற பாசமோ, வளர்த்த பாசமோ எதுவுமின்றிப் பிள்ளைகளையும், அவர்கள் அன்புக்குரியவர்களையும் கொன்று குவித்துவிட்டு, அப்பிணங்களின் மேல் ஏறி நின்று, இந்தக் கேடுகெட்ட சாதியைத் தூக்கிப் பிடித்து, இவர்கள் சாதிக்கப் போவதுதான் என்ன? குழந்தைகளைப் பெற்றோர் கைநீட்டி அடிப்பதே குற்றம் என்று மேல்நாட்டுச் சமூகம் சட்டம் இயற்றிக்கொண்டிருக்க, நம்சமூகம் இப்படிக் கற்காலத்துக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறதே!' என்று நினைத்தபோது, இவ்வுலக வாழ்வின்மீதே, அவளுக்கு உச்சகட்ட வெறுப்பு ஏற்பட்டது. மனச்சோர்வின் காரணமாக அவ்வப்போது தற்கொலை எண்ணமும், வந்துபோனது.


'மகனைக் காணவில்லை' என்று அவன் அம்மா காவல் துறையில் கொடுத்த புகாரின் பேரில், ரெயில்வே தண்டவாளத்தில் கிடந்த உடலைக் கைப்பற்றி, விசாரணை நடத்தியது, காவல்துறை. முதலில் தற்கொலை என மூடி மறைக்கப்பட்ட இந்த வழக்கு, பின்னர் கொலையென மாற்றிப் பதியப்பட்டது. சந்தேகத்தின் பேரில் இவளின் தந்தையும், அவர் கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டனர்.

"பாரதி! கோர்ட்டுக்கு நேரமாச்சு; கெளம்பு" என்ற அம்மாவின் குரல் கேட்டுப் பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டாள் பாரதி! இவளை அழைத்துப் போக, வக்கீல் காரில் வந்திறங்கினார்.

காரில் ஏறியபோது. "சொன்னது ஞாபகமிருக்கட்டும்" என்றாள் அம்மா.

நீதிமன்றம் போய்ச் சேரும்வரை, "அப்பாவா? கணவனா?" என்ற யோசனை மாறிமாறி வந்து அவளை அலைக்கழித்தது.

'கொலையை நேரடியாகப் பார்த்த சாட்சி யாருமில்லாததால், பார்க்கவில்லையென்று ஒரேயொரு பொய் சொன்னால், அப்பாவுக்கு விடுதலை நிச்சயம்! அவன் போனது போய்விட்டான்; அப்பாவுக்குத்



ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

தூக்குத்தண்டனை வாங்கிக் கொடுத்தால் மட்டும், இனி உயிரோடு வரப்போகிறானா? உண்மையைச் சொல்லி இன்னொரு கொலையை நான் செய்யவேண்டுமா?' என்றெல்லாம் யோசித்து, ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தவித்தாள் பாரதி.

நீதிமன்றக் கூண்டுக்குள் ஏறி நின்றதுதான், அவளுக்குத் தெரியும். அடுத்த விநாடி இதுநாள்வரை மனதுக்குள்ளே அடக்கிக் கட்டுப்படுத்தி வைத்திருந்த உணர்வுக் குவியலின் சுழற்சியில் சிக்குண்டு, அவள் சிந்திக்கும் திறனை முற்றிலுமாக இழந்துவிட்டாள்.

இரத்தம் ஆறாக வழிந்தோடி, தெரு முழுதும் செம்மண்டலமாக மாறி, அவன் துடிதுடித்து இறந்த காட்சியைக் கன்னங்களில் நீர் வழிய, அவள் விவரித்தபோது, நீதிபதி உட்பட பலரும், பொங்கிவந்த கண்ணீரைப் பிறருக்குத் தெரியாமல் மறைக்க, மிகவும் சிரமப்பட்டனர். துக்கவீடு போல் காட்சியளித்த அவ்வளாகத்தில், மயான அமைதி நிலவியது.

'இவளுடைய அவல உணர்வுகளை அப்படியே வார்த்தைகளுக்குக் கடத்தும் கவித்துவ ஆற்றலை, இவள் யாரிடமிருந்து பெற்றாள்? 'குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்ற பாரதியே உயிர்த்தெழுந்து, தன் பெயரைக் கொண்டிருந்த இவள் உடலில், கூடுவிட்டுக் கூடு பாய்ந்தானோ?' என்று அங்கிருந்தோர் வியக்கும் அளவுக்கு, தான் கண்டதை எல்லோருடைய கண்முன்னும் கொண்டுவந்து துல்லியமாகக் காட்சிப்படுத்தினாள் பாரதி.

தீர்ப்பை அடுத்த மாதம் ஒத்திவைப்பதாக நீதிபதி சொன்னவுடன், மன்றம் கலைந்தது. ஆட்டோவில் வீட்டுக்கு வந்து அவள் இறங்கிய போது, தலைவிரி கோலமாக வாசலில் நின்றிருந்த அம்மா, ஆக்ரோஷமாகக் கத்தினாள்.

"நில்லுடி! உள்ள வராதே! ஒனக்கே இது நியாயமாயிருக்கா? என் தாலி பாக்கியத்தைக் காப்பாத்துன்னு, ஒன் கால்ல விழாத குறையாக் கெஞ்சினேனே! பாவி! இப்பிடிப் போய்ச் சாட்சி சொல்லி, ஒங்கப்பாவுக்குத் தூக்குவாங்கிக் கொடுத்திட்டியே! நீயெல்லாம் ஒரு பொண்ணா? கொலைகாரப் பாதகி! ஒன்னைப் பெத்துக் கஷ்டப்பட்டு வளர்த்த எங்களுக்கு நீ காட்டுற நன்றிக்கடன் இதுதானா? அவனோட சேர்த்து, ஒன்னையும் அன்னிக்கே போட்டுத் தள்ளியிருக்கணும்டி" என்று கூப்பாடு போட்டாள்.

அவள் பதில் பேசாமல் நின்றிருந்தாள்.

"சரியான நெஞ்சழுத்தம் கொண்டவடி நீ! நம்ம லாயர் படிச்சிப் படிச்சிச் சொன்னப்பவெல்லாம், பூம்பூம்மாடு மாதிரி தலையாட்டிட்டு, இப்பிடி போய்ச் சாட்சி சொல்லி, நம்பிக்கைத் துரோகம் பண்ணிட்டியேடி பாவி!" என்று தலையில் அடித்துக்கொண்டு அழுதாள்.

"நீங்கள்லாம் ஒரு அம்மாவா? அப்பாவுக்குத் தெரியாம பேசறேன்னு, என்னை நம்ப வைச்சிக் கழுத்தறுத்து, எல்லாச் சேதியும் வாங்கி, அவருக்கிட்ட போட்டுக்குடுத்துப் பெத்த பொண்ணுக்குத் துரோகம் செஞ்சவங்க நீங்க! நம்பிக்கைத் துரோகத்தைப் பத்தி, நீங்க பேசறீங்களா?"

"ஆமாண்டி சொன்னேன். தாலி கட்டின என் புருஷனுக்கு உண்மையான பொண்டாட்டியா நடந்துக்கிட்டேன்! அதிலென்ன தப்பு?"

"அதே மாதிரிதான் நானும், என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட ஒரே பாவத்துக்காகத் துடிதுடிச்சு அல்பாயுசில செத்த என் புருஷனுக்கு உண்மையான பொண்டாட்டியா நடந்துக்கிட்டேன்."

"எப்ப பெத்த அப்பன்னு கூட பார்க்காம, அவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தியோ, இனிமே இந்த வீட்டுல ஒனக்கு இடம் கெடையாது."

"தேவையில்ல. எனக்கு இங்க இடம் இருக்காதுன்னு நல்லாத் தெரியும். பெத்த ஒரே புள்ளையையும் இழந்துட்டு, ஆதரவில்லாம நிற்கிற என் மாமியார் வீட்டுக்குப் போறேன்; இனிமே அவங்கதான் என் அம்மா" என்றாள் பாரதி. ■

நீ அந்தக் கடிதத்தை
எழுத எண்ணியிருக்கத்
தேவையில்லை....

நீ அந்தக் கடிதத்தை
எழுதியிருக்கத்
தேவையில்லை...

நீ அந்தக் கடிதத்தை
என் முகவரிக்கு
அனுப்பியிருக்கத்
தேவையில்லை....

நீ அந்தக் கடிதத்தை
சான்றுத் தபாலில்
அனுப்பியிருக்கத்
தேவையில்லை....

நீ அந்தக் கடிதத்தைப்
பதிவுத் தபாலில்
அனுப்பியிருக்கத்
தேவையில்லை....

அந்தக் கடிதம்
கிடைக்குமுன்
சந்திக்க வந்த
என்னைப் பார்த்து
பதற்றமுறுகிறாய்....

எத்துணை பெரிய
வில் வித்தைக்காரனுக்கும்
எய்த அம்பை
மீட்பது சாத்தியமில்லை
தானே....

- தமிழ்மணவாளன்

பயணத்தில்
குச்சிக்குச்சிக் கிளைகளை நீட்டிய
சில மரங்கள் நகர்ந்தன
பூ பூத்து குலுங்கிய
சரக்கொன்றைகள் நகர்ந்தன
உபயோகமின்றிக் காரைபடிந்த
கட்டிடங்கள் நகர்ந்தன
ஓரிரு பாலம் நகர்ந்தன
கொஞ்சம் நீருடன்
ஓடும் ஓடைகள் நகர்ந்தன
கொஞ்சம் வெயில்கள் நகர்ந்தன
கொஞ்சம் நிழல்கள் நகர்ந்தன
நகர்ந்தவைகளைக் கடந்து கடந்து
இலக்கை அடைந்தபோது
இறகுகள் பொருந்திய
பறவையாகி இருந்தது மனது.

- க. அய்யப்பன்



வாழ்வின் பெருநடனத்தை
கொதிக்கும் தேநீர்க்கோப்பையின்
விளிம்பின்மீது ஆடுகிற ஈ
நான்.

- ஜெயாபுதீன்

பரபரப்புகளடங்கி
அனைவரும் வெளியேறிய பின்பு
மேசை மீது
வைக்கப்பட்டிருக்கும்
கூழாங்கல்லின் மௌனம்
அறை முழுவதும் வழிய விடுகிறது
நதியின் சலசலப்புச் சத்தத்தை
கரையில் நிற்பதற்கு
நான் கண்களை மூடிக்கொள்கிறேன்

- மகேஷ் சிபி


ஆட்டுக்குட்டியொன்று
தன் அம்மாவைத் தேடிக்கொண்டிருக்கிறது
வாகனங்களுக்குத் தப்பித்துத் தப்பித்து
போக்குவரத்து மிகுந்த சாலையில்
தன் அம்மாவைத் தேடிக்கொண்டிருக்கிறது
கண்கள் நிறைய நம்பிக்கைகளோடு.
அம்மா
பிரியாணிக்கு வெட்டப்பட்டிருக்கலாம்
களவு போயிருக்கலாம்
அவசரக் காசுத் தேவைக்காக
விற்கப்பட்டிருக்கலாம்
ஏதேனுமொரு வாகனத்தில் அடிபட்டு
மரித்திருக்கலாம்
யாரேனும் கடத்திப் போயிருக்கலாம்
இவ்வெல்லாவற்றையும் தாண்டி
ஆடு திரும்பவும் வரலாம்
ஆட்டுக்குட்டி கத்திக்கொண்டேயிருக்கிறது
அம்மாவைத் தேடி

- சௌவி

# காணாமல் போனவள்


வயது 24, மாநிறம்,
சற்றே குறைந்த உயரம்,
அகண்ட கண்கள்,
அதீத புத்திசாலி,
ரசனை மிகு பாடகி,
தீவிரமான வாசகி..
காணாமல் போன தினம்
நீலப் பட்டுடுத்தி நிறைய
நகைகள் அணிந்திருந்தாள்..
திருமணம் முடிந்த கையோடு
சமையலறை புகுந்தவளை
அதன்பிறகு காணவில்லை..
அவளை மீண்டும் அவளாகவே
கண்டுபிடிப்பவர்கள்
அணுக வேண்டிய
தொலைபேசி எண்
●●●●●●●●●●●

- ஷெண்பா



மு.முருகேஷ்

# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை



புதுக்கோட்டையில் பிறந்த எல்லோருக்கும் இலக்கிய இளைப்பாறுதல் தரும் இடம் நகர்மன்றம் எனில் மிகையில்லை. நகரத்தின் மத்தியில் சுற்றிலும் மரங்கள் சூழ, அமைதி தவழ, பழைமையின் சுவடுகளைத் தாங்கி நிற்கும் நகர்மன்ற வளாகத்தை ஒரு சுற்று வந்தாலே போதும்; யாருக்கும் கவிதை எழுதும் ஆசை சின்னதாக முளைத்துவிடும். மாதத்தில் நான்கைந்து கூட்டங்களாவது நகர்மன்ற அரங்கில் நடைபெறும்.

கூட்ட அரங்கிற்குள் செல்லாமலேயே மரத்தடியில் உட்கார்ந்து, ஒலிபெருக்கி வழியாக உரைகளைக் கேட்பதே சுகமான அனுபவமாக இருக்கும். கம்பன் கழகம், திருக்குறள் மன்றம், திருவருள் பேரவை, தமுஎச, தகஇபெம உள்ளிட்ட பல அமைப்புகளின் கூட்டங்கள் அங்கேதான் நிகழும். அரசாங்கக் கட்டிடம் என்பதால் வாடகை மிகக் குறைவு. பலரும் கூட்டம் நடத்திட நகர்மன்றக் கட்டிடத்தையே தேர்வு செய்ய அதுவுமொரு காரணம்.

எழுத்தாளர்கள் ஜெயகாந்தன், பிரபஞ்சன், ச.தமிழ்ச்செல்வன், மேலாண்மை பொன்னுச்சாமி, கோணங்கி, திலகவதி உள்ளிட்டவர்களையும், கவிஞர்கள் கவிக்கோ அப்துல்ரகுமான், மீரா, மு.மேத்தா, சிற்பி, இன்குலாப், பிறைசூடன் ஆகியோரையும், திரை ஆளுமைகள் 'உதிரிப் பூக்கள்' மகேந்திரன், நாசர், பாரதி கிருஷ்ணகுமார் போன்றோரையும் நான் சந்தித்துப் பேசியது நகர்மன்றக் கூட்ட அரங்கில்தான்.

எத்தனையோ ஆளுமைகளை அங்குச் சந்தித்திருந்தாலும், 1990இல் நான் அங்கே சந்தித்த கவியாளுமையே என் வாழ்நாளில் மிக முக்கியமானவராகிப் போனார். அவர்தான் கவிஞர் ஈரோடு தமிழன்பன். கவிஞரைப் பார்க்க வேண்டுமென்கிற பேராவலில் நான்



பல்லாண்டுகள் காத்திருந்தேன். கம்பன் கழக விழாவில் பங்கேற்க அவர் புதுக்கோட்டை வருகிறார் என்பதையறிந்த கணத்திலிருந்தே என் காத்திருப்பு தொடங்கிவிட்டது.

ஈரோடு தமிழன்பனைப் பார்க்கவும் பேசவும் என்னைத் தூண்டியது அவரது கவிதைகளே. கவித்துவ அழகோடும் சமூகப் பார்வையோடும் நறுக்குத்தெறித்தாற்போல் எழுதுவதில் வல்லவர் ஈரோடு தமிழன்பன். நூலகத்திலிருந்த அவரது கவிதை நூல்கள் அத்தனையையும் வாசித்தேன். பல கவிதைகள் மனப்பாடமாகிப் போயின. ஆனாலும் அந்த இரண்டு கவிதைகள் மட்டும் என் நெஞ்சுக்கூட்டிலேயே கூடுகட்டிக் கொண்டன.

**'சுதந்திரத்தை**

**என்னால் சாப்பிட முடியவில்லை**

**சோறு கொடு.'**

**'உலராது பெருகும்**

**உலகின் விழிநீர்த் துடைக்க**

**ஒரு விரல் தேவை.'**

இக்கவிதைகள் தந்த தாக்கத்தில் நானும் ஒரிரு கவிதைகள் அப்போதே எழுதினேன். கூட்டங்களில் பேசும்போதும், நண்பர்களிடம் உரையாடும்போதும் இக்கவிதைகளைப் பகிர்ந்துகொண்டேன். கவிஞரைப் பார்க்க வேண்டுமென்கிற என் ஆர்வம் குறையாமல் கூடிக்கொண்டே போனது.

சரியாய் 32 ஆண்டுகளுக்கு முன்பு, முதல் ஆளாக நகர்மன்றத்திற்குச் சென்றேன். தூணோரமாக இருந்த இருக்கையில் இடம் பிடித்து உட்கார்ந்துகொண்டேன். 'இதோ... இதோ... என் கவிதை நாயகன் வரப்போகிறார்...' என்று காத்திருந்த நேரத்தில் எனக்குள்ளேயே உற்சாகமாகக் கூவிக்கொண்டேன்.

மெலிந்த தேகம், நேர்வகிடெடுத்த முகம், முகம் முழுக்க பூத்த புன்சிரிப்பு, பேண்டுக்குள்

சட்டையை இன்-செய்து வேக நடைபோட்டு வந்தார். அன்றைய கவியரங்கில் எல்லாக் கைத்தட்டல்களையும் அவரே மொத்தமாக அறுவடை செய்துகொண்டார். கம்பன் கழகக் கவியரங்கம் என்றாலும் நிகழ்காலத்தின் சூட்டையும் தனது கவிதைகளில் மிக நேர்த்தியாகப் பொருத்திச் சொன்னார். கவியரங்கம் முடிந்து கவிஞர் வெளியே வர, பெருங்கூட்டம் சூழ்ந்துகொண்டது. நானும் கூட்டத்தோடு கலந்துபோய், கவிஞருக்குக் கை கொடுத்தேன். கையிலிருந்த டைரியை நீட்டி, கையெழுத்துக் கேட்டேன். 'த' எனும் முதலெழுத்தைச் சின்னதாகவும் 'ழ' எனும் மூன்றாவது எழுத்தைப் பாதிப் பக்கம் வருமாறு பெரிய எழுத்திலும் போட்டுத்தந்த கவிஞரின் கையெழுத்து என் மனதில் கல்வெட்டெனப் பதிந்துபோனது. கவிஞர் புறப்பட்டுப்போனார். அவரோடு சேர்ந்தே நானும் பயணிக்கத் தொடங்கினேன். இன்னமும் பயணித்துக்கொண்டே இருக்கின்றேன்.


'தென்னாட்டு சாக்ரடீஸ்' எனப் புகழப்பட்ட தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மாவட்டத்திலுள்ள சென்னிமலையில் 1933ஆம் ஆண்டு செப்டம்பர் 28 அன்று செ.இரா.நடராசன் – வள்ளியம்மாள் தம்பதியினரின் மகனாகப் பிறந்தவர் ந.செகதீசன். சிறுவயதிலேயே தமிழ் மீது தீராக் காதல். பள்ளியில் படிக்கையில் விடிவெள்ளி, மலையமான் எனும் புனைபெயர்களில் கவிதைகளை எழுதினார். 'சுய சிந்தனை' எனும் கையெழுத்து இதழினை நடத்தினார்.

சென்னிமலையில் பள்ளிப் படிப்பைத் தொடங்கி, கரந்தைத் தமிழ்க் கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்வியை முடித்த செகதீசன், தமிழுணர்வினால் தமிழன்பனானார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றதோடு, 'தனிப்பாடல் திரட்டை' ஆய்வுசெய்து, முனைவர் பட்டமும் பெற்றார்.

'அழகின் சிரிப்பு', 'இசை அமுதம்' ஆகிய நூல்களைப் படித்துப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதைகளுக்குள் ஆட்பட்டுக்கிடந்த தமிழன்பன், 1954ஆம் ஆண்டு பிப்ரவரி 21 அன்று கரந்தைப் புலவர் கல்லூரியின் இளங்கோ மன்ற ஆண்டு விழாவிற்குத் தலைமையேற்க வந்த புரட்சிக்கவிஞரை, தனது 21ஆவது வயதில் சந்தித்தார். கவிஞரின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு பத்தாண்டு காலம் அவரோடு பயணித்தார். அதனைப் பின்னர் 'பாரதிதாசனோடு பத்து ஆண்டுகள்' எனும் நூலாகவும் எழுதினார்.


கையெழுத்துப் பிரதியாக இருந்த தமிழன்பனது 'நெஞ்சின் நிழல்' எனும் நாவலை வாசித்த புரட்சிக்கவிஞர், அதை நூலாக்குமாறு பாரி நிலையத்தில் கொடுத்தார். 'நெஞ்சின் நிழல்' நாவல் 1965இல் வெளியானது. 1968இல் 'கொடி காத்த குமரன்' எனும் வில்லுப்பாட்டு நூலே, கவிஞரது முதல் நூலாகக் கண்விழித்தது.

தோணி வருகிறது (1973), தீவுகள் கரையேறுகின்றன (1978), காலத்திற்கு ஒருநாள்



முந்தி (1982), நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம் (1982), ஊமை வெயில் (1984), நிலா வரும் நேரம் (1984), திரும்பி வந்த தேர்வலம் (1985), கருவறையிலிருந்து ஒரு குரல் (1987), பனி பெய்யும் பகல் (1998), திசை கடக்கும் சிறகுகள் (2015) உள்ளிட்ட 65க்கும் மேற்பட்ட கவிதை நூல்கள், உரைநடை நூல்கள் 25, மொழிபெயர்ப்பு நூல்கள் 2, ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் மொழிபெயர்ப்பான நூல்கள் 21 எனத் தமிழிலக்கிய வெளியில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து எழுதியும், வாசித்தும், இயங்கிக்கொண்டுமிருக்கும் பேராளுமையாகத் திகழ்ந்து வருபவர் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

ஈரோடு தமிழன்பனுக்குக் கவிஞரெனும் ஒரு முகம் மட்டுமல்ல; தமிழ்ப் பேராசிரியர், சிறுகதையாளர், நாவலாசிரியர், நாடக ஆசிரியர், சிறார் இலக்கியப் படைப்பாளி, வாழ்க்கை வரலாற்றாசிரியர், திறனாய்வாளர், கட்டுரையாளர், ஓவியர், சொற்பொழிவாளர், மொழிபெயர்ப்பாளர், திரைப்படப் பாடலாசிரியர் எனப் பன்முகங்கள் உண்டு. கவிஞரது கவிதைகள் இந்தி, வங்கம், மலையாளம், ஆங்கிலம், உருது உள்ளிட்ட பல மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. 'வணக்கம் வள்ளுவ' (2000) நூலுக்கு ஒன்றிய அரசின் சாகித்திய அகாதமி விருதினைப் பெற்றுள்ளார்.




தமிழின் மூத்த கவிஞர்கள் பலருக்கும் இல்லாத தனிச்சிறப்பொன்று ஈரோடு தமிழன்பனுக்கு உண்டு. மரபுக்கவிதையில் வேரிறக்கியவர், புதுக்கவிதையாகக் கிளை பரப்பி, ஹைக்கூவாக உலகின் திசைகளெங்கும் தன் சிறகுகளை விரித்து நிற்பதோடு, தமிழுக்குப் புதுப்புது கவிதை வடிவங்களை அறிமுகம் செய்பவராகவும் முன்நிற்கிறார்.

1960களில் ஜப்பானிய ஹைக்கூ நூல்களை ஆங்கிலம் வழியே வாசித்த ஈரோடு தமிழன்பன், 1985ஆம் ஆண்டு பிப்ரவரியில் 'சூரியப் பிறைகள்' நூலை வெளியிட்டார். அந்நூலில் 'வாசல் ஓர வாசகம்' எனும் 14 பக்க முன்னுரை ஒன்றினை எழுதி, ஹைக்கூ எதுவெனப் பலருக்கும் தெளிவைத் தந்தார். நூலில் ஓவியங்களைக் கவிஞரே வரைந்திருப்பது இன்னும் அழகு.

**'மூச்சுப்பட்டு அணையுமோ**

**விளக்கென்று மூச்சை நிறுத்தினேன்**

**இப்போது விளக்கில் இருக்கிறேன்.'**

- என்றெழுதிய கவிஞர் விளக்கில் மட்டுமா இருக்கிறார்..? இன்றைக்கு இளைய கவிஞர்கள் அனைவரின் இதயங்களிலும் அல்லவா ஒளிர்ந்துகொண்டிருக்கிறார்.

**'ஆகாயமும் அழகு**

**பூமியும் அழகு – ஆம்**

**என் கையில் ரொட்டித்துண்டு'**

- என்று பசியின் குரலை மிகச் செறிவாக ஹைக்கூவிலும் பதிவுசெய்தார்.

ஹைக்கூ கவிதைகளை மட்டுமின்றி,



சென்றியு (ஒரு வண்டி சென்றியு - 2001 ஏப்ரல்), லிமரைக்கூ (சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள் - 2002 அக்டோபர்), பழமொன்ரியு (ஒரு கூடைப் பழமொன்ரியு – 2004) என ஹைக்கூவின் கிளை வடிவங்களிலும் நூல்களைப் படைத்து, இளைய கவிஞர்களின் கைகளில் புதிய வடிவங்களைக் கொண்டு சேர்த்தார்.

1998இல் தமிழின் முதல் புதுக்கவிதையாலான பயண நூலாக ‘உன் வீட்டிற்கு வந்திருந்தேன்... வால்ட் விட்மன்!’, 2004இல் வினாக்களாலேயே ஆன முதல் நூலாக ‘கனாக்காணும் வினாக்கள்’, 2018இல் தமிழின் முதல் வினா விடை வகைமை கவிதை நூலாக ‘பூக்களின் விடைகள் புலரி கைகளில்’ எனப் பல புதிய முயற்சிகளிலும் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபட்டு வரும் கவிதை மனம் வாய்க்கப் பெற்றவர் ஈரோடு தமிழன்பன்.

புத்தகங்கள் குறித்து மட்டுமே கவிஞர் எழுதிய 122 கவிதைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் ‘புத்தகம் என்பது’ (2016) எனும் நூலாக வந்துள்ளது. அதிலொரு பக்கம்;

**‘தினம்**

**ஒரு வரிதான் படிக்க முடியும்**

**என்றால்**

**ஆத்திச்சூடி படி;**

**தினம்**

**இரு வரிகள்தான் படிக்க முடியும்**

**என்றால்**

**திருக்குறள் படி;**

**தினம்**

**மூன்று வரிகள்தான் படிக்க முடியும்**

**என்றால்**

**ஹைகூ படி;**

**தினமும்**

**நாலு வரிகள்தான் படிக்க முடியும்**

**என்றால்**

**நாலடியார் படி;**

**படிக்கவே முடியாதென்றால்**

**எப்படி?’**

‘இன்னும் சில வினாக்கள்’ எனும் கவிஞரது நூல் 2015இல் வெளியானது. அதிலுள்ள ஒவ்வொரு வினாவும் நம்முள் ஆயிரமாயிரம் சிந்தனைகளைக் கிளறும். அதிலொரு வினா;

**‘கவிஞனின் கடைசிக் கவிதை**

**அவன் எழுதுவானா? அவன்**

**மரணம் எழுதுமா?’**

ஈரோடு தமிழன்பனின் முதல் நூலே நாவல்தான். 1995இல் ‘ஒரு மழை நாளில்’ எனும் சிறுகதை நூலினையும் எழுதியுள்ளார். சுருக்கமாய் நறுக்காய்த் தனது கவிதைகளை எழுதினாலும், சமூக நிகழ்வுகளின் சாரம் சிறுகதைக்கான தீப்பொறி போல் அனல்

தகிப்பதைப் பல கவிதைகளிலும் காணக் கிடைக்கிறது.

'ஊமை வெயில்' கவிதை நூலிலுள்ள நான் நான் அல்ல, இப்போது நினைந்து..., கல்லறைக்கு வெளியே ஒரு நாள்... ஆகிய கவிதைகளும், 'கருவறையிலிருந்து ஒரு குரல்' நூலிலுள்ள ஓர் எழுத்தாளரின் மரணம், ஒரு குடும்ப அட்டைதாரர் கதை ஆகியன கவிதைக்குள்ளே பொதிந்திருக்கும் சிறுகதைகள் எனலாம்.

ஒரு கதைப்பதமிது;

**'அவன்**

**கேட்பது முப்பது ரூபாய் -**

**அதுவும்**

**கடனாக.'**

- என்று நண்பன் கடன் கேட்பதில் தொடங்கும் இந்தக் கவிதையில் -

**'தரமாட்டானா**

**திருப்பித்**

**தருவான் - தந்துவிடுவான்**

**ஒருவேளை**

**தராமலும் - தரமுடியாமலும் -**

**சந்தேகம்**

**கல்விட்டெறிந்தது'**

- சந்தேகம் வந்துவிட்ட பின்பு உறவென்ன, நட்பென்ன..? எல்லாமே தூரமாய் விலகிப்போகும்தானே..!

சட்டைப்பையிலிருந்து முப்பது ரூபாயை எடுக்கின்றான்.

**'இது என்**

**மனைவிக்கு**

**மருந்து வாங்க...'**

- என்று சொல்லி, உள்ளேயே வைத்தும் விடுகின்றான். கவிஞர் கவிதையை இப்படி முடித்துள்ளார்.

**'முகத்தைவிட**

**முகமூடி - அதிகம்**

**வேர்த்துவிட்டது.'**

முகமூடி அணிந்த மனித முகங்களின் முகத்திரைகளைக் கிழித்துத் தொங்கவிட்டுள்ளார் கவிஞர்.

'மானுடம் பாடும் வானம்பாடி'யாக உலகை வலம்வரும் கவிஞர் ஈரோடு தமிழன்பனுக்கு அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளிலுள்ள 60 தமிழ்ச் சங்கங்கள் ஒன்றிணைந்து 'வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கங்கள் பேரவை' (FETNA) எனும் அமைப்பின் மூலமாக, 2021-ஆம் ஆண்டிற்கான 'உலகத் தமிழ் பீட விருது' (விருதுத்தொகை சுமார் ரூ.11,29,000/) வழங்கிச் சிறப்பித்துள்ளன.

'மகாகவி பாரதிக்குப் பிறகு தமிழ்க் கவிதை அவ்வளவாக வளர்ந்து விடவில்லை என்றுதான் நான் கருதிக்கொண்டிருந்தேன். தமிழன்பனைப் படித்த பிறகு, என் கருத்தை மாற்றிக்கொண்டேன்' என்றார் எழுத்தாளர் ஜெயகாந்தன்.

'ஒரு கவிஞன் சில கவிதைகளை எழுதுகிறான்; ஒரு நல்ல கவிஞன் சில கவிஞர்களையே எழுதுகிறான்; ஒரு மகாகவி மட்டுமே ஒரு காலத்தையே எழுதுகிறான்' என்பர் ஆய்வறிஞர்கள். அப்படி ஒரு காலத்தையே எழுதியவராக, 89ஆவது வயதில் இன்னமும் எழுதிக்கொண்டிருப்பவராக, இருபத்தியோராம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதையின் உலகு தழுவிய முகமாக விண்ணுயர்ந்து நிற்கும் கவிஞரை, 'நம் காலத்தில் வாழும் மகாகவி ஈரோடு தமிழன்பன்' என்று நாம் கொண்டாடுவதுதான் தமிழ் மொழிக்கும் தமிழ்க் கவிதைக்கும் பெருமை சேர்க்கும் செயலாக இருக்க முடியும்.

- இன்னும் சொல்வேன்... ■

● கவிஜி

# தலைக்குள் நீளும் கிரீடத்தின் முட்கள்




## திரைப்படம் : *Calibre*
## இயக்குநர் : *Matt Palmer*

அப்படி நடக்கும் என்று வாகன் எதிர்பார்க்கவில்லை. துப்பாக்கி சுடுவதில் நிபுணனான நண்பன் மார்கஸ்-உம் நினைக்கவில்லை. பார்த்துக்கொண்டிருக்கும் நாமும் அப்படி ஒரு திருப்பத்துக்குக் காத்திருக்கவில்லை.

ஆனால் அந்தச் சம்பவம்தான் ஒவ்வொருவர் வாழ்விலும் வேறு வேறு வடிவங்களில் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அடுத்த நொடி என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாத சுவாரஸ்யம்தான் இந்த வாழ்வின் ஒவ்வொரு வளைவிலும் இருக்கும் அனுபவம்.

மனைவி கர்ப்பமாக இருக்கும் சூழல். ஆனாலும் சிறு வயதிலிருந்து கூட இருக்கும் நண்பன் அழைக்கிறான் என்று மார்கஸோடு வீக் எண்ட் கொண்டாட்டத்துக்காக வேட்டைக்குக் கிளம்புகிறான் வாகன். வாகன் பள்ளி நாட்களில் பயிற்சியில் சுட்டது. இப்போது சுடுவதில் பெரிதாகப் பயிற்சியும் இல்லை. ஈடுபாடும் இல்லை. வேட்டையாடுதலில் பெரிதாக விருப்பம் இல்லை என்றாலும் நண்பனுக்கு அதில் விருப்பம் இருப்பதால் கூடச் செல்கிறான். நண்பன் லைசன்ஸ் துப்பாக்கி வைத்திருப்பவன். துப்பாக்கியில் துர்பாக்கியமும் சேர்ந்தே வருகிறது என்று இருவருக்குமே அப்போது தெரியாது.

மாலை வரை எதுவும் கிடைக்காத சலிப்பில் சோர்ந்திருந்தபோது கண்ணுக்கு



லட்சணமாய்க் கொழுகொழுவென ஒரு மான் கொம்பிலும் அசைவின்று மேய்ந்துகொண்டிருக்கிறது. காட்சியில் பேரமைதி. வேட்டைக்காரனின் கண்களில் வேறமைதி.

“இது உன் ஷாட். அடி” என்கிறான் நண்பன் மார்கஸ். வாகன் முதலில் மறுத்தாலும் பிறகு குறி பார்க்கிறான். குறி பார்க்கப்படுகிறது. ஒற்றைக்கண்ணில் ஆதி மனிதனின் அரூவம். விரல் சுண்டி இழுக்கிறது. பட் எனச் சப்தம். மான் ஓடிவிடுகிறது.

மானுக்குப் பின்னால் நின்று மானை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த பத்து வயது சிறுவனின் நெற்றியில் புல்லட் பாய்கிறது. எல்லாமே நொடிக்கும் குறைவாக நடந்து முடிந்துவிடுகிறது. என்ன நடந்தது என்றுகூட உணர முடியவில்லை.

உறைந்துபோகிறார்கள்.

வேட்டை உலகத்தில் வேகம் குறைந்து நின்றேபோகிறது. வேர்க்கவிறுக்க உள்ளே தறிகெட்டுச் சுழலும் காட்டை வேடிக்கை பார்க்கிறான் வாகன். வார்த்தை இல்லை. வாக்கியத்தில் மறந்துபோன சொற்றொடர் மொழியற்றுப் பிதற்றுகிறது. அந்தச் சிறுவனின் அருகே சென்று பார்க்கிறான். அவன் செத்துவிட்டான். வாகனுக்கு மூச்சு இல்லை. முகம் முட்டுகிறது.

திடும்மென “சம்மி.. சம்மி..?” என்று புதருக்குப் பின்னிருந்து ஒரு குரல். இருவரும் பதறுகிறார்கள். அதே கணத்தில் சிறுவனைத் தேடிக்கொண்டு வரும் அப்பா, மகன் சுடப்பட்டுக் கிடப்பதைப் பார்க்கிறார். உறைந்து நடுங்குகிறார். துடிக்கிறார்.

“என்னடா பண்ணுனீங்க என் பையன....!” என்று இருவரையும் மாறி மாறிப் பார்த்தபடியே கதறுகிறார்.

“சாரி... ஐம் சாரி.. ஐம் சாரி... தெரியாம.. தெரியாம.... சாரி.. சாரி...” வாய்க்குள்ளாகவே முனங்குகிறான் வாகன். குற்ற உணர்ச்சி காடுகளின் நெடியாய் அவனைக் குடைகிறது.

வெறித்து மகனைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துப் பரிதவிக்கிறார் அப்பா.

பட்டென்று இன்னொரு சத்தம். வாகன் இன்னும் மூர்ச்சையாகிறான். காடு ஸ்தம்பித்து தவம் கலைகிறது. அந்த அப்பாவைச் சுட்டுவிடுகிறான் மார்கஸ். ஏன்டா என்பது போல இயலாமையில் கண்கள் அழுந்தப் பார்க்கிறான் வாகன்.

“வேறு வழி இல்லை. விஷயம் வெளிய தெரிஞ்சா ரெண்டு பேருமே காலத்துக்கும் உள்ளதான்... அதான் சுட்டேன்” என்கிறான் மார்கஸ்.

ஒரு வீக் எண்ட் விளையாட்டு வீதி சுற்றி வாசலில் குழி தோண்டி வைத்திருக்கிறது. சரி தப்பு நியாயம் அநியாயம் அறம் துரோகம் என்று எல்லாமும் கண் முன்னே ரத்தம் கொப்பளிக்கிறது வாகனுக்கு.

“வேற வழி இல்லடா. உன்ன காப்பாத்த வேற வழி தெரியல. முதல்ல இங்கிருந்து கிளம்புவோம் வா” என்று நண்பன் வாகனைப் பிடித்து இழுத்துக்கொண்டு செல்கிறான் மார்கஸ்.

காரில் இருவருக்கும் பேச்சில்லை. மூச்சிருக்கிறதா என்று பார்த்துக்கொண்டிருக்கும் நாம் ஆராய்ச்சி செய்கிறோம்.

அன்றிரவு மீண்டும் அதே இடத்துக்கு வருகிறார்கள். குழி தோண்டுகிறார்கள். இரவும் நிலவும் பனியும் துளியும் சாட்சி. காட்டுப்பூச்சிகள் சலசலக்க.. பேரமைதியின்

குறுக்கே குழி தோண்டுகிறார்கள். காட்டிக் கொடுக்காத மூச்சிரைத்தலைக் காட்டுக்குள் நடுகிறார்கள். காடு தவங்களின் பிள்ளை. தவமு மறந்து இரவு கொண்டிருக்கிறது. மானுடச் சமூகத்தின் மறதிக்கு மிஞ்சிய இரவைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு வியர்த்து விக்கித்து மாற்றி மாற்றித் தோண்டுகிறார்கள்.

கத்தி கொண்டு சிறுவன் நெற்றியில் இருக்கும் புல்லட்டை எடுக்கும்போது வாகன் மறுதலிக்கிறான்.

“ஒருவேளை பாடி கண்டுபிடிக்கப்பட்டால் போஸ்ட் மார்ட்டத்தில் புல்லட் தெரிந்துவிடும். ஈசியாக மாட்டிக்கொள்வோம்...” என்கிறான் மார்கஸ்.

வேறு வழி இல்லாத வழியில் வந்துவிட்டோம். வேறு வழியே இல்லை. வழி கடந்துதான் ஆக வேண்டும். மார்கஸின் செயல் நடுக்கத்தோடு முனங்குகிறது.

ஒரு விபத்தோடு நின்றிருக்க வேண்டிய சம்பவம் இன்னொரு கொலையோடு தொடர ஆரம்பிக்கிறது. இயல்பிலிருந்து விலகுதல் அத்தனை சுலபமல்ல. இருவருக்குள்ளும் நெருப்பு துளிர்க்கிறது. இருவருக்குள்ளும் வெறுப்பு சுழல்கிறது. அச்சம் அமைதியின்மை என்று தவிக்கிறார்கள். கிளம்பி அறைக்குச் சென்ற பிறகும் குழப்பம் கழுத்தில் அமர்ந்திருக்கிறது.

வாகனுக்கு என்னென்னவோ யோசனை. இதிலிருந்து எப்படி தப்பிப்பது என்று புரியவில்லை. உள்ளும் புறமும் உருக்குலைக்கும் உவமையை மௌனம் முணுமுணுத்துக்கொண்டே விடிகிறது.

அதன் பிறகு நடக்கும் நர்த்தனங்கள் மானுடத்தின் சந்து பொந்துகளில் சதா கொறித்துக்கொண்டிருக்கும் பெருச்சாளிகளின் கீச்சொலிதான். நித்தமும் தூக்கிச் சுமக்கும் கிரீடத்தில் முட்கள் தலைக்குள்ளும். சம்மியையும் அவன் அப்பாவையும் தேடும் ஊர்க்காரர்களோடு சேர்ந்து வாகனும் மார்கஸ்ம் தேடிச் செல்லும் காட்சி பரபர பயம் திரையில். அவர்களோடு இருக்கும் ஒவ்வொரு நொடியும்



ஒவ்வொரு பிடி இறுக்கம் கூடிக்கொண்டே இருக்கிறது.

அன்று நடக்கும் சம்பவங்களின் வழியே அந்தப் பிணங்கள் கண்டெடுக்கப்பட்டனவா. இவர்கள் என்னானார்கள். வஞ்சத்தின் முன் பழி எடுக்கும் எண்ணத்தின் முன் நண்பர்கள்.... நம்பிக்கைக்கும் நானுக்கும் இடையே சிக்கித் தவிப்பதை நடுக்கத்தோடுதான் காண்கிறோம். ஒரு குடும்பத்தின் தவிப்பும் நண்பர்களின் தவிப்பும் ஒன்றுக்கொன்று போட்டி போடுவதில் அச்சத்தை மிக அருகே உணர்கிறோம். தவறுகள் சிறியதாக இருக்கும்போதே திருத்திக்கொள் என்பது முன்னோர்களின் வேத வாக்கு. அதுதான் இங்கும் அடிக்கோடிடப்படுகிறது. ஒன்றின் நீட்சியில் இன்னொன்று மீசை முறுக்கித் தாடி வளர்ந்து முகத்தைச் சிதைத்துவிடும் சம்பவங்கள்தான் நம்மைச் சுற்றியும். சூதானம் மிக முக்கியம்.

இந்த உலகின் கண்களைத் தாண்டி எதையும் எதையும் எப்போதும் மறைக்கவே முடியாது. பறவைகள் கூட்டின் ரகசியங்களைத் தூக்கிப் பறந்தாலும் கூடு காட்டிக்கொடுத்து விடுகிறது. மனிதனின் கண்கள் மானுடத்தின் மிக நீண்ட வடிவத்தில் மெருகேறியவை. அதற்குப் பொய்கள் சொல்லத் தெரியாது. தன் மனதின் சுயம்.. சாயம் போகும் இடத்துக்கெல்லாம் சென்றுவிடவே கூடாது. அது காலத்துக்கும் குருதி தோய்ந்த சுய கழிவிரக்கத் துயரம். ■

பகிர்வு

● ஆதிரன்



# மனநிலைக் குறிப்புகள்-18

## தத்துவ மனநிலை

மனிதர்களின் கண்டுபிடிப்புகளில் மூலச்சிறப்பு மிக்கவைகளில் ஒன்று இசை. மொழியின் ஆதிவடிவம் இது. பூவுலகின் பூர்வமனிதர்கள் காலங்காலமாகப் பல்வேறுவகை ஒலிகளை உன்னிப்பாகக் கேட்டு, தொகுத்து வகைப்படுத்தப்பட்டதன் விளைவே இசை எனலாம். பறவைகள் மற்றும் விலங்குகளின் குரல்கள் வெறும் தகவல் பரிமாற்றமே. சில பறவைகளின் மிமிக்ரி திறமை அதன் பாதுகாப்புத் தேவை சார்ந்தது மட்டுமே. ஆனால் கணக்கியல் குறியீட்டுடன் ஒலிக்கலவையை இசைக் கோர்ப்பாக உருவாக்கியது என்பது மனித செயல்.

வாய்ப்பாடல்களும் இசைக்கருவிகளும் மனித அறிவினால் உருவாக்கப்பட்டவை. உண்மையில் இசை என்பது ஒரு பன்னெடுங்காலத் தொடர் உருவாக்கம். இசை என்பது மனித தத்துவச் சிந்தனையின் மிகச்சிறந்த விளைவு என்றால் மிகை ஆகாது. ஆயிரக்கணக்கான சமூகங்களின் எண்ணிலடங்காத பண்பாடுகளில் இசைக்கான அர்த்தங்கள் தனித்தனியானவை. எனவே இசையை வரையறுப்பது என்பது ஏறக்குறைய இயலாத செயல். ஏனென்றால், இசை ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வில் அந்தந்த நேர உணர்வுகளைச் சார்ந்திருக்கிறது. அதே சமயம் இசையை உருவாக்குவது குறித்த துல்லியமான கணக்கிடல் நம்மிடையே இருக்கிறது. இசையில் பல்வேறு வகைமை இருக்கிறது. இசை என்றால் என்ன என்பதைச் சரியாகச் சொல்ல ஒரு குழந்தையால்தான் முடியும் என்று தோன்றுகிறது. எனவே இசை என்றால் என்ன என்று கேட்கப்படும்போது இசையின் தத்துவம் உருவாகிறது. கூடவே அவை தொடர்பான சொல்லாடல்களும் உரையாடல்களும் தோற்றம் கொள்கின்றன. இசையின் தேவை பற்றிய விளக்கங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆக, இசை என்றால் என்ன, இசையின் தேவை என்ன, இசையை உருவாக்கும் விதம் என்ன மற்றும் இசையின் விளைவு அதாவது இசை மனிதர்களுக்கு என்ன செய்கிறது ஆகிய நான்கு கேள்விகளில் இந்த ஒட்டுமொத்த இசைத்

தத்துவம் அடங்கிவிடுகிறது. ஆனால் இசை எப்படி தோன்றியது என்கிற அடிப்படைக் கேள்வியிலிருந்து தொடங்குகிறார்கள் இசையைப் பற்றிய படிப்பை (ethnomusicology) மேற்கொள்பவர்கள். இதற்கான விடை மனிதர்களின் தொன்மக் கதைகளில் இருந்து மட்டுமே அறிந்துகொள்ள முடிகிறது. பொதுவாக, மனிதர்களின் வாழ்வியலில் வானத்திலிருந்து வந்தவர்கள், நீருக்குள்ளிருந்து வந்தவர்கள், காற்றுக்குள்ளிருந்து வந்தவர்கள், தீயிலிருந்து வந்தவர்கள், இருளிலிருந்து வந்தவர்கள், மரத்திலிருந்து வந்தவர்கள் எனப் பல்வேறு வகையில் இயற்கையின் உள்ளிருந்து வந்தவர்களால் இசை கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

பழங்குடி மரபில் இன்றுவரை நடப்பில் இருக்கும் தொன்மக் கதைகள் இதை உறுதி செய்கின்றன. எடுத்துக்காட்டாக, செவ்விந்தியக் கருங்காலி பழங்குடியினரின் (black foot tribe) ஒரு தொன்மக் கதை: நீர்நாய் (beaver) ஒன்றுடன் காதல் கொள்கிறாள் கருங்காலி இனப் பெண்ணொருத்தி. தினமும் அவள் அதனுடன் நீருக்கு அடியில் சென்று நீண்ட நேரம் கழித்து வருகிறாள். கருங்காலி இனத்தில் ஓரம்போவது கடும் தண்டனைக்குரிய செயல். ஆனால் அவளது கணவன் அவளையும் அவளுக்குப் பிறந்த நீர்நாய்க் குழந்தையையும் நேசிக்கிறான். காலப்போக்கில் அந்த நீர்நாயுடன் அவனுக்கு நட்பு உண்டாகிறது. இருவரும் சேர்ந்து உரையாடுகிறார்கள். நீர்நாய் தன்னை மன்னித்து நட்பு பாராட்டும் அவனுக்கு உதவ நினைக்கிறது. தன்னிடம் இருந்த மந்திர சக்தியை அவனுக்குக் கற்பிக்கிறது. ஒவ்வொரு மந்திரத்திற்கும் அவன் தன் சேகரிப்பில் இருக்கும் விலங்கு மற்றும் பறவையின் தோல்களைப் பரிசாக அளிக்கிறான். அந்த மந்திரம் என்பது பாடல்கள். அதை எப்படி பாடுவது என்பதை நீர்நாய் அவனுக்குக் கற்றுத் தருகிறது. இது அந்தக் கதையின் ஒரு சுருக்கமான வடிவம். போலவே பொலிவியக் கதை ஒன்றில், சொர்க்கத்திலிருந்து வந்த ஒருவனுடன் சென்றுவிடும் பழங்குடிப் பெண்ணொருத்தி, தான் மீண்டும் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்கிறாள். அவன் சம்மதித்து, அவள் செல்லும் முன் அவளுக்குப் பாடுவதற்குக் கற்றுத் தந்து பாடல்களையும் சொல்லித் தந்து அனுப்புகிறான். அவள் திரும்ப வந்து அவளது ஒழுங்கற்ற சதா சண்டை சச்சரவுகளுடன் இருக்கும் சமூகத்திற்குப் பாடல் பாடுவதையும் பாடல்களையும் அறிமுகம் செய்கிறாள். அவற்றைக் கற்றுக்கொண்ட சமூகம் ஒழுங்கமைதி கொள்கிறது. இதுதான் உலகம் முழுவதும் இசை தோன்றியதின் சாராம்சமாக இருக்கிறது. தமை மீறிய மாயசக்திகளுடன் உரையாட, குழந்தைகளைத் தூங்கவைக்க, சோகத்தில் ஒப்பாரி வைக்க தன்னிச்சையாக எழுந்த ஒலிவடிவம் பின்னால் பண், சுருதி தாளம், சுரம் என அதன் உச்சத்தை அடைந்தது. இசையின் ஆதிவடிவம் தமிழ்ப்பண்பாட்டில் மிகப்பழைமை மிக்கதாகும்.

தமிழிசை பற்றி `கீற்று` இணையதளத்தில் ஈரோட்டைச் சேர்ந்த கணியன் பாலன் என்பவர் எழுதிய கட்டுரை ஒன்றின் சிறு பத்தியை நன்றியுடன் எடுத்தாளுகிறேன்: *தமிழிசையின் சிறப்பு என்பது நிலங்களை ஐவகையாகப் பிரித்துப் பருவத்திற்கும், பொழுதிற்கும் ஏற்ற பண்களை வகுத்ததாகும். அதாவது ஒவ்வொரு பண்ணுக்கும் நிலம், பருவம், பொழுது ஆகிய மூன்றும் இருக்கும். சான்றாக செவ்வழிப்பண் என்பது முல்லை நிலத்திற்கும், கார் காலத்திற்கும், மாலை நேரத்திற்கும் உரியது. ஐந்து நிலங்களுக்கும் உரிய சூழ்நிலை, பருவநிலை, காலம், நேரம், தட்பவெட்பநிலைகளுக்கு ஏற்றவாறு கருவிகள், பண்கள், கூத்துவகைகள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் ஏராளமாக உள்ளன. பண்டைய தமிழிசைதான் வட இந்திய இசைக்கும் அடிப்படை. ஆதலால் வடநாட்டினர் பருவத்திற்கும் காலத்திற்கும் ஏற்ற பண்களைப் பாடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். பண்டைய தமிழிசையின் மரபு இது. இன்றும் இதனைத் தமிழ் நாகசுர இசைக் கலைஞர்களும், இந்துசுதானி இசைக்*

*கலைஞர்களும் கடைபிடிக்கின்றனர். ஆனால் கர்நாடக இசைப் பாடகர்கள் இதனைப் பின்பற்றுவதில்லை. இந்திய இசைக்கும் ஐரோப்பிய இசைக்கும் அடிப்படை 12 அரைச்சுரங்கள்தான். இந்த 12 அரைச்சுரங்களைக் கொண்டுதான் நமது இராகங்கள் வகுக்கப்பட்டன. ஆனால் இந்தப் பொதுவான இலக்கணப்பூர்வமான இசையை விடுத்து 13ஆம் நூற்றாண்டுக்குப்பின் வந்த வடமொழி இசை இலக்கண நூல்கள் பண்டைய தமிழ் மரபு வழிவந்த இசை இலக்கணங்களில் சில தவறான கொள்கைகளை உருவாக்கி அவைகளைச் சீர்குலைத்துள்ளன. இந்நிலை ஐரோப்பிய அறிஞர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. இயற்பியல் கணிதவியல்படி இதுவரை நாம் அறிந்துள்ள சுரத்தானங்களைவிட நுட்பமான சுருதிகளைக் கொண்ட சுரத்தானங்களும் நமது தமிழிசையில் பழக்கத்தில் உள்ளன. நம் முன்னோர்கண்ட ஆயப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப்பாலை, சதுரப்பாலை எல்லாம் கணித வடிவங்களே ஆகும். நமது இசையின் இயல் பகுதியைக் கணிதப்படுத்த வேண்டும். இனிய ஒலிதான் இசை என்பதால் அதை இயற்பியல் மூலம் ஆய்வு செய்யவேண்டும். அப்பொழுதுதான் சுருதி குறித்த முழு அறிவையும் நாம் பெற முடியும். பண்டைய தமிழ்ப் புலவர்கள் மொழி இலக்கணம் மட்டுமல்ல, இசை இலக்கணமும் கற்றவர்கள். ஆனால் 20ஆம் நூற்றாண்டு 'புலவர்' படிப்பு படித்தவர்கள் இசை இலக்கணம் கற்கவில்லை எனினும் தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு ஆழ்ந்து கற்றவர்களாகவும் தமிழ்ப்பற்று மிக்கவர்களாகவும் இருந்தனர். ஆனால் இன்றுள்ள இளநிலை, முதுகலைத் தமிழ்ப் பட்டதாரிகளின் நிலை கேள்விக்குரியதாகவுள்ளது. அதனால்தான் தமிழ் பலவிதங்களிலும் வீழ்ச்சியடைந்துள்ளது. தமிழறிஞர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களுடன் இசை இலக்கணத்தையும் கற்கவேண்டும். தமிழை, தமிழிசையை வளர்க்க வேண்டும். இசை என்பது ஒருமை கிடையாது. மேற்கத்திய மரபுகளில் பெரும்பாலும் `மியூசிக்ஸ்` என்று பன்மையிலேயே குறிக்கிறார்கள். நாம் இசைகள் என்று குறிப்பிடாவிட்டாலும் இசை என்கிற சொல் ஒருமை அல்ல அது ஒரு பன்மை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.*

• •

## ஓவிய மனநிலை

அனைத்துத் துறைகளிலுமே மரபான தொடர்ச்சியிலிருந்து சற்று மாறுபட்டு சிந்திக்கத் துவங்கி அதைச் செயல் வடிவம் கொடுப்பவர்கள் சட்டென்று தனித்துவம் அடைந்துவிடுவார்கள். ஓவியத்தின் வரலாற்றில் அது போன்ற மரபு மீறல்கள் அடிக்கடி நிகழ்வதைக் காணலாம். மரபை மீறுவது என்பது இரண்டு வகைகளில் நிகழும். ஒன்று மரபுக்குள்ளிருந்தே அதன் சாரத்தை மாற்றிக்கொள்வது. இரண்டாவது மரபை மறுத்து அதை முழுவதுமாக நிராகரித்துப் புதிதாக ஒன்றை உருவாக்குவது. மரபை மீறாமல் பாணியில் புதுமை செய்து உலகப் புகழடைந்த இருவரைப் பற்றிய சிறு அறிமுகம் இது. அதிலொருவர், ஓவியத் துறையில் பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசி வருடங்களில் மிகக் குறிப்பிடத்தகுந்த ஓவியர் *Hieronymus Bosch*. நெதர்லாந்து ஓவியரான இவர், கிருஸ்துவ மரபை மீறாதவர். ஆயினும் அவர் உருவாக்கிய ஓவியப்பாணி மிக நுணுக்கமானதும் வினோதமானதும் ஆகும். ஏறக்குறைய ஒரு மத வெறியராக அறியப்பட்ட இவர் சர்ரியலிச ஓவியங்கள் உருவாக்கப்படுவதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே அவை போன்ற படைப்பை உருவாக்கியவர். அவரது தீவிர மனநிலைப் போக்கு தற்போது உளவியல்ரீதியாகத் திட்டமிட்ட செயல்பாடு என்று பார்க்கப்படுகிறது. பொதுவாக கிருஸ்துவ மரபில் நரகம் பற்றிய கருத்தாக்கம் நாம் அறிந்ததே. அச்சொல்லாடல்களின் தொகுப்பைக் கண்முன்னே ஓவியமாக விரிப்பதை இந்த மனிதன் அற்புதமாகச்

செய்துள்ளான் என்றே கருதுகிறேன். ஒரு ஓவியம் மனிதனின் மூளையில் மூர்க்கமாகப் பதிவதை இந்த ஓவியத்தின் மூலம் நம்மால் உணர முடியும். என்ன ஒரு தொடர்வகை *(sequence)!* அதிலிருக்கும் குறியீட்டு வகைப்பாடுகள். ஏறக்குறைய ஒரு நாவலின் முழுவடிவமாய்த் திகழ்கிறது இந்த ஓவியம். மூன்று பிரிவுகளாகச் சுமார் பத்தாண்டுகாலம் இந்த ஓவியத்தை வரைந்ததாகச் சொல்கிறார்கள். படத்தைக் கூகுளில் பதிவிறக்கம் செய்து பெரிதுபடுத்திப் பார்த்தால் இதன் பிரமாண்டம் புரியும். இந்தப் படத்தில் இருக்கும் ஒரு வட்ட மேசையின் அடியில் தனது முகத்தை வரைந்தது ஒரு பெரிய புரட்சியாகப் பார்க்கப்பட்டது. *The Garden of Earthly Delights* – என்று பெயரிடப்பட்ட முப்பட்டை ஓவியத்தில் மூன்றாம் பட்டையில் விவரிக்கப்பட்டுள்ளது இந்த நரகம். முழு ஓவியமும் ஒரு வகை *feast of a beast* எனச் சொல்லலாம். அனுபவியுங்கள். இரண்டாவதாக, *Francisco Goya*. ஸ்பானியரான இவர் தனது வீட்டின் உணவறையில் இந்த ஓவியத்தை வரைந்தார். சனி *(Saturn)* என்ற பெயர் கொண்ட இந்த ஓவியம் நிறைய உளவியல் சிக்கல்களைப் பேசுவதாக வல்லுநர்கள் கருதுகிறார்கள். நமது ஹம்சனைப் போலவே ரோமானியக் கடவுள்களில் ஒருவர். நமது சனியனைப் போன்றே இவர் நேரத்தின் கடவுள். இவரது வலுவத்தை மகன்களில் ஒருவன் கைப்பற்றுவான் என்ற ஆரூடத்தால் கோபமடைந்து தனது மகன்களைப் பிறந்தவுடன் உயிருடன் தின்றுவிடுவான் என்கிறது தொன்மக்கதை. *La maja desnuda* என்ற நிர்வாண ஓவியத்தை வரைந்து பெரும் புகழடைந்த இவரின் `மகனை உண்ணும் சனி` என்கிற இந்த ஓவியம் மிக ஆழமான ஒரு ஈகோ தொடர்பான பிரதிபலிப்பு என்று வல்லுநர்கள் கருதுகிறார்கள். தனது வாழ்வின் பிற்காலத்தில் செவித்திறனையும் பார்வைத்திறனையும் இழந்த இவர் கடும் பயவுணர்வில் வாழ்வைக் கழித்ததாகச் சொல்லப்படுகிறது. தனது பயத்தின் உணர்வுகளை அவரது அடர்கருமை வகை ஓவியங்களில் பிரதியாக்கம் செய்தார். நமது உணவறைகளில் இந்த ஓவியத்தை வைத்தால் என்ன வகையான மனநிலைக்கு நாம் தள்ளப்படுவோம் என்று சிந்தித்துப் பாருங்கள். உளவியலில் ஒரு கதவு உங்களுக்குள் திறக்கும்.







## இலக்கிய மனநிலை

கவிதை என்பது என்னைப் பொருத்தவரை அதை எழுதும்போது எழுத்தாளரிடம் தோன்றும் மனநிலையே. ஒரு கவிதை எழுதப்பட்டுவிட்டால் அந்த உணர்வு அந்த எழுத்தாளரின் மனதில் உறைந்துவிடும். காட்டாக ஒரு இளைஞன் ஒரு மலரைப் பார்த்து 'நான் பார்த்த பெண்ணைப் போல நீ அழகு' என்று எழுதினால் அது அவருக்கு உலகின் ஆகச்சிறந்த கவிதையே. ஆனால் அதைப் படிக்கும் வாசகருக்கு அது எவ்வளவு பொதுத்தன்மை வாய்ந்தது என்பது உடனடியாகப் புரிந்துவிடும் அல்லவா. போலவே, அந்த இளைஞரின் அறிவுப் படிநிலைக்கேற்ப அந்த உணர்வு காலப்போக்கில் மறைந்துவிடும். அறிவுப் படிநிலை என்பது, ஒரு மனிதரின் காலத்தில் அவ்வப்போது உண்டாகும் அறிவின் வளர்ச்சி ஆகும். தொடர்ந்து வாசிக்கும்போதும், நிறைய பயணம் மேற்கொள்ளும்போதும், நிறைய மனிதர்களிடம் உரையாடும்போதும், சூழல்களைத் தொடர்ந்து கவனிக்கும்போதும் ஒரு மனிதருடைய அறிவு நிலையும் புரிந்துகொள்ளும் திறனும் அதிகரிக்கும் என்பது பொதுவான அடிப்படை. ஒரு பத்து வருடம் கழித்து அதே இளைஞன் தான் பார்த்த பெண்ணுக்கு உவமையாகக் குறைந்தது நூறு விசயங்களைச் சுட்ட வாய்ப்புள்ளது அல்லவா? அதைப்போல, நிறைய எழுதுபவர்கள் அந்த மாதிரியான உறைந்த உணர்வு நிலையைத் தெரிந்துகொள்ள முடியாமல் போய்விட வாய்ப்பும் இருக்கிறது. எனவே கவிஞர்களால் எழுதப்பட்ட கவிதையைப் பிரதி செய்து வாசகர்களிடம் சேர்க்கும்பொழுது கவிதையின் கூறு முற்றிலுமாக மாறிப் போய்விடுகிறது. காதல் பற்றி, உறவுமுறைகள் பற்றி, இடங்கள் பற்றி, தனிமனிதர்கள் பற்றி, வலுவம் (power) பற்றி, அகதிகள், திணைகள், காழ்ப்புகள், கோபங்கள் பற்றி என எண்ணற்ற கருப்பொருட்களில் கவிதைகள் எழுதப்படுகின்றன. ஆனால் பெரும்பாலும்

அவை தான் என்கின்ற தன்நிலையிலிருந்து ஒற்றைப் பார்வையில் வெறும் சொற்றொடர்களாய் முடிந்துவிடுகின்றன. ஒரு சிறந்த கவிதை என்பது இப்படி தனித்து ஒற்றைப் பார்வையில் இல்லாமல் பன்மைத் தன்மை கொண்டதாய் இருந்தால் அதன் காலம் அதிகமாகும். சங்கக் கவிதைகள் இன்று வரை உயிர்ப்புடன் இளமையாக இருக்க இந்தப் பன்மைத் தன்மை ஒரு காரணம். அந்தக் கவிதைகள் உருவாக்குகிற காட்சிகள், படிமங்கள் அனைத்தும் தனித்துவமும் துல்லியமுமாய் இருப்பதால் உண்டாகின்ற அனுபவக் கிளர்ச்சி அது. ஒரு கவிதையில் எடுத்தாளப்படுகிற 'நான்' என்ற சொல்லின் தன்மை அந்தக் கவிதையின் மொத்த அமைப்பையும் சொல்லிவிடும் என்பதே எனது புரிதல். அந்தக் கவிதை வாசிக்கும்போது அந்த 'நான்' கவிஞரைக் குறிக்கிறதா அல்லது வாசகரைக் குறிக்கிறதா என்பதில் அந்தக் கவிதையின் வெற்றி அமைகிறது. ஒரு கவிஞரின் பயணம் தன்னிலை 'நான்'னிலிருந்து வாசகரின் 'நான்' நோக்கி எவ்வளவு செல்கிறதோ அவ்வளவுக்கு அந்தக் கவிதை சிறப்பாகும். மேலும் ஒரு சொல்லின் தேர்வு முறை பற்றிய அறிவும் வேண்டும். தமிழில் இறைச்சி (கறி அல்ல) என்ற அற்புதமான சொல் உண்டு. இறைச்சி என்ற கோட்பாட்டினைத் தொல்காப்பியம் ஆறு இடங்களில் குறிப்பிடுகிறது என்று சொல்கிறார்கள். வடமொழியில் உள்ள `தொனி` கோட்பாட்டுடன் இதனை இணைத்துப் பார்க்கும் போக்கு தமிழறிஞர்களிடம் காணப்படுகிறது என்றும் படித்த ஞாபகம். கூறவந்த பொருள் வெளிப்படாது மறைவாக இருக்க, அதை உணர்த்த, வேறொரு பொருள் வெளிப்படையாக நிற்குமாறு அமைக்கும் இலக்கிய உத்தியே இறைச்சி. மிக நீண்ட விளக்கங்கள் இணையத்தில் கிடைக்கின்றன. எளிமையாக, ஒரு வாக்கியம் நேரடி அர்த்தம் தந்து பிறகு அதன் குறியீட்டு அர்த்தமும் தந்து அதையும் தாண்டி மூன்றாவதாக ஒரு அர்த்தம் உணர்த்துமானால் அதுதான் இறைச்சி. இந்தத் தன்மை ஒரு கவிஞருக்கு வாய்க்கப்பெற்றால் அவரது கவிதை மிகச்சிறந்த பண்பு உடையதாய் இருக்கும். ஒரு கவிதையில் பொதுத்தன்மை, உள்ளுறை, இறைச்சி போன்ற வகையிலான படிமச் சிறப்பு மற்றும் மனிதாபிமானத்தன்மை ஆகியவற்றின் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க கவிதையின் சிறப்பும் பண்பும் அதிகரிக்கும். மேலும் கவிதை குறித்த தீவிரமான புரிதலுக்கு நான் திரும்பத்திரும்பச் சொல்வது; மலையாளக் கவிஞர் சச்சிதானந்தனின் மிகச் சிறப்பான செவ்வியைத் திரும்பத் திரும்பப் படியுங்கள். ஆங்கிலப் பேட்டி இணையத்தில் கிடைக்கிறது. தமிழில் ஸ்ரீசங்கரின் (7871678748) (இந்தத் தகவல் தொடரில் முன்னரே குறிப்பிட்டு இருக்கிறேன்) போயட்ரி இதழில் - ஹவியின் மொழிபெயர்ப்பு – கிடைக்கிறது. இனி தனிமை என்கிற தலைப்பில் நான் எழுதிய ஒரு கவிதையைத் தருகிறேன். இந்தக் கவிதையின் 'நான்' எவ்வளவு தூரம் பயணப்பட்டிருக்கிறது என்பதை வாசக 'நான்கள்' சொல்லுங்கள்.

**தனிமையின் நிலத்தில்**
**எனது நேரத்தின் வேர்கள்**
**உயிர்தாதுக்களைத் துழாவுகிறது.**

**ஒரு ஆதிமனிதனைப்போல**
**எனதெதிரில் இருக்கும்**
**இப்பூமியின் மரத்தைப் பார்க்கிறேன்.**

**நான் இந்த மரத்தைப்போல**
**தனியாய் இருக்கிறேன்**
**இந்த மரத்தைப் போல**
**உயிர்ப்புடன் இருக்கிறேன் நான்.**

**தனிமையை நேரத்துடன் கூட்டும்போது**
**கண்ணீரின் உப்பு அடர்த்தியாகிறது**
**தைமையுடன் நேரத்தை வகுக்கும்போது**
**கண்ணீரின் உப்பு கரிக்க கரிக்க வழிகிறது.**

**தனிமையை நேரத்துடன் பெருக்கும்போது**

**கண்ணீரின் உப்புக் கட்டிகள் காற்றில் மிதக்கிறது**

**தனிமையை நேரத்துடன் கழிக்கும்போது**

**இவ்விசும்பின் மரத்தில் வெம்பிய பழம் ஒன்று**

**சிரிக்கும் ஒலி கேட்கத் துவங்குகிறது வெகுதுல்லியமாக.**

• •

## பொதுவான மனநிலை

பெண்களுக்கு எதிராகத் திருக்குறளில் பல கருத்தாக்கங்கள் இருக்கின்றன என்பதையும் இந்தத் தொடரில் நான் ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறேன். பரத்தையரையும் வீட்டுப் பெண்களையும் மிகக் கவனமாகக் கையாளச் சொல்லி இரண்டு அதிகாரங்கள் இருக்கின்றன. இன்னும் சில பொதுவான ஆண்மையவாதக் கருத்துக்களும் உண்டு. இருந்தாலும் இதுபோன்ற மிகச்சிறந்த நீதிநெறி தொடர்பான இலக்கியம் உலகில் இல்லை என்பதை நான் நம்புகிறேன். ஆகச்சிறந்த உவமைகளும் படிமங்களும் அடங்கிய, அடர்த்தியான, நினைக்க நினைக்க விதந்தோதும் வகையில் குறள் உருவாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக இயற்கை சார்ந்த மிக நுட்பமான பதிவுகள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள் பற்றிய குறிப்புகள் என அனைத்தும் ஆதித் தமிழினம் இயற்கை சார்ந்து மிகச்சிறந்த ஒரு வாழ்வியல் முறையைக் கைகொண்டிருந்தது என்பதை உறுதிசெய்யும் வகையில் பாடப்பட்டிருக்கிறது. மழையை அது போற்றும் விதம் அலாதியானது. உண்பவர்க்கு உணவு செய்யப் பயன்பட்டும் தானே உணவாகவும் இருக்கும் நீரை அளிக்கும் மழையை வள்ளுவம் கொண்டாடித்தீர்க்கிறது. ஆனால் தற்காலத் தமிழினம் சுற்றுச்சூழலினைப் பொருத்து பரிதாபத்துக்குரிய அறியாமையைக் கொண்டிருக்கிறது. இது பல நூற்றாண்டுகாலத் திட்டமிட்ட பெரும் சதி என்றே எனது புரிதல். ஏறக்குறைய பதினாறாம் நூற்றாண்டிலேயே மொத்த அறிவும் தமிழர்களிடம் இருந்து திருடப்பட்டுவிட்டது. மிகக் கவனமாக அறிவுப்பரவல் தடுக்கப்பட்டது. கல்வி என்பது வேலை செய்வதற்கான அறிவு எனச் சுருக்கப்பட்டுவிட்டது.

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்

போற்றி வழங்கு நெறி

- என்ற ஐய்யாயிரம் ஆண்டுகளின் தமிழர்களின் பொருளாதார அறிவு மழுங்கி நுகர்வுக் கலாச்சாரத்திலும் ஜாதி அடையாளச் சிக்கல்களிலும் மூழ்கிப்போனது. உலகில் பொதுவாக நேர்மறை வளர்ச்சிகள் இல்லை என்று சொல்வதற்கில்லை என்றாலும் நிலைமை இன்னும் சராசரியைக் கூட எட்டவில்லை என்பதே எதார்த்தம். சுற்றுச்சூழல் இயக்கத்தின் தாய் என்று அறியப்படும் ரேச்சல் கார்சன் 1960களில் சுற்றுச்சூழல் தொடர்பான மௌன வசந்தம் *(silent spring)* (தமிழில் எதிர் வெளியீட்டில் கிடைக்கிறது) என்கின்ற புகழ்பெற்ற புத்தகத்தை எழுதியபோது உலகின் சூழல் சார்ந்து மனிதக் கண்டுபிடிப்புகள் எவ்வளவு மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்கிற புரிதலை அடையத் தொடங்கினார்கள். மனிதன் தனது முன்னறிந்து கூறும் தன்மையையும் மோசமான விளைவுகளைத் தடுத்து நிறுத்தும் திறமையையும் இழந்துவிட்டான் என்று 1920களிலேயே தத்துவவியலாளர் *Albert Schweitzer* குறிப்பிடுகிறார். மேலும் அவரது புகழ் பெற்ற புத்தகம் ஒன்றின் முதல் வரியை இவ்வாறு தொடங்குகிறார்; *We are living today under the sign of the collapse of civilization.* சுற்றுச்சூழலின் சரியான அறிவை நாம் புரிந்துகொண்டே ஆகவேண்டும். ஏனென்றால் அது நமது பேரக்குழந்தைகளின் உயிர் தொடர்பானது. சம்பந்தமில்லாமல் கீழிருக்கும் குறள் ஒரு சுவாரஸ்யத்திற்காக;

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்

ஏதில் பிணந்தழீஇ அற்று.

எப்போதாவது
ஒரு காதல் கரம்சேர்கிறது
எப்போதாவது
ஒரு கனவு பலிக்கிறது
எப்போதாவது
ஒரு காத்திருப்பு கைகூடுகிறது
எப்போதாவது
ஒரு பிரார்த்தனை ஏற்கப்படுகிறது
எப்போதாவது
ஒரு தர்மம் வெல்கிறது
எப்போதாவது
ஓர் உண்மை புலப்படுகிறது
எப்போதாவது
ஒரு நற்செய்தி வந்துசேர்கிறது
எப்போதாவது
ஓர் அதிசயம் நிகழ்கிறது
எப்போதாவது
ஓர் இருண்மை நீங்குகிறது
எப்போதாவது
ஒரு கதவு திறக்கிறது
எப்போதாவது
ஒரு கவிதை பிறக்கிறது

ஆவதெல்லாம்
எப்போதும் அல்ல
எப்போதாவதுதான்
ஆகுமெனின்
வெறுமனே கழியும்
மீதிப் பொழுதுகளை
இனி நாம் என் செய்வது

வா
எப்போதாவது
பெய்யும்
அன்பின் பெரு மழைக்காய்
ஜன்னல் வழியே
நாம்
வானம் பார்த்து அமர்ந்திருப்போம்

- ரிஸ்கா முக்தார்



ஒரு காகிதப் பறவை
திசை அறிய அவசியம் என்ன?
செல்லக் கூடாத திசை இது
என்றெல்லாம் அதற்கொன்றும் தெரியாது
வீசும் திசையில் வீழ்கிறது
நீ பறக்கிறது என்று மகிழ்கிறாய்.
யாரோ எழுதிய வார்த்தைகள்தான்
அதன் நினைவாம்
எழுதியவன் கொஞ்சம்
கிழித்தும்தான் வைத்திருக்கிறான்
காயங்கள் இங்கு
யாரைத்தான் விட்டு வைத்திருக்கிறது,
பறவையாய் மடித்தவன்
யார் என்பது அறியாமல்
முன் பின் தெரியாமல்
திசைகள் கிழிக்கும் அந்தப் பறவை
அர்த்தங்கள் புரியாமல் அர்த்தம் சுமக்கிறது,
மடித்தவன் விரிகிறான்
இப்போது திசையெங்கும்
அர்த்தங்கள்!

- மு.முகமது ஃபாரூக்

நேற்று
வாரித் தூற்றிவிட்டுப்போன
அதே காற்றுதான்
இன்று
என் தோட்டத்திற்கு
மழையை
அழைத்து
வந்திருக்கிறது

- வீரமணி

பிரிந்து போனதால்
வாடிப் போகிறது
உதிர்ந்த பூக்கள்

- சாண்டில்யன் விவேகானந்தன்



● கோ.லீலா



# இயற்கையின் தூதுவர்கள்

குக்கூ குக்கூன்னு சத்தம் கேட்குதா? ஆமாங்க. மே15 உலக வலசைப் பறவைகள் தினம்.

பழைமையான காடு என்றால் அதிகமான ஓசை இருக்கும்... பறவைகளின் கீச்சொலி கீதம் காடுகளின் அடிநாதம். காட்டின் நலனைப் பறவைகளின் ஓசையை வைத்துத்தான் கணிக்கிறார்கள்.. வண்ண வண்ணச் சிறகுகளுடன் எண்ணம் நிறைக்கும் இசையுடன் விதையைத் தூவிப் பச்சைய பாத்திரம் செய்யுமோர் அட்சயப் பாத்திரம் பறவைகள் பற்றிப் பார்க்கலாம் வாங்க...

வலசை என்பது தமிழர்களுக்குப் புதுச் சொல் அல்ல... புலம்பெயர் புள், வம்பப் புள் என்றெல்லாம் பழந்தமிழ் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. புள் =பறவை. பறவை மட்டுமல்ல பல்வேறு கானுயிர்களும், கடல்வாழ் உயிரினங்களும் புலம்பெயர்கின்றன. பூமியின் காந்த விசையில் ஏற்படும் மாற்றத்தை உணர்ந்து தாங்கள் சேருமிடத்தைக் கண்டறிகின்றன.

ஆமா பறவைகள் ஏன் வலசை போகின்றன... மனிதர்கள் தேன்நிலவுக்குப் போற மாதிரிதான், இனப்பெருக்கம் செய்யத்தக்க சீதோஷ்ண நிலை உள்ள இடத்திற்குப் பறந்து போறாங்க. ஆனால் எல்லோரும் அப்படியில்லைங்க... திரைகடல் ஓடியும் திரவியம் தேடுங்கற மாதிரி ஓரிடத்தில் ஏற்படும் உணவுப் பற்றாக்குறையைச் சரிசெய்துகொள்ள சொய்ங்னு பறந்து நம்ம நாட்டுக்கும், ஆப்பிரிக்காவுக்கும் ஏப்ரல், மே மாதங்களில் வந்திடுவாங்க... ஹனிமூனோ, வேலையோ, வெளிநாடு போகத் தயாராகணும் இல்லையா? எப்படி தயார் ஆகுறாங்க பாருங்க!

இடம்பெயர்வதற்கு முன்பாகத் தனது எடையில் பாதி எடைக்கு ஓர் அடுக்குக் கொழுப்பை உடலில் சேர்த்துக்கிறாங்க. 200 கிராம் எடையுள்ள ஒரு பறவை, உடலில் 100 கிராம் கொழுப்பைச் சேமித்து வச்சிக்கிறாங்க. இதுதான் பறப்பதற்கான எரிசக்தியாம். சில பறவைகள் கறுப்பு நிறத்திலும், ஆழ்ந்த பிக்மென்ட் மற்றும் உயர்வான ஆன்டி

ஆக்சிடன்ட் கொண்ட பழங்களை விரும்பிச் சாப்பிடுவாங்க. இதனால்தான் ஒரே மூச்சில் பல ஆயிரம் கி.மீ., பறக்கும் மூக்கானால், எட்டரை நாட்கள் பட்டினியாக இருக்க முடிகிறது.

எப்படி அணிவகுத்துப் பறக்கணும்னு கூட ஒத்திகை பார்த்துப்பாங்க.. V வடிவத்தில் அணிவகுத்துப் பறப்பாங்களாம். முதலில் யாரு தலைவர்னு முடிவு செய்யணும்ல... அப்படி ஒரே ஒரு தலைவரெல்லாம் கிடையாது... எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்னு ஷிப்ட் போட்டு அணியைத் தலைமை தாங்கிப் பறப்பாங்க. தலைமை தாங்குறவங்க சிறகசைக்க, காற்றின் வேகத்திற்கு V வடிவத்தில் பறப்பதால், பின்னால் வரும் பறவைகளுக்குக் கொஞ்சம் சிறகசைக்கும் வேலை மிச்சமாம்.

பறவைகள், முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் நிலமே அதன் தாய் நிலம் என்கிறார்கள் பறவையியலாளர்கள்.

பெண் பறவையைக் கவர தூக்கணாங்குருவி அழகாகக் கூடு கட்டணும்... பனங்காடை அந்தரத்தில் அதிகமுறை குட்டிக்கரணம் போடணும்... பென்குயினில் ஆண்தான் அடைகாக்கும். இருவாச்சியில், பெண்ணுக்கும், குஞ்சுக்கும் உணவு கொடுத்து இறக்கை முளைக்கும் வரை பார்த்துக்கணும்.. இப்படி சொல்லிக்கிட்டே போகலாம்.

கடல் தாண்டும் பறவைக்கெல்லாம்

இளைப்பாற மரமே இல்லை

கலங்காமலே கண்டம் தாண்டுமே

பாடலாசிரியர் : நா. முத்துக்குமார்

படம்: சத்தம் போடாதே!

இந்த வரிகள் என்னைக் கவர்ந்தன, விடுவோமா! உண்மையான்னு ஆராய்வோம்ல...

ஆச்சரிய செய்திகள் கிடைத்தன. படிங்க, அசந்து போவீங்க...

நமது கட்டை விரல் பருமனில் உள்ள டகங்காரப் பறவை முதல் குதிரை அளவு கொண்ட நெருப்புக் கோழி வரை இந்தியாவில் 1,263 பறவை இனங்களும், அதில் தமிழகத்தில் 520 இனங்களும் உள்ளன. இதில் 160 இனங்கள் வலசை செல்லக்கூடியவை. வாலாட்டுக்குருவி, ஒவ்வொரு ஆண்டும் ரஷ்யா சென்று வருமாம்.

வரித்தலை வாத்து மங்கோலியாவில் இருந்து 21ஆயிரத்து 120 அடி உயரமுடைய இமயமலையைக் கடந்து 8,000 கி.மீ., தொலைவை இரண்டு மாத காலத்தில் பறந்து கூந்தங்குளத்தை வந்தடைகிறதாம்.

மிகவும் நீண்ட தூரம் பறக்கும் வலசைப் பறவை 'ஆர்ட்டிக்டேன்'. வடதுருவ ஆர்டிக்கில் இருந்து ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கா கண்டங்களின் வழியே தென்துருவ அண்டார்டிக்கின் பனிப்பரப்புக்குக் குளிர்காலத்தில் இவை போகின்றன.

ஒரு அடி நீளமுள்ள இப்பறவை, வாழ்நாளின் பெரும்பகுதியைப் பறப்பதிலேயே செலவிடுகிறது. இது ஒருமுறை வலசை சென்று திரும்பி வர 70ஆயிரத்து 900 கி.மீ., பயணிக்கிறது.

தமிழில் 'மூக்கான்' என நாம் அடையாளப்படுத்தும் காட்விட் பறவைக்கு, உலகிலேயே அதிக தூரம் ஒரே மூச்சில் நிற்காமல் பயணிக்கும் பறவைகளின் பட்டியலில் முக்கிய இடமுண்டு. நியூசிலாந்தின் வடக்குத் தீவில் உள்ள மிராண்டாவில் இருந்து 2007 மார்ச்சில் புறப்பட்ட பெண் பட்டை வால் மூக்கான் பறவை உடலில், சிறிய ரேடியோ மின் அலைபரப்பி பொருத்தப்பட்டது. இதன் பயணம் செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்கப்பட்டது.

இப்பறவை இரைக்காகவோ, தண்ணீருக்காகவோ எங்கும் தரையிறங்காமல் எட்டு நாட்கள் பறந்து 10 ஆயிரத்து 200 கி.மீ. இல் உள்ள 'யாலு ஜியாங்' என்ற இடத்தை அடைந்தது. பின், ஐந்து வார ஓய்வுக்குப் பின் அங்கிருந்து கிளம்பி ஐந்து நாட்களில் 7,400 கி.மீ., பறந்து அலாஸ்காவின் யூகான்-குஷாக்வின் முகத்துவாரப் பிரதேசத்தை எட்டியது. நான்கு மாதங்களுக்குப் பின் மீண்டும் ஆகஸ்ட் 30இல் புறப்பட்டு வேறு பாதையில் 11 ஆயிரத்து 600 கி.மீ., ஒரே மூச்சில் பறந்து எட்டரை நாட்களில், கிளம்பிய இடமான மிராண்டா பகுதியை

அடைந்தது.

இந்தச் சிறு பறவை ஏறத்தாழ ஆறு மாதங்களில் 29 ஆயிரத்து 200 கி.மீ., பயணம் செய்தது. மூக்கான்களை ராமநாதபுரம் மாவட்டம் கோடியக்கரையில் நவம்பர் முதல் பிப்ரவரி வரை பார்க்கலாம். மூக்கானின் வேகம் மணிக்கு 58 கி.மீ., வலசை பறவைகளில் பெரும்பாலானவை இரவில் பறப்பவை.

ஆத்தி! பறவை எங்கே நம்ம எங்கே... நான் பார்த்து இன்றும் பிரமிக்கும் பறவை இருவாட்சி.. என்ன சவுண்ட், என்ன சைஸ்...

அதுசரி, வேள்பாரியில் காக்காவிரிச்சின்னு சொல்றாங்களே அது உண்மையான்னு பார்த்தால், அது பேரு காக்காய்வெருட்சியாம். இங்கிலீசுல Greater false vampire bat ன்னு சொல்றாங்க. காக்காவை வெருண்டு ஓடச்செய்யும் வவ்வால் இனம். சும்மா 10 செ.மீ நீளமும், 60 கிராம் எடையும் கொண்ட இவங்க அசைவக்காரவங்க.

அது சரி, இப்படி நீட்டி முழக்கிப் பறவையைப் பற்றி ஏன் பேசணும்ங்கிறீங்க... பறவை இல்லேன்னா, பிரபஞ்சம் இல்லைங்க... அட காடு வேணும், மழை வேணும்... எத்தனை வேணும் அத்தனைக்கும் பறவை வேணும்... பறவைக்குச் சோறு வைக்கிறேன், தண்ணி வைக்கிறேன்னு கிளம்புற மக்கா! ஒரு செடி வைங்க, மரமாகட்டும், அவங்களுக்குப் பிடிச்சத அவங்களே தேடிச் சாப்பிடுவாங்கல்ல... அப்படியே நீர்நிலையெல்லாம் பாதுகாப்பா பார்த்துக்கங்க, வெளிநாட்டுப் பறவைகள் நம்ம நாட்டுக்கு விரும்பி வரணும்ல.

மனிதர்களை விடவும் மகத்தானவைகள் பறவைகள். இந்த வருட மய்யக் கருத்து என்ன? “Impact of Light Pollution on Migratory Birds.” இரவு வலசை செல்லும் பறவைகளைத் தொந்தரவு செய்யும் ஒளி மாசுவின் இருண்ட பக்கத்தை ஒளிரச் செய்வதே இந்த வருடத்தின் முக்கிய மய்யக் கருத்தாகும்.

குறிப்பாகப் பனிக்காலம் மழைக்காலம், மேகம் தாழ இருக்கும் காலங்களில், செயற்கை வெளிச்சத்தைக் கண்டு வழிதவறி அங்கேயே வட்டமிட்டு, தனது சக்தியை இழந்து, வலசை போவது தடைபடுவதோடு, பல லட்சப் பறவைகள் கட்டிடங்களில் மோதி விழுந்து உயிரிழந்ததாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

‘Dim the Lights for Birds at Night’, என்பதை ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டும். ஏன்? நாடுகளை, மனிதர்களை, சுற்றுச்சூழலை இணைக்கும் இயற்கையின் இணையற்ற தூதர்கள்தான் பறவைகள்.

சுற்றுச்சூழலின் நலனைச் சுட்டும் பேராசான்கள் பறவைகள். எவ்வளவோ தொழில்நுட்பங்கள் வந்தபின்னும் வானிலை அறிக்கையினைச் சொல்வதில் பறவைகள் சிறந்த வல்லுநர்கள் என வானிலையியல் வல்லுநர்களே அறிவிக்கிறார்கள்.

பறவைகள் முட்டையிடும் இடத்தையும், இடம் பெயரும் காலம், இடம், கூவும் நேரம் ஆகியவற்றையும் கொண்டு சுற்றுச்சூழலின் நலன் மற்றும் காலநிலை மாற்றங்களை அறிய முடியும். எடுத்துக்காட்டாக ஆள்காட்டிப் பறவை முட்டையிடும் இடத்தை வைத்து மழையைக் கணிக்கலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள், எப்படியெனப் பார்ப்போம் வாருங்கள்.

ஆள்காட்டிப் பறவைகள் முட்டைகளை உயரமான இடத்தில் இட்டால் பெரும் மழை வருமென்றும், முட்டை கீழ்நோக்கி இருந்தால் பெருவெள்ளம் வருமென்றும், சமதளத்தில் இட்டால் சராசரியான மழை வருமென்றும், பூமியில் பள்ளமிட்டு முட்டையிட்டால் வறட்சி ஏற்படும் என்றும் மூத்தோர்கள் கண்டுணர்ந்த அனுபவ உண்மையை இந்த ஒரு எடுத்துக்காட்டே சொல்கிறது அல்லவா.

பச்சைய பாத்திரம் என்றும் செழிக்க மழை வேண்டும், மழையெனும் அமிழ்து நல்கும் மரங்களை வளர்க்க விதைகளை விதைக்கும் பறவைகளைத் தொழுவோம்.

பாடுவோம், பறப்போம், உயர்வோம் பறவைகளாகப் பறவைகளோடு!

பறவைகளின் கீதம் காடுகளின் நாதம்.

- பச்சையம் மணக்கும்... ■

நூல் அறிமுகம்

விஜயராணி மீனாட்சி

# தேவைக்குத்தான் பசியாற்றமுடியும்.. பேராசைக்கல்ல

**நூல் : யாத்திரை (நாவல்)**




ஒரு எழுத்தாளன் எதற்காக எழுதுகிறான் என்பதில் அவனது எழுத்துக்கான வெற்றி தொடங்குகிறது. இங்கே நாவலாசிரியர் தோழர் ஜோ டி குரூஸ் அவர்கள் தன்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை என்று தன் உணர்வைப் பகிர்வதிலேயே சமூகத்திற்கான தேடலும், விசனமும், ஆத்மவிசாரமும், தீர்வும் நோக்கிப் பயணிக்கிறது அவரது எழுத்து யாத்திரை.

“நடந்தே தீரவேண்டும் பாதை, வாழ்ந்தே தீரவேண்டும் வாழ்க்கை” என்ற சுந்தர ராமசாமியின் வரிகளை நினைவூட்டின.. எழுதாமல் இருக்கமுடியவில்லை என்று சொன்ன இவரது வரிகள்.

நாவலில் வருகிற சிறுவனும் ஆசிரியரும் வேறுவேறல்லாத ஒரு நிகழ் மயக்கத்தைத் தோற்றுவித்தபடியே கேள்விகளோடே வளர்ந்து தாம் வாழும் சமூக இன மக்களின் மத, பண்பாட்டு, அரசியல், வாழ்வியல் பரிணாம மாற்றங்களை உணர்த்தியபடியே நம்மைக் கதைக்குள் அல்ல அல்ல... அந்நிலத்தில் பயணிக்க வைத்துவிடுகின்றனர்.

ஒரு மதம் எவ்வாறு எளிய இன மக்களுக்குள் வேரூன்றித் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது என்பதையும்

சொல்கிறார். கேள்விகளால் சூழப்பட்ட சிறுவனுக்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதேனும் ஒரு வழியிலாவது பதில் கிடைக்கும் பேறு பெறுவதே கொடுப்பினையாக்கப்பட்டிருக்கிறது கூடவே நமக்கும்.

"யாத்திரை" என்று தொழில் மயமாகவும், வாழ்வியல் அங்கமாகவும், ஆன்மீகமாகவும் கையாளப்படும் சொல்லாடலைத் தலைப்பாகப் பயன்படுத்தியதே பெரும் நுட்பம்.

புத்தனுக்குப் போதிமரம் போலச் சிறுவனுக்கு வேப்பமரம் பல்வேறு விஷயங்களை, பரம்பரையை, வர்க்கத்தின் சாளரத்தினைத் திறந்து காட்டுகிறது.

மடக்கலப்பிள்ளை தாத்தா சொன்ன கதைவழி கூத்தன்துறையும் நாச்சியார் ஆத்தா பற்றிய முன்னோர் வழிபாட்டுக்கூறுகள் மறக்கடிக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட வரலாறும் மெல்லத் தெரியத் தொடங்குகின்றன.

அதேபோலத்தான் அந்த வேப்பமரத்தடிச் சாமியார் மூலமாகவும், ரத்தமும் சதையும் உண்மையாய் உலவிய குமரியும் நாச்சியாரும் சந்தனமாரியும் பற்றித் தெரிந்துகொள்ள முடிகிறது.

அதே சிறுவன் இளைஞனான பின்பான முதுகலைக் கல்வி ஆய்வுக்களம் வழமைபோல் கேள்விகளையும் கவலைகளையும் ஒருசேரத் தருகிறது. அதிரவைக்கும் ஆய்வுக்களத்தில் அவன் அறிவது, கடல் அதிக ஊரில் விதவைகள் அதிகம் இருப்பதும், விதவிதமான மரணங்கள் நிகழ்வதும், காணாமல் போனவர்கள் பற்றிய எந்தக் கவலையுமற்ற அரசாங்கங்களுமாகத் தொடர்வதும்தான்.

காலந்தோறும் மடாலயங்களும் தேவாலயங்களும் புனிதத்துக்குள் இருப்பதாக நம்பவைத்துக்கொண்டே ஒழுக்கக்கேடான செயல்களைச் செய்வது இங்கே சுட்டிக் காட்டப்பட்டாலும் நல்ல மதகுருமார்களை நாம் மறப்பதோ மறுப்பதோ இல்லை.

இளம்பிராயத்துச் சொந்த ஊர் ஆலய பாசாங்கற்ற இளம்பாதிரியாரால் இந்த இனத்தின் வாழ்வு பதிவு செய்யப்படவேண்டுமென்று தூண்டப்படுகிறான்(ர்).

அதேபோல் தவறுதலாக வழிநடத்தப்பட்ட இளைஞன் ஒருவனும் இந்த மக்களின் வாழ்க்கையை எழுதக் கேட்டுக்கொள்கிறான்.



இறுதியாக வடகடலும் பேசுகிறது வருத்தத்தோடு. உயிர்நாடியைத் தக்கவைத்துக்கொள்ள பேராசை பிடித்த ஆட்சியாளர்களைச் சாடுகிறது. மீன்பிடிப்புக்குச் சம்பந்தமே இல்லாத இழுவை மடித் தொழில்நுட்பத்தால் பவளப்பாறைகளின் அழிவும் மீன்கள் இனப்பெருக்கம் செய்யமுடியாமையும் ஆகத் தொடர் இழப்பைச் சொல்கிறது. தேவைக்குத்தான் பசியாற்றமுடியும்.. பேராசைக்கல்ல என்று கடலையே சொல்லவைக்க புலம்பவைக்க மனிதனால்தான் முடியும்.

எப்போதும் வேலை சமூகம் எழுத்து என்று இருக்கிறாயே! குடும்பம் என்று ஒன்று நினைவிருக்கிறதா? என்கிற மனைவியின் கேள்வியைக் கடக்காத எழுத்தாளனே அநேகமாக இருக்கமுடியாது. ஆனாலும் அவர்களுக்குக் கணவனும் குழந்தைகளுமே உலகம். இவருக்கும் இது நேர்ந்தபோதிலும் பிள்ளைகள் சரியான புரிதலோடு இருப்பது இளைய சமுதாயத்தின் மீதான நம்பிக்கையை விதைக்கிறது.

ஆக மாறிவரும் இந்த உலகம் இன்றிருக்கும் இப்படியான உலகம் ஒரே நாளில் உருவானதில்லை. படிப்படியாக பலரது பங்களிப்பில் உருவாகி முன்னேறி இருக்கிறது என்ற நம்பிக்கையை அளிக்கிறது இந்த "யாத்திரை."

வெளியீடு : காலச்சுவடு

விலை : ரூ.175/-

தொடர் - 31

● கரிகாலன்

# தேநீர் சாலை




அட்ராசிட்டி பார்ட்டியான க.கா இளந்திரையன் தேநீர்க்கடையில் டீ குடித்துத் திரும்பிக்கொண்டிருந்தான்.

அண்ணா சாலையில் ஒரு டாடா ஏசிஇ வண்டி. அதில் பதிவு செய்யப்பட்ட குரல் கூவிக்கொண்டிருந்தது.

'இங்கு, பழைய ஃபிரிஜ், பழைய டிவி, பழைய மிக்ஸி, பழைய கிரைண்டர், பழைய பட்டுப் புடவைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்!` என்பதே அக்கூவல்.

க.கா வண்டியை நிறுத்தினான். பழைய பொருட்களை விலை கொடுத்து வாங்கும் அந்த வியாபாரியைப் பார்த்தான். அவருக்குக் கடவுளின் சாயல்.

அவரது கையைப் பிடித்துக் கண்ணீர் மல்கினான். பதறிப்போனவர் என்ன வச்சிருக்கீங்க? என்றார்.

'என்னிடம் மட்டுமில்லை, இங்கு எல்லோரிடமும் ஒரு பழைய மனம், ஒரு துருப்பிடித்த இதயம், மதுவைச் சுத்திகரித்துத் தேய்ந்துபோன ஒரு கிட்டினி இருக்கிறது! வாங்கிக் கொள்வீர்களா?' என்றான் க.கா!

'என்ன சார் சொல்ல. இன்று நான் கண்விழித்த முகம் சரியில்லை!' என வண்டியைக் கிளப்பினார் அவ்வியாபாரி!

•

## தேவதைகளைச் சந்திக்கும் வழி!

~

**ஒரு குவளை வொய்ன்.**

**ஒரு ரொட்டித் துண்டு.**

**ஒரு காடு.**

**பாட்டுப்பாடத் தெரிந்த ஒரு காதலி.**

காட்டைச் சொர்க்கமாக்கும் மனநிலையில் உமர்கயாம் போலவோ, பாரதி போலவோ வாழ விரும்புகிறோம்.

ஆனால், நம்மை இந்தி, சமஸ்கிருதம் என்று ஏதாவது ஒரு தெருநாய் வம்புக்கு இழுத்துவிடுகிறது.

காதலிப்பதைப் பாதியில் விட்டு வந்து, நடுத்தெருவில் குரைக்கத் தொடங்குகிறோம்

**'துன்புறுத்தப்பட்ட நகரங்களில்**

**எந்த மொழியில் மழை பெய்யும்?'**

கேட்பார் பாப்லோ நெருடா.

**நம் மொழி மழை.**

**நம் மொழி வெய்யில்.**

**நம் மொழி பனி.**

**நம் மொழி காமம்.**

**நம் மொழி காதல்.**

ஒரு முட்டுச் சந்தில் நின்று, சஞ்சய் நிஷாத்தைக் குரைத்துக்கொண்டிருந்த என்னை, *'be cool'* எனத் தோளில் கைபோட்டு, 'தேவதைகளைச் சந்திக்கும் வழி' யைக் காட்டினார் நண்பர் சுதீர் செந்தில்.

தேவதைகளைச் சந்திக்கும் வழியில் செல்ல யார்தான் தயங்குவார்கள்? சிரித்தேன். அதற்கு நீ முதலில் சாத்தானாக வேண்டும்! நிபந்தனை விதிக்கிறார் சுதீர்.

போப் கத்தோலிக்கராக இருப்பதுபோல, வாடைக்காற்று வடக்கிலிருந்து வீசுவதுபோல, கரிகாலன் சாத்தானாக இருப்பதுதானே நியதி!

சுதீர் காட்டும் வழியில் நடக்கிறேன்.

'சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள் உயிர்தவச் சிறிது, காமமோ பெரிதே!' எனப் பாடிய என் பாட்டன் கபிலன் நடந்த வழியது.

**'பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி**

**வாலெயிறு ஊறிய நீர்'**

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே ஜொள்ளுவிட்ட என் பூட்டன் வள்ளுவன் சென்ற வழியது.

காதல் மிகச் சிறியது. அதை மறப்பதுதான் நீளமானது! எனக் கூறிய நம் சிலி உறவு பாப்லோ நெருடா பயணித்த வழியது.

அவர் சொன்னதுபோலவே, காதலித்து விடைபெறுவதுதான் நம் பெரும்பாலோரின் விதியாக இருக்கிறது.

செந்திலை நீங்கள் நேரில் பார்க்கும்போது அவர் வேறு யாரோ போல் இருப்பார். அவரைத் தேவதைகளைச் சந்திக்கும் வழியில் பார்க்க வேண்டும்.

வள்ளுவன்போல், நெருடாபோல், கபிலனைப்போல், ஔவையைப்போல் இருப்பார்.

**அதிகாலைச் சூரியனாய்**

**அப்படி ஒளிர்ந்து கொண்டிருந்தது**

**அவள் முகம்**

•

**பாடையில் என்னை**

**சுமந்துகொண்டிருந்தார்கள்**

**ஆயிரத்தெட்டுப் பெண்கள்**

•

**எத்தனை தைரியம் வேண்டும்**

**அன்பைக் காதலாக மாற்ற**

•

**நீயெனக்கு எட்டாமல் இருந்தால்**

**அவஸ்தை**

**கைக்கெட்டும் தூரத்தில் இருந்தாலோ**
**பேரவஸ்தை**

•

**வாழ்வுதான் காதலென்றால்**

**நீ காலமல்லவா..**

•

**நீ நீதான்**

**நானும் நீதான்**

**நடனம் துவங்கிவிட்டது**

**உனது கால்களால் ஆடுகிறேன்**

•

அமித்ஷா மொழியிலோ, சஞ்சய் நிஷாத் மொழியிலோ அல்ல, நெருடா மொழியைப் பேச விரும்புகிறேன்.

**பசுமை என்பது அமைதி.**

**ஈரம் என்பது ஒளி.**

சுதீர்.. நீ இந்த மாதத்தை ஒரு பட்டாம்பூச்சியாய் நடுங்க வைக்கிறாய்! ■

# டால்ஸ்டாயைக் கண்டறிந்தேன்

**தரணி லெட்சுமணன்,**
முதலாமாண்டு முதுநிலை கல்வெட்டியல் பட்டயப் படிப்பு (PGDE),
தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்,
எழும்பூர், சென்னை.




“கதைசொல்லி” எஸ்.ரா. கதை சொல்வது போலவே அவரது `மண்டியிடுங்கள் தந்தையே!` நாவலும் அமைந்துள்ளது.

டால்ஸ்டாயை இன்னும் ஆழமாக இந்நாவலின்வழி தெரிந்துகொண்டேன். “சோபியா”தான் டால்ஸ்டாயின் மனைவி என்று தெரியும். “சிவப்பு அங்கி அக்ஸின்யா” எங்கிருந்து வந்தாள் என்ற கேள்வியுடன் நாவலை வாசிக்கத் தொடங்கினேன்.

நாவலின் வழியாக ரஷ்யாவில் பயணித்தேன். டால்ஸ்டாயின் வாழ்க்கை நிகழ்வுகளை அடுத்தடுத்துச் சொல்லாமல், தேவைப்படும் இடங்களில் தேவைப்படும் நிகழ்வுகளைப் பொருத்தி எழுத்தாளர் கதையை நகர்த்தியுள்ளது நாவலின் “சுவாரசியம்” எனலாம்.

“இந்திய நூல்களை” நான் வாசித்துக்கொண்டிருக்கிறேன் என்று நாவலின் ஊடே டால்ஸ்டாய் கூறிய அக்கணம், “இருளில் நடந்துகொண்டே ரஷ்யப் பனிக்காற்றை ரசித்துக்கொண்டிருக்கையில், சிறு வெளிச்சம் தென்பட்டது போல இருந்தது.”


யஸ்னாபோல்யானா பண்ணை, அதைச் சுற்றிய பகுதிகள்- பண்ணையாட்கள், பண்ணைக் குழந்தைகளுக்காக டால்ஸ்டாய் கல்வி அறிவு கொடுத்தது, பண்ணை மக்களுக்காக உதவிய தருணங்கள், அவர்களுடன் ஒயின் சாப்பிட்டு மகிழ்ந்த இரவுகள், அம்மக்களைப் பண்ணை அடிமைகளாக நடத்தாமல் சக மனிதர்களாக எண்ணியது, அவர்கள் செய்யும் பணிகளுக்குச் சரியான “ரூபிள்கள்” வழங்குவது போன்றவற்றை வாசிக்கும்போது, டால்ஸ்டாய் மீது மிகுந்த மரியாதை ஏற்பட்டது.

மாஸ்கோவும் அங்குள்ள மனிதர்களும் நடந்துகொண்ட விதம் எண்ணி, நகர வாழ்க்கையைக் காட்டிலும், பண்ணை வாழ்க்கையின் சுகங்களை அனுபவித்த, அது தரும் பொழிவினை நேசிக்கவும் இயற்கையைச் சுவாசிக்கவும் கூடிய, டால்ஸ்டாய் வெளிப்படுவதைக் காண முடிந்தது.

நம் ஊரில் குறிசொல்லும் பெண்ணைப் போல ரஷ்யாவிலும் “ஜிப்ஸிகள்” கூட்டத்தில் குறி சொல்லும் பெண்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வதும் அப்படியே நடந்திருப்பது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

தவறு செய்ததை விட, தவறு செய்த குற்றவுணர்ச்சியில் டால்ஸ்டாய் தன்னைத் தானே வருத்திக்கொள்ளுதல்... எல்லோரும் நல்லவர்களாக இருந்திருந்தால் கடவுளுக்கு வேலையில்லாமல் ஆகியிருக்கும். அதனால் டால்ஸ்டாய் செய்த “தவறை” முற்றிலுமாகச் சரி என்றல்லாமல், ஒருமனதாக ஏற்றுக்கொள்வேன்.

இராணுவ வீரருக்கான நடை, உடை, பாவனை அனைத்தும் டால்ஸ்டாய்க்குக் கச்சிதமாகப் பொருந்தியுள்ளது. சோபியா என்னதான் கண்டிப்புடன் நடந்துகொண்டாலும் அது தன்கணவர் மீதான அதீத காதலின் வெளிப்பாடாகவே இருந்தது. அவளது சந்தேகம், பண்ணையாட்கள் மீது கோபத்தை வெளிப்படுத்துதல், குடும்ப நிர்வாகம், தன் கணவரின் எழுத்துப் பணிகளுக்கு உதவுவது என சோபியாவின் பங்களிப்பு அளப்பரியது.




டால்ஸ்டாய் - சோபியா டயரி பரிமாற்றம் பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். ஆண்கள் தன் வாழ்வில் நடந்த அனைத்தையும் குறிப்பிட்டு எழுதுவது பிற்காலத்தில் கற்பு வாழ்க்கையில் பிரச்சனை ஆகலாம். அதேதான் டால்ஸ்டாய்க்கும் நிகழ்ந்திருக்கிறது.

அக்ஸின்யா பாத்திரம் வியப்பாகவே இருந்தது. இவள் இடத்தில் வேறு ஒரு பெண் இருந்திருந்தால் டால்ஸ்டாயை உண்டு, இல்லை என ஆக்கியிருப்பாள். ஆனால் அக்ஸின்யா அதற்கு நேர்மாறாக இருந்திருக்கிறாள். அதுவே டால்ஸ்டாய்க்கு அவள் மீதான கூடுதல் கருணையாக அமைந்தது. கடவுளால் கைவிடப்பட்டவள் வாழ்நாள் முழுவதையும் தன் மகனுக்காக அர்ப்பணித்துக்கொள்கிறாள்.

திமோஃபி - பாத்திரத்தை நான் சொல்ல மாட்டேன், நாவலைப் படித்து நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். திமோஃபி - ஓல்காவின் காதல் - கரடு முரடான பாதையில் சென்றுகொண்டிருக்கையில், ஒருங்கமைந்த பாதை தென்பட்டால் எப்படி இருக்குமோ அதேபோல்தான், திமோஃபிக்கு ஓல்கா தென்பட்டாள். அவளுடனும் கடைசிவரை வாழ முடியாதது திமோஃபியின் துர்ப்பாக்கியம் போலும்.

முட்டாள் டிமிட்ரி எதையோ கற்றுக்கொடுத்துவிட்டு இறந்ததாக நான் உணர்ந்த தருணம் - யாரோ எனக்கு “முட்டாளாய் நடி” என்று கூறியது நினைவுக்கு வந்தது. முட்டாளுக்குள்ளே எத்துணை அறிவார்ந்த விஷயங்கள்.

லூகா தன்னைத் தானே மாய்த்துக்கொண்ட விதம் - லூகாவைப் படிக்கும்போது, கருணைக் கொலை செய்யப்படுபவர்கள் மனதில் தென்பட்டார்கள். ஒரு குழந்தைக்கு இவ்வுலகில் இனி வாழ முடியாத சூழ்நிலை ஏற்படும்போது, பெற்ற தாய் தன்னுயிரை வெறுத்துக் கருணைக் கொலைக்கு அழைத்துச் செல்லுகையில், அங்கே அக்குழந்தை தாமாக முன்வந்து உயிரை மாய்த்துக்கொள்வது போல, லூகாவும் தாமாக முன்வந்து தன்னை மாய்த்துக்கொண்டது.

டால்ஸ்டாய் கால ரஷ்ய அரசியல் - இன்றுள்ள “ரஷ்ய ஆதிக்க ஆட்சியை” பிரதிபலிப்பதாகவே இருந்தது. தன்னலம் கருதாது ஆதிக்க ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுத்த டால்ஸ்டாய்க்கு, முடிந்தால் இந்திய இராணுவ வீரர் ஒருவரிடம் அனுமதி வாங்கி அவர் பாணியில் சல்யூட் அடிக்கச் செய்வேன்.

“மண்டியிட்டாரா தந்தை” என்பதே நாவலின் முடிவாக அமைந்தது. எத்தனையோ பாத்திரங்கள், எத்தனையோ சம்பவங்கள் என்னை உறங்கவிடாமல் செய்தன. இன்னும் நாவல் தொடர்ந்திருக்கலாம் என்றே தோன்றத்தொடங்கியது. ■

ஹமீது தம்பி
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்



# அந்நிய மண்ணில்

**கா**லையில் கீழ்வானம் வெளுக்க ஆரம்பிக்கும் முன்பே, கரையை அடைந்துவிட்டது.

“தம்பிகளா எழுந்திருங்க” என்று எழுப்பிவிட்டார் கார்சா. இருவரும் பதறியபடி எழ முயன்றனர். “ஒன்னும் அவசரமில்லை.. மெதுவா எழும்புங்க” என்றார். வல்லம் கரைக்குச் சிறிது தூரத்தில் நின்றிருந்தது. முதலில் ஹனீபா நீரில் இறங்கினான். அவன் நெஞ்சுவரை ஆழம் இருந்தது. தொடர்ந்து பாண்டியனும் பாரியும் இறங்கினார்கள். ஏற்கனவே ஹனீபா கரையை நோக்கி நீந்திக்கொண்டிருந்தான். நீந்தவேண்டிய தேவை இல்லாமல்தான் இருந்தது. நடந்தே போகலாம்தான். இருந்தாலும் எல்லோரும் நீந்தியே கரை சேர்ந்தார்கள்.

கடைசியாக நெய்னாம்சா நீந்திக் கரைக்கு வந்தார். எல்லோரும் சொட்டச்சொட்ட நனைந்திருந்தார்கள்.

அருகிலிருந்த தோப்பிற்கு அழைத்துச் சென்றார் கார்சா. பனைமரங்கள் அதிகம் இருந்த அந்தத் தோப்பின் மூலையில் ஒரு குடிசை இருந்தது. அதை நோக்கிக் கார்சா முன்னால் செல்ல, மற்ற மூவரும் பின்தொடர்ந்து வந்தனர்.

அப்போது குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்தார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர். “நைனாம்ஷாக்கா.. என்ன தகவல் இல்லாம வந்திருக்கிய..” என்றபடி நைனாம்ஷாவைக் கட்டித் தழுவி வரவேற்றார்.

“கடிதாசு போட்டுட்டுவர்ற காரியமில்ல, நம்ம புள்ளங்க ரெண்டுபேர கூட்டிக்கிட்டு வரவேண்டி இருந்துச்சு. எல்லாம் திடீர் முடிவுதே. எப்பவும்போல ஒண்ட தயவு வேணும் சாமுனா,” என்றார்.

“அதுக்கென்ன என்னால் முடிஞ்சத செய்றன். உங்க பேச்ச எப்ப தட்டுனே?” என்றான் சாமுனா.

குடிசைக்குள் வந்தார்கள். உள்ளே குடிசை என்று சொல்லமுடியாத அளவுக்கு வசதிகள் இருந்தன. மெத்தை விரித்த இரண்டு பெரிய கட்டில்கள் இருந்தன. தனி அறைகளாகத் தடுக்கப்பட்டு இரண்டு மூன்று அறைகள் இருந்தன. மேஜை ஒன்றின் மேல் பிலிப்ஸ் பெரிய சயிஸ் ரேடியோ சிங்களத்தில் செய்தி சொல்லிக்கொண்டிருந்தது. அப்போதுதான் பாரிக்குத் தான் ஒரு வெளிநாட்டில் இருக்கிறோம் என்ற உணர்வு வந்தது. சாமுனாவின் மனைவி ஒரு அறையிலிருந்து வந்தாள். பிள்ளைகள் இருப்பதாகத் தெரியவில்லை.

அடுப்பாங்கரையைக் “குசுனி” என்றார்கள். குசுனிக்குள் சாமுனா மனைவி எல்லோருக்கும் சாயா போட்டுக் கொண்டுவந்தாள். நைனாம்ஷா இருவரையும், சாமுனாவுக்கு அறிமுகப்படுத்தினார். பாண்டியனைப் பார்த்ததும், “தம்பிய தெரியுமே.. முன்னே ஒருதரம் பாத்திக்கிறேன். எரிக்களம்பட்டி அம்பலார வீட்டுக்குத்தானே” என்றார் சாமுனா. ஆம் என்று தலையாட்டினான் பாண்டியன்.

அதுவரை வாயே திறக்காத பாண்டியன் அவர் கையைப் பற்றிக்கொண்டு "என்னய மன்னார் பஸ்சுல ஏத்தி உட்டுருங்க.. நா போயிருவே," என்றான்.

"இந்தத் தம்பி எங்க போவனும்?" என்றான் சாமுனா.

நைனாம்ஷா, "தம்பி நமக்கு வேண்டப்பட்ட குடும்பம். கொழும்புக்குப் போவனும். பத்திரமா மன்னார்ல ரயில் ஏத்தி உட்டுடு. தம்பி புதுசு. ரொம்ப ஜாக்கிரதையா அனுப்பு," என்றார்.

"கொழும்புல யார பாக்கணும். நமக்குத் தெரியாத நம்ம ஆட்கள் யார் இரிக்கா?" என்று கேட்டான்.

"நம்ம வேண்டப்பட்ட குடும்பத்துப் புள்ள. வாப்பா சமீபத்துல மவுத்தாகிட்டாக. அதுதான் தெரிஞ்சவுக கடையில வேலைதேடிப் போறாரு," என்றான் நைனாம்ஷா.

"நா ஒன்னு சொல்றேன். எனக்குத் தெரிஞ்ச ஹாஜியார் சீனங்கோட்டைல இரிக்கிராரு. கொழும்புல ஏகப்பட்ட யாவாரம். பூர்விகம் நம்ம பக்கம்தேன். இங்கயே கல்யாண முடிச்சிக்கிட்டு சீனங்கோட்டைல இப்போ செல்வாக்கான ஆளு. அவருக்கு சாமானுலா வந்தா நாந்தே எறக்கி கொண்டுட்டுப்போயி குடுப்பன். நல்ல மனுஷன். நீங்க சொன்னிங்கன்னா தம்பிய அவர்ட்ட சேத்து உடுரன்," என்றான் சாமுனா.

நைனாம்ஷா பாரியைப் பார்த்தான். "என்ன தம்பி போறியா?" என்றான்.

புதிய இடத்தில் எப்படி சமாளிப்போம் என்று பயந்துகொண்டிருந்த பாரிக்கு இது சரியாகப்பட்டது. அங்கு ரயிலில் போவதும் ஆபத்தான விசயம்தான் என்று கேள்விப்பட்டிருக்கிறான். இடையில் போலீஸ்காரனிடம் சந்தேகக் கேசில் இந்தியாக்காரன் என்று தெரிந்தால், பிறகு ஜெயில்தான். அந்நிய நாட்டில் ஜெயில் வாழ்கையைப் பற்றிக் கள்ளத்தோணியில் போன பலரும் சொல்லக் கேட்டிருக்கிறான்.

"சரி காக்கா, நான் போறேன். எந்த வேலையானாலும் செய்வேன்," என்றான்.

நைனாம்ஷாவுக்கும் திருப்தியாக இருந்தது. "மாமாட்டே நா நல்லபடியா சேந்துட்டேனு சொல்லுங்க. சேந்த பொறவு கடுதாசு போடுறேனு சொல்லுங்க," என்றான் பாரி.

"சரி.. நல்லவிதமா இரு தம்பி," என்று சொல்லிவிட்டு அன்று இரவு நைனாம்ஷா விடைபெற்றுக்கொண்டார்.

அதுதான் பாரியும், நைனாம்ஷாவும் கடைசியாகச் சந்தித்துக்கொண்டது. பிறகு வாழ்நாளில் பாரி அவரைச் சந்திக்கவே இல்லை.

அன்று காலையே பாண்டியன் சாமுனாவுடன் எரிக்களம்பட்டிக்கு பஸ் ஏறப் போய்விட்டான்.

பாரிக்கு இரண்டு நாள் அந்தக் குடிசையிலேயே தங்கி இருக்க நேர்ந்தது. கையிலிருந்த இந்திய ரூபாய் 300உம் சாமுனாவிடம் கொடுத்தான். அவர் பதிலுக்கு 450 சிலோன் பணம் கொடுத்தார். "பத்திரமா வச்சிக்க தம்பி. ஹாஜியார் நல்ல மனுஷன். அவர் நோக்கம்போல நடந்தா நல்லபடி பாத்துக்குவாரு," என்றான்.

"அனேகமா நாளைக்கு அவர் சரக்கு வரும். ஆள் அனுப்புவார். அவங்களோட சீனங்கோட்டைக்கு அனுப்புறேன். வழியிலே எந்தப் பயமோ சோதனையோ இருக்காது. எல்லாத்துக்கு அல்லா போதுமானவன்."

சிறிது கருத்த தடித்த உருவத்துடன் கூடிய சாமுனாவின் மனைவி முகம் கலையாக புன்முறுவலுடன் சாந்தமாக இருந்தது.

"எ பொஞ்சாதி, உங்க ஊருபக்கம்தான். ஜொஹரா தம்பிக்குப் பசியாற குடு, என்ன இரிக்கிது?" என்று கேட்டுவிட்டு, "எனக்குக் கொஞ்சம் வெளியே வேலை இரிக்கிது. போயிட்டு வாறன்" என்று வெளியே குடையுடன் கிளம்பினார்.

சாமுனா மனைவி பன்னும் தொட்டுக்கொள்ள கருப்பட்டிப் பாகும் கொண்டு வந்தாள். சாப்பிடப் பாரிக்குப் பிடித்திருந்தது.

சாமுனா வெளியே போனதும், சாமுனாவின் மனைவி "ஊட்டுல யாருலாம் இருக்கிறாங்க", என்று குடும்ப நிலவரங்களைக் கேட்டாள். பாரி பதிலை எதிர்பார்க்காமல்

தன்னைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தாள்.

"நானும் உங்க ஊர்ப் பக்கம் திருபுலாகுடிதான். இவரு கல்யாண முடிச்சிக்கிட்டு வந்து பத்து வருசமாச்சு. நம்மூரு மாதிரி இல்லே. அங்கேயும் நாங்க வசதியா இல்ல. இங்கே இவர் எந்தக் குறையும் இல்லாமதே வச்சிக்கிறாக. ஆனாக்க எங்களுக்குப் பிள்ளைங்க இல்ல. அந்தக் கொரதான். உன்ன பாத்ததும் எ தம்பி யூசுப்பு ஞாபகம் வந்துருச்சி. ஒன்னைய மாதிரியே இருப்பான். இப்போ காலேஜிக்கி போறதா அத்தா எழுதி இருந்தாக," என்றாள்.

"நீ வெளியே போய்ராதே. காத்தோட்டமா ஜன்னல் பக்கத்துல உக்காந்துக்குட்டு பாட்டு கேளு. எனக்குக் குசுனில ஆக்குர வேல இரிக்கிது. அவ்வோ லொஹர் தொளுவீட்டு வருவாக," என்று சொல்லிவிட்டுக் குசுனிக்குள் நுழைந்தாள்.

ஜன்னல் போன்று அமைக்கப்பட்டிருந்த திறப்பின் முன் அங்கிருந்த நாற்காலியை எடுத்துப்போட்டுக்கொண்டு வெளியே பார்த்துக்கொண்டிருந்தான்.

வந்து இறங்கியதிலிருந்தே தொடர்ச்சியாகக் கடல் பாசி வாடையும் கருவாட்டு வாடையும் இருந்தது.

வெளியே சிலர் மீனைக் கருவாட்டுக்குக் காயப்போட்டுக்கொண்டிருந்தார்கள். அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். தான் ஒரு மீன்காரனின் மகன் என்றபோதிலும் அவன் தன்னை அதற்கு அன்னியமானவனாகவே கருதியிருந்தான். தான் படித்துவிட்டு நல்ல வேலைக்குப் போகவேண்டுமென்பதே அவன் ஆசையாக நோக்கமாக இருந்தது.

ஏதோ தனக்குத் தெரியாத விஷயத்தைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தான். சிறிய மீன்களைத் தென்னம் பாய்களை விரித்துக் காயப்போட்டுக்கொண்டிருந்தார்கள். பின்னால் வந்து அவனைக் கவனித்த சாமுனாவின் மனைவி, "என்ன தம்பி கருவாட்டு வாட எப்புடி இரிக்கிது? எங்களுக்குப் பழகிப்போய்ட்டு. உங்கட வாப்பா என்ன பண்றாங்கள்?" என்று கேட்டாள்.

"அவங்க மவுத்தானது இப்போதான் நாப்பது இன்னும் வரலே. அவரும் மீ புடிக்கத்தான் போவாரு. போனவருதான் மையத்தா வந்தாக . நா கடல் தொழிலுக்குப் போவ இஷ்டமில்லே.. உம்மாக்கும் வாப்பாக்கும் நான் படிச்சி நல்ல வேலக்கி போவணும்னு ஆசை. அல்லாட நாட்டம் வேறமாரி போச்சி" என்றான் பாரி.

"கவலைப்படாதே தம்பி, நலீம் ஹாஜியார் நல்ல மனுஷன். நீ நல்லபடி நடந்தியனா நல்லபடி வச்சிக்குவாரு" என்றாள்.

"லாத்தா இங்க மீனுக்கு உப்பு தடவாமே சும்மா காயவக்கிராங்களே?" என்றான்.

"இது சூட மீன் கருவாடு. உப்புலாம் தடவவேண்டியதில்லே. சூடமீன், தொண்டமீன் மாதிரி சின்னமீனுக்கு உப்பு தேவைப்படாது. பெரிய சீலா மீன், வாலமீனுக்குத்தான் உப்பு தடவிச் சாக்க சுத்தி மண்ணுக்குள்ளே பொதப்பாங்க. பொறவு வெயில்ல காயப்போடுவாங்க. மொல்லதீவுக்கு போயிருந்தம். அங்கே மாசி மீனைப் புகை போட்டுக் கருவாடாக்குறாங்க. வொவ்வொரு வக மீனுக்கும் கருவாடாக்குறது வேறமாரிதேன்" என்றாள் சாமுனாவின் மனைவி.

"இன்னக்கி மாட்டுக்கறிதேன் ஆக்குனே. நீ சாப்புடுவியல்ல?" என்றாள்.

"இதுவர சாப்புட்டதில்ல. அதுனால என்ன இங்க சிலோன்ல மாட்டுக்கறி சகஜமா சாப்புடுவாங்கன்னு கேள்விப்பட்டீக்கிறேன். சாப்புடுறேன்," என்றான்.

அந்தக் கடும் கோடையில் மீன்களைக் கருவாடுகளாய் மாற்றிக்கொண்டிருந்தது கடுமையான வெயில். ஜன்னலில் கடல்காற்று குளுமையை வீசிக்கொண்டிருந்ததால் வெப்பத்தின் தாக்கம் பாரிக்குத் தெரியவில்லை. அந்தக் கடல்காற்றும், இலங்கை வானொலியில் ஒலித்துக்கொண்டிருந்த ஏ.எம்.ராஜாவின் பாடலும், கடற்கரையின் மணமான மீன்வாடையுடன் வீசும் பாசியின் வாசனையும், இரவில் சரியாக உறங்காமல் மீதமிருந்த உறக்கமும் சுற்றிவர, ஜன்னலில் முகம்புதைத்து நாற்காலியிலேயே உறங்கிப்போனான் பாரி.

- தொடரும். ■

வீரசோழன் க.சோ.திருமாவளவன்



# ‘இரண்டு கவிதைகள் எழுதிவிட்டால் உடனே திரைப்படப் பாடலாசிரியராக ஆகிவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள்..’

## படைப்பாளர் வேல ராமமூர்த்தியுடனான நேர்காணல்

**குற்றப்பரம்பரை நாவல் எழுதும்போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது.. அதற்காக எவ்வகையான தரவுகளைத் தேடிச் சென்றீர்கள்? குற்றப்பரம்பரை நாவல் குறித்தும் அதன் அனுபவங்கள் பற்றியும் பகிருங்கள்..**

நான் எழுத ஆரம்பித்தபின் எந்தத் தரவுகளையும் தேடி அலையவில்லை. ஏற்கனவே நான் பார்த்த வாழ்க்கை, நான் பார்த்த மக்கள், எல்லாம் காதால் கேட்ட செய்தி. பேனா எடுத்து நோட்டில் எதையும் எழுதவில்லை.

குற்றப்பரம்பரை நாவலை ஜூனியர் விகடனில் எழுதத் துவங்கியதும் அது அனலாய் வந்தது. புதன்கிழமையும், சனிக்கிழமையும் புத்தகம் வர வேண்டும். நான் திங்கட்கிழமையே அனுப்பிவிடுவேன்.

திட்டமிட்டு எழுதி, ஐந்து ஆறு வருடங்கள் நாவல் எழுதி, கையில் வைத்துக்கொண்டு, அடித்துத் திருத்தி 1000 பக்கத்தை 500 ஆகக் குறைத்தோம் என்ற வேலையே இல்லை. குற்றப்பரம்பரை நாவலை எழுதினேன்.. ரசித்து ரசித்து எழுதினேன். திங்கட்கிழமை எழுதி செவ்வாய்க்கிழமை ஃபேக்ஸ் அனுப்புவேன். புதன்கிழமை ஜூனியர் விகடனில் இடம்பெற்று உலகமெங்கும் சென்றுவிடும்.

இனிமேல் இப்படி ஒரு நாவல் எழுத முடியுமா என்று எனக்கே சந்தேகமாக உள்ளது. அந்த நேரம் விமான நிலையத்துக்கு அருகில் உள்ள அஞ்சல் நிலையத்தில் சூப்ரடெண்டாகப் பணி செய்துகொண்டு இருந்தேன். பன்னிரெண்டு ஏக்கர் தோட்டத்துக்குள் அலுவலகம் மற்றும் தங்கும் விடுதி இருந்தது.

மூன்று கிலோமீட்டருக்கு அருகில் எனது வீடு இருந்தது. எனது மனைவி மக்கள் வீட்டில் இருப்பார்கள். நான் இங்கு உட்கார்ந்து எழுதிக்கொண்டிருப்பேன்.

இப்படித்தான் அந்த நாவல் உருவானது.

**ஒரு பீரியட் கதையை எழுதும்போது ஏற்படும் சிக்கல்கள் என்ன? அதை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்? உங்கள் நாவல்கள் திடகாத்திரமாக அந்தக் காலத்தை, வரலாற்றுத் தன்மையை, மண்ணின் மணத்தைக் கொஞ்சமும் சூடு குறையாமல் அப்படியே மக்களிடம் படைப்பாகத் தந்து அவர்களிடம் பெரும்பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றனவே.. அதற்குக் காரணமாக கருதுவது?**

நான் பிறந்த ஊர். எனது தந்தை வேயன்னா அவர்கள். அவர்களைப் பார்த்துப் பார்த்து நான் வளர்ந்தது. எனது அம்மா ஒவ்வொரு நாள் செய்தியையும் கதை கதையாய்ச் சொல்வார்கள். என் கிராமத்து மண் வேறொரு வாழ்வியலைக் கொண்டது. அதனாலே என் பிறந்த மண்ணை விட்டு வரவே இல்லை. பிறந்த மண்ணில் இல்லாத கதைகளே இல்லை. அதை நுட்பமாய்ப் பார்க்க வேண்டும். நான் நுட்பமாகப் பார்த்து அதைத் தோண்டி எடுத்து கதைக்களமாக்கினேன்.

மண் சார்ந்த வரலாறுகளைத் தேடிப் போகிறோம். மண் சார்ந்த வரலாறுகள் இல்லை. ஆனாலும் பெரியவர்கள் மற்றும் கிழவிகள் சொன்ன செய்திகள் இருந்தன. 80 வயது மனிதர்கள் கூடப் பழகியது, அவர்களிடமிருந்து கதைகளைப் பெற்றது, எனச் சிறு வயதில் நடந்தது. எழுத்தாளனாக ஆவோம் என்று நினைத்தா அந்தக் கதைகளைச் சிறுவயதிலே கேட்டறிந்தோம். அது நமது இயல்பிலே இருந்தது.

கதைகள் கேட்டுக்கொண்டே இருந்தோம். கதைகள் கேட்டுக்கொண்டே வளர்ந்தோம். எழுத்தாளனாக, கதைகள் எழுத வரும்போது அவையெல்லாம் கதைகளாக உருப்பெறுகின்றன. மனித வாழ்க்கைக்குக் கம்பீரம் அழகு. ஆணுக்கும் பெண்ணுக்கும் கம்பீரம் என்பதே பேரழகுதான். அந்தக் கம்பீரம் என் எழுத்தில் எப்போதும் இருக்கும். அந்தக் கம்பீரம் எழுத்திலும், நடிப்பிலும் இருப்பதற்குக் காரணம் என் ஐயா வேயன்னாதான்.

**சமீபத்தில் எழுதிக்கொண்டிருக்கக்கூடிய இளம் படைப்பாளர்கள் யார் யாரை வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள்?**

நாங்கள் பார்த்த சமூகம் இன்று இல்லை. நவீன வாழ்வு எல்லாவற்றையும் மாற்றிவிட்டது. இன்று எழுதுகிறவர்கள் உறவுகளைப் பற்றி மனித மாண்புகளைப் பற்றி யாரும் எழுதுவது இல்லை. அதற்கான முயற்சி ஏதும் இல்லை. இந்த வாழ்வில் ஒரு அர்ப்பணிப்பு உணர்வு இல்லாமல் போய்விட்டது.

எழுத்தில் அர்ப்பணிப்பு உணர்வு இருப்பதால்தான் தொடர்ந்து நாற்பது ஐம்பது வருடங்களாக எழுதிவரும் கோணங்கி, தமிழ்ச்செல்வன், ராமகிருஷ்ணன், ஜெயமோகன் இன்னும் எழுத்தாளனாகவே வாழ்கிறார்கள்.

எல்லோரின் இலக்கும் சினிமாவுக்குள் நுழைவதாகவே இருக்கிறது. இரண்டு கவிதைகள் எழுதிவிட்டால் உடனே திரைப்படப் பாடலாசிரியராக ஆகிவிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். எதிலும் கிடைக்காத பேரும் புகழும் சினிமாவில் கிடைக்கிறது என்பதால் அதற்கு ஆசைப்படாத ஆட்களே இல்லை. சமூகம் சார்ந்து அக்கறையான திடகாத்திரமான எழுத்துக்கள் வர வாய்ப்பில்லை.

இளம் படைப்பாளர்கள் எழுத்துக்கள் எதையும் நான் வாசிக்கவில்லை.

**சினிமாவிற்கு வந்த பிறகு உங்களது படைப்பு மனம் குறைந்துபோனதாக அல்லது பாதிப்புக்கு உள்ளானதாக நினைக்கிறீர்களா?**

படைப்பு மனம் ரத்தத்தோடு சம்மந்தப்பட்டது. அது அறுத்துப்போட்டாலும் போகாது. எல்லோருக்குமே அது நிகழ்வதுதான். நாம் பத்திரிக்கையில்தான் எழுத முடியுமே தவிர டிவிட்டரில் எழுத முடியாது. இன்று எழுதுவதற்கான களமே இல்லாமல் போய்விட்டது.

**வேல ராமமூர்த்தி என்றால் திரைக்கலைஞர் அல்லது எழுத்தாளர். இது**

**இரண்டில் எது உங்களுக்கு நிறைவைத் தருகிறது?**

என்னை சினிமாவிற்கு அழைத்து வந்தது என் எழுத்துதான். சினிமாவிற்கு வருவதற்கு முன் நான் நாடறிந்த எழுத்தாளன். சினிமாத்துறைக்கு வருவதற்கு முன் அத்தனை திரைக்கலைஞர்களோடும் நான் நட்பில் இருந்தவன். அப்போதெல்லாம் சினிமாவிற்கு வரணும் நடிக்கணும் என ஒருபோதும் நினைத்தது கூட கிடையாது. நான் எழுதிக்கொண்டிருந்தேன். எழுத்து என் வாழ்வாக இருந்தது.

இன்று சினிமாவிற்குள், புகழ் பெற்ற நடிகரின் பெயரன், பெயர்த்தி அல்லது புகழ் பெற்ற டைரக்டரின் மகன் அல்லது மகள் என்று வருபவர்களுக்கு அதுவே அவர்களுக்கு ஒரு கார்டாகி விடுகிறது. எழுதிவைத்த எழுத்துதான் எனக்குக் கார்டு.


நான் திரைத்துறைக்கு வரக் காரணமாக இருந்தது என் எழுத்து மட்டும்தான். திரைப்படத்தில் என் தோற்றத்தைப் பார்த்து, எங்கேயாவது மக்கள் கண்டுவிட்டால், நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எங்கள் மாமா போல் இருக்கிறீங்க, எனது பெரியப்பா மாதிரி இருக்கிறீர்கள் என்று மகிழ்ச்சி பொங்க அவர்கள் உறவுகளோடு நம்மை ஒற்றுமைப்படுத்திப் பார்க்கிறார்கள்.

என் தோற்றமும், என் உடல் அசைவும் என் பார்வையும் அவர்கள் முன்னோர்களைத் தொடர்புபடுத்துகின்றன. இதை நான் வேண்டுமென்றே செய்யவில்லை. இயல்பிலே அது அமைந்த ஒன்று. அது எனக்குள் இயற்கையாகவே இருக்கிறது.

**தற்போது நீங்கள் எழுதிக்கொண்டிருக்கும் படைப்பு பற்றிக் கூறுங்கள்?**

ஒரு பெரிய வரலாற்று நாவல் எழுத ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறேன். குற்றப்பரம்பரை தாண்டிய ஒரு அற்புதமான நாவல் கொண்டு வாங்க என டிஸ்கவரி புக் பேலஸ் முதலாளி திரு.வேடியப்பன் முதலான நண்பர்கள் கேட்டுக்கொண்டும் என்னைத் தூண்டிக்கொண்டும் இருக்கிறார்கள். நானும் அதற்கான தயாரிப்புகளில் இருக்கிறேன்.

ஒரு வார்த்தை கிடைக்க வேண்டும். அந்த வார்த்தைக்காகக் காத்திருக்கிறேன். அந்த வார்த்தை கிடைத்ததும் எழுத்து நிற்காது. தென்பகுதியில் எழுதப்படாத அறியப்படாத ஒரு வரலாறு இருக்கிறது. அதற்கான தயாரிப்புகளில் இருக்கிறேன். வரலாற்றுப் பதிவாக என்னால் பண்ண இயலாது. அந்த வரலாற்றை, வாழ்வைப் புனைவாக்கி அற்புதமான நாவலாகத் தரத் தயாராகிக்கொண்டிருக்கிறேன். குற்றப்பரம்பரை நாவலைப் படிப்பதற்கு எடுத்தால் அதை முழுவதும் படித்து முடிக்கும்வரை எப்படி கீழே வைப்பதில்லையோ அது போல் ஒரு நாவலை எழுத ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறேன். உடல்நிலை என எல்லா விசயங்களும் ஒத்துவர வேண்டும்.



**சமகாலத்தில் நிகழ்ந்து வரக்கூடிய சம்பவங்கள் பற்றி ஏதேனும் எழுதத் தோன்றியது உண்டா? அப்படி எழுதத் தூண்டிய சம்பவம் பற்றிக் கூறுங்கள்.**

சமகாலத்தில் நடக்கும் அரசியல் விசயங்களையும் தெருவில் நடக்கும் விசயங்களையும் பார்ப்பதற்குக் கோபம்தான் வருகிறது. ஆனால் ஆரம்ப காலத்தில் இந்தக் கோபம்தான் என்னை எழுதத் தூண்டியது.

எனது முதல் எழுத்தே எனது கோபத்தில் இருந்து தோன்றியது. இன்று இருக்கும் கோபம் என்னை எழுதத் தூண்டவில்லை. நாடே தேசமே திரண்டு திரும்பிப் பார்க்கும் வகையில் இருந்த பெரியார் பிறந்த இந்த மண் இன்று ஜாதி ஜாதி என்று அலைகிறது. சாதி இல்லை, காலம் மாறிடுச்சு மாறிடுச்சு என்று சொல்வதெல்லாம் பொய். அவைகளைச் சுட்டிக்காட்ட சுட்டிக்காட்ட இன்னும் கூடுதலாக வெறியர்களாக ஆகிவிடுகிறார்கள். சமூகம் அதல பாதாளத்துக்குள் போய்க்கொண்டிருக்கிறது. நாம் பார்த்த படித்த தலைவர்கள் வேறு.

நாங்கள் கதை எழுதும்போது எங்களுக்குக் காசு கிடையாது. ஆனால் நாங்கள் எதையும் எதிர்பார்க்காமலே இருந்தோம். இந்தியாடுடே மூலம் 1500ரூபாய் வந்தது. அது எனக்கு அப்போது பெரிய தொகை. அப்போது



நாங்கள் எழுதியது போன்று ஒரு காலம் இனி வாய்ப்பதில்லை. எதையும் எதிர்பார்க்காமல் எழுதிக்கொண்டே இருந்தோம். வருமானமே இல்லாத காலகட்டத்தில் மிகச்சிறந்த படைப்பை எங்களால் தர முடிந்தது. ஆனால் இன்று அப்படி எதுவும் எழுதத் தூண்டவில்லை.

**உங்களுடைய சினிமா பயணம் எவ்வாறு உள்ளது?**

மிகச் சிறப்பாக உள்ளது. நான் எதிர்பார்க்காத இடம் எனக்குக் கிடைத்திருக்கிறது.

ஒருவர் நாம் இப்படி ஆக வேண்டுமென்று நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் அதற்கான தடம் நமக்கு இலக்கற்றுப் போய்க்கொண்டே இருக்கும். நான் மத்திய அரசுப்பணியில் இருந்தேன். ஆனால் இன்று இந்த அற்புதமான கலை சார்ந்த ஒரு வாழ்க்கை எனக்குக் கிடைத்துள்ளது. நான் எதை நோக்கியும் போகவில்லை. ஆனால் இந்த வாழ்க்கை அது தானாகவே என் மடியில் வந்து விழுந்திருக்கிறது. எங்கு போனாலும் பெயரும் புகழும்தான். எந்தத் தேசம் போனாலும் நம்மை அடையாளம் கண்டுகொள்கிறார்கள். முக்கியமாக இலங்கைத் தேசத்து மக்கள் நம்மைக் கொண்டாடிவிடுகிறார்கள். இந்த வாழ்க்கை பெரும் கொடை. சாதி, சமயம், பாலினம் கடந்து என்னை ஒரு கலைஞனாக அன்பாகப் பார்க்கிறார்கள். திரைப்பயணம் அற்புதமாகச் செல்கிறது.

**உங்களுடைய இலக்கியத் தோழமைகள் யார் யாருடன் இப்போதும் இலக்கிய அரட்டைகள் நடத்துகிறீர்கள்? கடைசியாக நடந்த இலக்கிய அரட்டை யாருடன்.. எப்போது?**

சினிமாவிற்கு வந்தபின் அந்த அவகாசம் இல்லாமல் போய்விட்டது. நெல்லையில் சினிமா படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. ஒருநாள் எனக்குப் படப்பிடிப்பு இல்லை என்று சொன்னதும் நேராகக் காரில் கோவில்பட்டி சென்று எழுத்தாளர் கோணங்கியுடன் நாள் முழுவதும் இருந்துவிட்டு வந்தேன். அதென்னவோ தெரியவில்லை.. எழுத்தாளர் கோணங்கி அவர்களோடு இருப்பதற்கு எனக்கு எப்போதும் வாய்த்திருக்கிறது.

**உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் நீங்கள் நன்றி சொல்ல விரும்பினால் யாருக்குச் சொல்ல விரும்புவீர்கள்?**

நான் எழுதத் தொடங்கிய காலங்களில் எனது முகக்குறி அறிந்து என்னை எழுதுங்கள் எழுதுங்கள் என்று சொன்னது பெருநாழி திரு.மணி அவர்கள். அவர் என்னைவிட பன்னிரெண்டு வயது இளையவர். தொடக்கக் காலங்களில் என் கதையைப் படித்துவிட்டுப் பக்கத்தில் நெருங்க அச்சப்பட்டவர்.

நான் முதுகுளத்தூர், பெருநாழிக்குப் போஸ்ட் மாஸ்டராகப் போனதும் திரு. மணியோடு நெருங்கிப் பழக வாய்ப்பு கிடைத்தது. முதுகுளத்தூர் பெருநாழிப் பகுதிகளில் இடதுசாரி இயக்கத்தை இளைஞர்களின் துணையோடு வளர்த்தோம். அந்த நேரங்களில் பொருளாதார வசதி கிடையாது.

நான் பெருநாழியில் இருந்தால், மூன்று நேரமும் திரு.மணி வீட்டில்தான் உணவு எனக்கு எப்போதுமே. அவ்வளவு ஊக்கம் தந்தவன். எங்கும் அவனைப் பற்றிச் சொல்லியதில்லை. படைப்புக் குழுமம் சார்பாக வரும் தகவு இதழ் மூலம் இந்தப் பேட்டியின் வாயிலாக என் நண்பன் திரு.மணி, மனைவி சாந்தி மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு எனது நன்றியைப் பதிவு செய்கிறேன். ■

ஆழ்மனத் தேடல் – 20

# பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

• ஜின்னா அஸ்மி

ஏன் இப்படி திடுக்கிடுகிறாய்
என்றபடியே
வெளியே வந்தான் அவன்

என்னிடம் அனுமதி பெறாமல்
யாரும் என்னைத் தீண்டுவது
எனக்குப் பிடிக்காது
என்றேன்.

இயற்கை யாவும்
உன்னிடம் அனுமதி பெறாமல்தானே
தீண்டுகிறது உன்னை?

மழையோ வெயிலோ
தீண்ட வரும்போது
எனக்குப் பிடிக்கவில்லை எனில்
குடை பிடித்துக்கொள்வேன்
என்றேன்.

காற்றை
உனக்குப் பிடிக்கவில்லையெனில்
மூச்சைப் பிடித்துக்கொள்வாயா?
எனச் சிரித்தான்...

தீண்டாமையைக் கண்டுபிடித்த
மனித இனத்தின்
ஒரு துளிதானே நீயும்
அதனால்தான்
தீண்டலின் மகத்துவத்தை
அறியாமல் இருக்கிறாய் என
மீண்டும் சிரித்தான்.

தீண்டாமையின் தனித்துவமே
தொட்டாச்சிணுங்கிதானே.
இயற்கையிலும் இருக்கிறது
பாகுபாடு என்றேன்.

எடுத்த எடுப்பில்
எதிரில் இருப்பவரை
எதிரியாகப் பார்ப்பதால்தான்
எடுத்துக்காட்டு கூட
தவறாகச் சொல்கிறாய்.
யார் தொட்டாலும் சுருங்கும்
தொட்டாச்சிணுங்கி...
தீண்டாமையின் தனித்துவம் அல்ல
தீண்டலின் சமத்துவம் என்றான்.

மேலும் சொன்னான்
யாரோ இருவரின் தீண்டலில்
உருவான நீ
காற்று உன் நுரையீரலைத்
தீண்டாதபோது
உலகை விட்டுப் பிரிவாயே
அப்போது உணர்வாய்..
“தீண்டுதல் என்பது உயிர்
தீண்டாமை என்பது மரணம்”
என்று சொல்லிவிட்டு மறைந்தான்.

– அவன் இன்னும் சொல்வான் ■

படைப்பு

சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..